www.padippakam.com

1 - 15 பிப்ரவரி '92 ரூ.2.50

'தடா' கைது ஏன்?

# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு




படிப்பகம்

www.padippakam.com



# கருங்காலிகளாக, துரோகிகளாக போலிகளின் சங்கத் தலைமை

தமிழக தொலைத் தொடர்பு துறையில் செயல்பட்டு வரும் போலி கம்யூனிஸ்டுகள் தலைமையிலான என்.எப்.டி.ஈ. (NFTE) சங்கம், சுமார் 75,000 தற்காலிக ஊழியர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. இச்சங்கத்தின் கிளை ஒன்று திருச்சி மாவட்டம் அரியலூரில் தொலைபேசியகத்தில் செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்தின் திருச்சி மாவட்ட துணைத் தலைவர் பதவியிலிருக்கும் ஜி.வீராச்சாமி என்பவரின் தொழிலாளர் விரோத நடவடிக்கைகள் சங்கத் தலைமையின் துரோகத்திற்கு சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது.

தொலைத் தொடர்பு துறையின் லைன் இன்ஸ்பெக்டராக இருக்கும் ஜி.வீராச்சாமியிடம் துறையின் பராமரிப்பு கட்டுமானம் தொடர்பான ஆர்டர்களும், அதைச் செய்வதற்குரிய தற்காலிக ஊழியர்களும் தனிப் பொறுப்பில் தரப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது. மேடையிலே தொழிலாளி வர்க்கம் பற்றி வாய்கிழிய பேசும் ஜி.வீராச்சாமி, தனக்கு கீழ் வேலை செய்யும் தற்காலிக ஊழியர்களை அடிமை போல் நடத்துகிறார். எதிர்த்து கேள்வி கேட்கும் ஊழியர்களை அதிகாரியிடம் புகார் கொடுத்து பழிவாங்குவதில் கைதேர்ந்தவர். இவரும் ஒரு மேலதிகாரியும் (JEயும்) உட்கார்ந்திருந்தபொழுது, ஒரு ஊழியர் JE-யிடம் பேசியதற்காக 'என்னை கேட்காமல் நீ எப்படி JE-யிடம் பேசலாம்!' என மிரட்டினார் என்றார் பார்த்துக் கொள்ளுங்கள்; இவரது தொழிலாளி வர்க்க யோகியதையை!

கடந்த 16.11.91 அன்று, ஒரு ஊழியர் சங்கத்தின் நடவடிக்கையை விமர்சித்தார் என்பதற்காக அவர் வேலை செய்ய லாயக்கற்றவர்; தன்னை கொலை செய்ய முயல்கிறார் என அதிகாரியிடம் புகார் செய்து அவ்வூழியரின் வேலையைப் பறித்தார், வீராச்சாமி. இதை மற்ற தொழிலாளர்கள் தட்டிக் கேட்டும் ''நான் மஸ்டர் ரோல் (M.R.) ஆபீசர்; என் இஷ்டம்; என்ன வேண்டுமானாலும் செய்வேன்'' என திமிரோடு கூறினார். உடன் அனைத்து ஊழியர்களும் வீராச்சாமியின் நடவடிக்கையைக் கண்டித்தும், பாதிக்கப்பட்ட ஊழியருக்கு ஆதரவாகவும் வேலைக்குச் செல்லாமல் எதிர்ப்பு தெரிவித்தனர்: இரண்டு நாட்கள் துணைக் கோட்டத்தில் எந்த வேலையும் நடக்கவில்லை; ஆனால் வீராச்சாமி கருங்காலி ஒருவரை வைத்துக் கொண்டு வேலை செய்தார்.

சங்கத்தின் மாவட்ட செயலரிடம் வீராச்சாமியின் நடவடிக்கை தொடர்பாக ஊழியர்கள் முறையிட்டும் பயனில்லை. பிறகு அதிகாரியிடம் பேசி ஒரு உடன்பாட்டிற்கு வந்தனர். வேலை செய்யாமல் இருந்த நாட்களுக்குப் பதிலாக மற்ற நாட்களில் வேலை செய்து சரி செய்ய வேண்டும் என்றும், வீராச்சாமி தொடர்பாக இனி பிரச்சனை வந்தால் அவருக்குரிய வேலை ஆர்டர் நிறுத்தப்படும் என்று பேசி முடிவெடுத்து வேலைக்குச் சென்றனர். இதன்படி மற்றொரு வார விடுப்பில் வேலை செய்து அந்நாட்களை ஈடுகட்டினர்.

ஆனால், அம்மாதச் சம்பளம் வாங்கும் போது போராட்டம் நடத்தியதாக இரண்டு நாட்கள் வீராச்சாமியால் 'ஆப்செண்ட்' போடப்பட்டு சம்பளம் பிடித்தமாகியிருந்தது. உடனே கொதித்தெழுந்த தொழிலாளர்கள் சம்பளம் வாங்க மறுத்துவிட்டு வேலை நிறுத்தம் செய்தனர். இரண்டு நாட்களுக்கு மேலாகியும் இப்பிரச்சனையை அரியலூர் கிளைச் சங்கத் தலைவர்களும் சரி, மாவட்ட சங்கத் தலைவர்களும் சரி கண்டு கொள்ளவே இல்லை. மாறாக வீராச்சாமியை அம்பலப்படுத்தி, தமது போராட்டத்தின் நியாயத்தை எடுத்து விளக்கி ஊழியர்கள் வெளியிட்ட பிரசுரத்தை மட்டும் விமர்சித்தனர். துறையிலுள்ள லைன் இன்ஸ்பெக்டர்களும், லைன்மேன்களும் சேர்ந்து எந்த தற்காலிக ஊழியர்களுக்கும் வேலைத் தரக்கூடாது என முடிவெடுத்து சங்கத்தின் பொறுப்பாளர்களே சங்கத்தின் உறுப்பினர்களுக்கு எதிராக ஒன்று திரண்டனர். இச்செயலுக்கு மட்டும் மாவட்டச் சங்கம் உறுதுணையாக நின்றது.

அரியலூரில் தற்காலிக மஸ்தூர்களை ஒழித்துக் கட்ட வேலை செய்து கொண்டே, திருச்சியில் இந்த மஸ்தூர்களை நிரந்தரமாக்க கோரி நடந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டார், தொழிலாளர் விரோதி வீராச்சாமி.

இவர் திருச்சி போராட்டத்திற்கு கிளம்பிய வேளையில் ஒரு ஆப்ரேட்டர் (ஊழியர்), மஸ்தூர்களுக்கு ஆதரவாகப் பேசி நியாயம் கேட்டார். ஆனால் அவர் தன்னை அடிக்க வந்தார் என போலீசில் புகார் கொடுத்தார், வீராச்சாமி. உடன் இதற்கெதிராக மஸ்தூர்கள் திரண்டு எதிர்க்கவே புகாரை வாபஸ் வாங்கிக் கொண்டார். இதுவல்லாமல் வீராச்சாமியுடன் சமரசம் செய்து கொள்ள விரும்பாமல் 'ஆப்செண்ட்' போட்டது அநியாயம் என்றாலும் இரண்டு நாள் பிடிக்கப்பட்ட சம்பளத்தை வாங்கிக் கொண்டார்கள், மஸ்தூர்கள்.

இப்படியே இந்த மஸ்தூர்கள் நிமிர்ந்து நின்றால் தங்களுக்கு ஆபத்து என்றுணர்ந்து NFTE மாவட்ட சங்கமும், கிளை சங்கமும் மாற்று சங்கமான FNTO உடன் கூட்டு சேர்ந்து மஸ்தூர்களை அடக்கத் திட்டமிட்டனர். திருச்சி மாவட்ட செயலர் (NFTE) அரியலூர் வந்து SDOT முதல் அனைத்து MR ஆபிசர்களையும் அழைத்து தற்காலிக மஸ்தூர்களுக்கு வேலைத் தரக்கூடாது எனக் கட்டுப்படுத்தியதால் இத்துணைக் கோட்டத்தில் மஸ்தூர்கள் அனைவரும் வேலையிழந்து பாதிக்கப்பட்டனர். மறுபுறம் மஸ்தூர்களை அழைத்து ''சங்கத்தின் சட்ட விதிகளுக்கு கட்டுப்படுவேன்; இலாக்கா ஊழியரை எதிர்த்து போராட மாட்டேன்'' என எழுதி தந்தால் வேலை கிடைக்கும் என மிரட்டி நிர்பந்தப்படுத்தினார், மாவட்டச் செயலர். இவ்வாறு சங்கத்திலேயே தற்காலிக மஸ்தூர்கள், ரெகுலர் மஸ்தூர்கள், லைன்மேன்கள் என தனித்தனியாகப் பிரித்து மோதவிட்டு தன்னை நிலை நிறுத்திக் கொண்டதோடு FNTO சங்கத்துடன் கூட்டு சேர்ந்து நிர்வாகத்திற்கு காட்டிக் கொடுக்கும் வேலையையும் செய்தார். துரோகி வீராச்சாமியால் இவ்வளவு பிரச்சினையாகியும், வீராச்சாமியை விசாரணை செய்வதை விடுத்து, வீராச்சாமியை தாக்கியதாக கூறிய ஆப்ரேட்டரை மட்டும் விசாரிக்க மாவட்டச் செயலரும், மாநிலச் செயலரும் அக்கறை எடுத்துக் கொண்டார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

சங்கத் தலைமையின் துரோகம் இந்த அளவிற்கு தொடர்ந்தும் மஸ்தூர்கள் உறுதியுடன் போராடவே செய்தனர். ஆனால் தங்கள் போராட்டத்திற்கு ஏற்புடைய புரட்சிகரத் தலைமை, சித்தாந்த நோக்கு இல்லாததால் உறுதி குலைந்து 12-12-91 அன்றோடு போராட்டத்தை முடித்துக் கொண்டதோடு சங்கத் தலைமை கோரியபடி எழுதியும் கொடுத்துவிட்டு வேலைக்குச் சென்றுள்ளனர். சங்கத் தலைமை போலிக் கம்யூனிஸ்டு துரோகிகளின் கூடாரம் என்பதை புரிய வைத்ததோடு மஸ்தூர்களுக்கும் பிறசங்க உறுப்பினர்களுக்கும் ஒற்றுமையின் அவசியத்தையும், புரட்சிகர சித்தாந்தப் பார்வை -புரட்சிகரத் தலைமையின் அவசியத்தையும் இப்போராட்டம் படிப்பினையாகத் தந்துள்ளது.

**— தகவல்: புதிய ஜனநாயக வாசகர் வட்டம்; அரியலூர்.**

## வாசகர் கவனத்திற்கு

புதிய ஜனநாயகத்தின் அலுவலகமும் தொடர்பு முகவரியும் மாறியுள்ளது. இனி அனைத்து தொடர்புக்கும் கீழ்கண்ட முகவரியை மட்டுமே பயன்படுத்தவும்.

**இரா. சண்முகராசு,**
**ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்',**
**4, சாமியார் தோட்டம்,**
**ஆலந்தூர் சாலை,**
**சைதாப்பேட்டை,**
**சென்னை - 600 015.**

படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

ஏழாமாண்டு

4 - 6

1 - 15 பிப்ரவரி '91

உள்நாடு:
தனி இதழ்: ரூ.2.50
ஆண்டு சந்தா: ரூ.60

வெளிநாடுகள்:
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 15

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்து தொடர்புக்கும்

இரா.சண்முகராசு,
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்',
4, சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# வரலாறு திரும்புகிறது

இந்தியக் குறுநில மன்னர்கள் அண்டை அரசுகளுடன் நடத்திய ஆதிக்கப்போர், ஆடம்பர சுகபோக வாழ்வு ஆகியவற்றுக்காக ஐரோப்பிய வர்த்தகக் கம்பெனிகளிடம் இருந்து ஏராளமாகக் கடன் பெற்றார்கள்; அதற்கு ஈடாக இந்திய துறைமுக நகரங்களில் வர்த்தக உரிமையையும், பிறகு பல குறுநிலப் பகுதிகளில் கப்பம், வரி வசூலித்துக் கொள்ளும் உரிமையையும் அடகு வைத்தார்கள். அப்புறம் அந்த 'உரிமை'யைக் காத்துக்கொள்ள ஐரோப்பிய இராணுவங்கள் வந்திறங்கின, 'உரிமை'ப் போர்கள் நடந்தன. ஐரோப்பிய வர்த்தகக் கம்பெனிகள் வென்றன. இப்படித்தான் தொடங்கியது இந்தியா காலனியாதிக்கத்தின் கீழ் வந்த வரலாறு. இதோ! இப்போது வரலாறு திரும்புகிறது. அதே வழியில் நாடு மீண்டும் காலனியாதிக்கத்தின் கீழ் வரத் தொடங்கிவிட்டது. இப்படிச் சொல்வது மிகைப்படுத்துவதே அல்ல; இந்த நாட்டின் ஏற்றுமதி, இறக்குமதி சுங்கத்தீர்வை - வரியைக் கணிப்பது நிர்ணயிப்பது, வசூலிப்பது ஆகியவற்றுக்கான உரிமையை சுவிட்சர்லாந்தின், ''கண்காணிப்புப் பொது சமூகம்'' என்கிற நிறுவனத்திடம் குத்தகைக்கு விட்டுவிடுவது என்று இந்திய அரசு தீர்மானித்துப் பேரம் பேசி வருகிறது என்பதே இந்த நாடு மீண்டும் காலனியாதிக்கத்தின் கீழ் வருவதைக் காட்டும் சான்றாக உள்ளது. மேலும் இப்படிப்பட்ட பல நடவடிக்கைகளை இந்திய அரசு இப்போது துரிதப்படுத்தி வருகிறது.

மாறிவரும் உலகப் பொருளாதார ஒழுங்கு முறைக்கு ஏற்ப இந்தியப் பொருளாதாரத்தைச் சீர்திருத்துவது, தாராள மயமாக்குவது, அதன் கட்டுமானத்தை சீரமைப்பது ஆகிய பெயர்களில் இந்திய அரசு மேற்கொண்டு வரும் மாற்றங்கள் இந்த நாட்டின் உழைக்கும் மக்களுக்கு எதிரான கடுமையான பொருளாதாரத் தாக்குதல். உணவு தானியங்கள், பால் - எண்ணெய், மருந்து -துணிமணிகள் முதற்கொண்டு மின்சாரம் - போக்குவரத்துக் கட்டணங்கள் வரை சகலவற்றின் விலையும் சாதாரண மக்கள் உயிர் பிழைக்கவே முடியாத அளவு ஏறிவிடும்; லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழப்பார்கள்; நியாய விலைக் கடைகள் மூடப்படும்; பொதுத்துறைத் தொழில்கள் தனியாரிடம் ஒப்படைக்கப்படும்; உணவு, உரங்களுக்கான மானியங்கள் நிறுத்தப்படும்; ஏகாதிபத்தியக் கொள்ளை தடையின்றி அனுமதிக்கப்படும். இவை உலக வங்கி - ஐ.எம்.எஃப் ஆகியவற்றின் நிபந்தனைகளை ஏற்றுக் கடன் வாங்குவதால் தான் — இப்படிப் பல்வேறு அமைப்புகளும் பிரச்சாரம் செய்து வருகின்றன.

ஆனால் இவையெல்லாம் ஏதோ இந்த நாட்டின் பொருளாதார சுயாதிபத்தியத்தை மட்டுமே ஏகாதிபத்திய நிறுவனங்களுக்கு அடகு வைப்பது என்பதாக போலிக்கம்யூனிஸ்டுகள், போலிப் புரட்சியாளர்கள் உட்பட பலரும் சித்தரிக்கிறார்கள். விவகாரங்களின் ஒரு பகுதியை மட்டுமே இவர்கள் சொல்லுகிறார்கள். உண்மையில் பொருளாதாரத் துறையில் மட்டுமல்லாது அரசியல், இராணுவ, கல்வி - கலாச்சாரம் மற்றும் அரசு தந்திரம் ஆகிய சகல துறைகளிலும் இந்த நாட்டின் சுயாதிபத்தியம் மறுஅடகு வைக்கப்பட்டிருக்கிறது.

இந்திய ஆளும் வர்க்க ஊதுகுழல்களான 'டைம்ஸ் ஆஃப் இந்தியா', 'இந்தியன் எக்ஸ்பிரஸ்', 'இந்து' போன்ற மிகப்பெரிய பத்திரிக்கைகளும், ''சொந்த நாட்டு ஆட்சியா? வரி - வர்த்தகப் பொது ஒப்பந்த நிறுவன ஆட்சியா?'' என்றும், ''வரி - வர்த்தகப் பொது நிறுவனத்தின் நிபந்தனைகள் சுயாதிபத்திய உரிமையை மீறுகின்றன'', என்றும் ''வரி - வர்த்தகப் பொது நிறுவனம் தேசங்கடந்த அதிகாரம் பெறுகிறது'' என்றும் எழுதுகின்றன. ஆளும் வர்க்கம் மற்றும் அதன் அரசியல் பிரதிநிதிகளின் எல்லாப் பிரிவினரையும் நம்பிக்கையில் எடுத்துக் கொண்டு ஒப்பந்தங்களின் ரகசிய சரத்துக்களைப் பகிர்ந்துகொள்வதில்லை; அவர்களின் கருத்துக்களை மதிப்பதில்லை; நாடாளுமன்றம் உட்பட அவர்களின் விவாத அரங்குகளில் விவாதிப்பதில்லை; இரகசிய - சதி நடவடிக்கைகளாகவே ஒப்பந்தங்கள் போடப்படுகின்றன; எல்லாவற்றுக்கும் மேலாக அவர்கள் தமது ஏகாதிபத்திய எஜமானர்களுடன் பேரம் பேசுவதற்கான வாய்ப்புகள் கூட இல்லாமல் போய்விடுகின்றன என்று அப்பத்திரிக்கைகள் ஓலமிடுகின்றன.

உதாராணமாக, ● ஒவ்வொரு அம்சத்திலும் அந்நிய முதலீட்டாளர்கள் இந்தியக் கம்பெனிகளுக்குச் சமமான உரிமைகள் பெற வேண்டும் ● அந்நியப் பங்கு முதலீட்டிற்கு வரம்பு கூடாது ● முதலீட்டிற்கான துறைகள் எதற்கும் தடை இருக்கக் கூடாது ● உள்நாட்டில் கிடைக்கும் பொருட்களைத்தான் பயன்படுத்த வேண்டும் என்ற நிபந்தனை கூடாது ● கச்சாப் பொருட்கள், உதிரி உறுப்புகள், பகுதி தயார்நிலை உறுப்புகள் இறக்குமதி செய்து கொள்வதற்கு முழு உரிமை ● இறக்குமதி மூலதனத்துக்கு ஈடாக ஏற்றுமதி செய்யக் கோரக்கூடாது ● வரி - வர்த்தகப் பொது நிறுவன விதிகளுக்கு எதிராக உள்ள எல்லாம் இரண்டு ஆண்டுகளில் நீக்கப்பட வேண்டும் ● உணவு தானியங்களைச் சேமித்து வைத்துக்கொள்ளக் கூடாது. மானியங்கள் எல்லாம் நிறுத்தப்பட வேண்டும் ● வடிவமைப்புக்கான அங்கீகார உரிமை பெறுவதற்கும், காப்பதற்கும் தற்போதுள்ள சட்டங்களை மாற்றி விடவேண்டும் — என்பன இந்தியப் பொருளாதாரம், தொழில், விவசாயம், வர்த்தகம், தொழில் நுட்ப உரிமை ஆகியவற்றில் உள்ள எல்லா அதிகாரத்தையும் தாரைவார்ப்பதாகும்.

இவற்றோடு அணு ஆயுதத் தயாரிப்புத் தடை ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவது, அமெரிக்க இராணுவத்துடன் கூட்டு, யூத - ஜியோனிச வெறியை இனவெறியெனக் கருதும் ஐ.நா. தீர்மானத்தை நீக்குவதற்கும், இஸ்ரேலுடன், தென் ஆஃப்பிரிக்காவுடன் முழு தூதரக உறவு ஏற்படவும், லிபியா மீது அமெரிக்க இராணுவ தாக்குதலுக்கு வழிவகுக்கும் வகையில் அதை பயங்கரவாத நாடாக அறிவிப்பதற்கும் இந்தியா நிர்பந்திக்கப்பட்டு ஏற்றுள்ளது. வரிவிதிப்பது, வசூலிப்பது, சட்டம் இயற்றுவது முதற்கொண்டு வெளிவிவகாரக் கொள்கைகள் வரை அனைத்துமே உலக வங்கி, ஐ.எம்.எஃப், வரி - வர்த்தகப் பொது ஒப்பந்த நிறுவனம் ஆகிய ஏகாதிபத்திய நிறுவனங்களாலேயே தீர்மானிக்கப்படுகின்றன. எனவேதான் இந்த நாடு மீண்டு காலனியாக்கப்படுவது தொடங்கியிருக்கிறது என்கிறோம்.

www.padippakam.com

# காவிரி நீர் பிரச்சினை: தமிழக உரிமை பலி

## பார்ப்பன - பாசிச துரோகம் 'தேசிய வாதி'களின் ஓரவஞ்சனை

காவிரி ஆற்று நீரில் தமிழகத்தின் உரிமையைத் தாரை வார்த்து விடுவதற்கான தயாரிப்புகளில் பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது.

17 ஆண்டுகள் நடந்த பேச்சு வார்த்தைகள் - இழுத்தடிப்புகள் பயனற்றுப் போன நிலையில் நடுவர் மன்றம், உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளால் கிடைத்துள்ள இடைக்கால நிவாரணத்தையும் தமிழகம் பறிகொடுத்து விடும் நிலை ஏற்பட்டுள்ளது.

கர்நாடகாவில் வாழும் தமிழர்களுக்கு எதிரான இனவெறி அராஜகம் மற்றும் அரசியல் உருட்டல் - மிரட்டல் (பிளாக் மெயில்) ஆகியவை மூலம் நடுவர் மன்ற, உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளை அமுல் நடத்துவதைத் தடுத்து நிறுத்துவதிலும் மீண்டும் பயனற்ற பேச்சுவார்த்தை - இழுத்தடிப்புக்கே தள்ளுவதிலும் பங்காரப்பா தலைமையிலான கர்நாடக அரசு வெற்றிபெற்று விட்டதாகவும் தெரிகிறது.

கொலை - கொள்ளை - கற்பழிப்பு - சூறையாடல் ஆகிய கன்னட இனவெறித் தாக்குதலுக்குப் பல ஆயிரம் தமிழர்கள் இலக்கானதோடு, ஒரு லட்சத்துக்கும் மேலான தமிழர்கள் அகதிகளாக விரட்டப்பட்டுள்ளனர். இவ்வளவு இழப்போடு, நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பில் கிடைத்துள்ள 205 டி.எம்.சி. நீருக்கும் குறைவான அளவை ஏற்கவும் மீண்டும் பேச்சுவார்த்தைக்கு இணங்கவும் மத்திய அரசு தமிழகத்தை நிர்ப்பந்திக்கிறது; தமிழ் நாட்டிற்கு வேறு வழியேதும் கிடையாது என்கிற பிரச்சாரமும் துவங்கி விட்டது. நடுவர்மன்ற இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்தாது இழுத்தடித்து, உச்ச நீதிமன்றத்து ஆலோசனைக்கு அனுப்பியபோது பெரும் கூச்சல் போட்டு, காவிரி விவகாரத்தில் தமிழக உரிமைக்காகத் தியாக நாடகமாடி பதவி துறந்த வாழப்பாடி கூட இப்போது வாய் பொத்திக் கொண்டார். அவரோடு சேர்ந்து பதவி விலகல் நாடகமாடிய மத்திய மந்திரி ரங்கராஜன் குமாரமங்கலம் கூட பேச்சுவார்த்தைதான் ஒரே வழி, அதன் மூலம் தீர்வு காண்போம் என்கிறார்.

ஜனவரி 2-ந் தேதி அமைதியாகவும் வெற்றிகரமாகவும் நடந்த தமிழகப் பொதுக் கதவடைப்புக்குப் பிறகு காவிரி நீர்ப் பிரச்சினையை 'சகல' தரப்பு அரசியல் கட்சிகளும் கிடப்பில் போட்டுவிட்டன. இசை நடன விருந்து, பொங்கல் இலவச விழா என்றும் சுப்புலட்சுமி - ஜெகதீசன் 'தடா' கைது என்றும் திசை திருப்பும் வேலையில் பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் இறங்கிவிட்டது. அதற்கும் காங்கிரசுக்கும் இடையிலான தேனிலவு நீடிக்கவும், காங்கிரசு உட்பட 'தேசிய வாதி'களின் ஒருமைப்பாடு வேடம் மேலும் அம்பலப்படாது காக்கவும் காவிரி நீர் பிரச்சினையில் தமிழக உரிமையைப் பலியிடுவதென ஜெயா கும்பல் முடிவு செய்துவிட்டதாகத் தெரிகிறது.

மத்திய அரசின் நிர்பந்தம் - சமரசத்துக்கு ஒப்புக் கொண்டு பேச்சுவார்த்தைக்குப் போவது என்பது தமிழகத்துக்குத்தான் இழப்பு; இதனால் தமிழகம் எதையுமே சாதிக்க முடியாது. ஆனால் கர்நாடகத்துக்கோ பெரும் வெற்றியாகி விடும். காவிரி நீர் உரிமையைத் தமிழகம் இழப்பது மட்டுமல்ல; கர்நாடக அரசே நடத்திய இன வெறியாட்டத்திற்குப் பல தமிழர்கள் பலியாகி, அகதிகளாகி, சொத்துக்களை இழந்து, பல தமிழ்ப் பெண்கள் கற்பிழந்து இத்தனையோடு மேலும் 20 லட்சம் கர்நாடகத் தமிழர்களைப் பணயக் கைதிகளாக வைத்து மிரட்டுவதற்குப் பணிந்து போவதுதான்! இன வெறி அராஜகத்தினால் எதையும் சாதித்து விட முடியும் என்கிற அடாவடித் தனத்தை அங்கீகரிப்பதுதான்!

பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் கர்நாடகாவுக்கும் மத்திய அரசுக்கும் உண்மையான அக்கறை இருந்தால் கடந்த 17 ஆண்டுகளில் 27 தடவை நடந்த பேச்சு வார்த்தைகளின் போதே தீர்வு கண்டிருக்கலாமே! அவை பலனற்றுப் போனது மட்டுமல்ல; ஒவ்வொரு ஆண்டும் காவிரியில் நீரை எதிர்பார்த்து தமிழகத்து விவசாயிகள் ஏங்கி வயல்கள் வறண்டு கிடந்தன. முப்போகமும் விளைந்த பூமியில் ஒரு போகமே பயிரிட்டு, உள்ளதையும் நிலத்தில் போட்டு, பயிர் முற்றும்போது நீர் பற்றாக்குறையால் தவித்து, ஆண்டுதோறும் கர்நாடகாவுக்குக் காவடி எடுத்தது தமிழக அரசு. சிமெண்டுக்கும் மின்சாரத்துக்கும் பேரம் பேசி, பிச்சை போடுவதைப் போல கடைசி நேரத்திலே கொஞ்சம் நீர் கொடுத்தார்கள். இந்த நிலையை நீடிக்க வைக்கவே கர்நாடகா அரசு பேச்சுவார்த்தைக்கு வரும்படி வருந்தி வருந்தி அழைக்கிறது.

17 ஆண்டுகள் பலனற்ற பேச்சுவார்த்தைகள் - இழுத்தடிப்புகளுக்குப் பிறகு இப்போதுதான் நடுவர் மன்ற - உச்ச நீதிமன்ற தீர்ப்புகள் மூலம் ஒரு இடைக்கால சாதக நிலைமை தமிழ்நாட்டிற்குக் கிட்டியிருக்கிறது. அதையும் தட்டிப்பறிப்பதற்கான முயற்சிகள் துரோகிகளாலும் எதிரிகளாலும் தீவிரமாக நடக்கின்றன.

1983 ஜூலை ஈழ இனப் படுகொலையைத் தொடர்ந்து தமிழ் நாட்டில் நிலவிய ஈழ ஆதரவு எழுச்சி நிலையைப் பார்ப்பன ஏடுகளும் தலைவர்களும் தொடர்ச்சியான அவதூறு, பொய்ப் பிரச்சாரத்தினால் ஈழ எதிர்ப்பு - வெறுப்பு அலையாக மாற்றினர். அதே மாதிரியான வேலையை அவர்கள் இப்போது துவங்கி விட்டனர். காவிரி ஆற்று நீரில் தமிழக உரிமையைக் கோரியும் கர்நாடகாவில் தமிழர்கள் தாக்கப்படுவதையும் எதிர்த்தும் இங்கே ஏற்பட்ட எழுச்சியைத் தகர்ப்பதற்காக தமிழ் மக்கள் அனைவருக்கும் எதிரான - பொய்ப் பிரச்சாரத்தை பார்ப்பன ஏடுகளும் தலைவர்களும் வெகு விரைவாக நடத்துகின்றனர்.

ஒருமைப்பாடு வேடம் கலைந்தது; சொந்த நாட்டிலேயே அகதிகளாக கர்நாடகத் தமிழர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழர்களுக்கு எதிராக போலிகள் அவதூறு!

**(காவிரி பிரச்சினை குறித்து 'மார்க்சிஸ்டு'கள் வெளியிட்டுள்ள பிரசுரத்தின் ஒரு பகுதி)**

*கர்நாடகத்தில் நடக்கும் கலவரங்களை பத்திரிகைகள் ஒருபக்கம் தூபம் போடுகின்றன. தங்களது பத்திரிக்கை விற்பனையாக வேண்டும் என்பதற்காக பீதியை கிளப்பிவிடும் வகையில் செய்திகளை வெளியிடுகிறார்கள்.*

*சென்னையில் தி.மு.க. நடத்திய ஊர்வலத்தில் கன்னட நாய் என்றெல்லாம் கோஷம் கொடுக்கப்பட்டுள்ளது.*

*பேச்சுவார்த்தை கூடாது என்ற நிலையை தி.மு.க. தலைவர் கருணாநிதி அவர்கள் எடுத்துள்ளார். பாட்டாளி மக்கள் கட்சியும் பேச்சு வார்த்தையை எதிர்க்கிறது. சில இடங்களில் கன்னட சிறுபான்மையோர் தாக்கப்பட்டுள்ளனர்.*

*இவர்களுடன் போட்டி போடுவதற்கோ என்னவோ ஜெயலலிதாவும் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ள மாட்டேன் என்ற நிலையை எடுத்திருக்கிறார்.*

*பேச்சுவார்த்தைக்கு எதிரான நிலையை மார்க்சிஸ்ட் கட்சி ஏற்கவில்லை. பேச்சு வார்த்தையை மறுப்பதால் பதட்ட நிலைமை மேலும் நீடிக்கச் செய்யும் என்று நாம் கருதுகிறோம். இது சிறுபான்மை மக்களுக்கு மேலும் அபாயத்தை ஏற்படுத்தும் என்று கூறுகிறோம்.*

*இரு மாநிலங்களிலும் படுமோசமான நிலைமை ஏற்படும். அத்துடன் இடைக்காலத் தீர்ப்பும் அமலாகாது.*

*இடைக்காலத் தீர்ப்பை அமுல்படுத்துவதற்கான பேச்சுவார்த்தையை விரைவில் துவக்க வேண்டும்.*

*தமிழகத்தில் கன்னட மொழி சிறுபான்மையோரை பாதுகாக்க மாநில அரசும், அரசியல் கட்சிகளும் முன்வரவேண்டும்.*

**தோழமையுள்ள**

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)**

**சென்னை மாவட்டக் குழு**

---

வழக்கம்போல பார்ப்பன - பாசிச கும்பலின் அரசியல், சித்தாந்தத் தலைமைக் குரு 'துக்ளக் 'சோ'தான் இதற்கும் அடியெடுத்துக் கொடுத்துள்ளார். ஜெயலலிதாவின் அரசியல் ஆலோசகராக இருந்து கொண்டு, அவரோடு முரண்படுவதாகவும் காட்டிக் கொண்டு வரும் 'சோ' "ஜெயா, கருணாநிதி ஆகியோரின் அணுகுமுறை, மிரட்டும் பாணிதான் கர்நாடக அரசியல்வாதிகளுக்கு வெறுப்பை ஏற்படுத்தி விட்டது; இடைக்காலத் தீர்ப்பை வரவேற்றதும், அரசிதழில் வெளியிடும்படியும் செய்திருக்கக் கூடாது; ரகசியமாக - ராஜதந்திரமாகச் சாதித்திருக்க வேண்டும்' என்று பிரச்சாரம் செய்கிறார்.

'ஜனவரி 2ந் தேதி பந்த்' நடத்தியிருக்கக் கூடாதென 'கல்கி' உட்பட பார்ப்பன ஏடுகள் எழுதுகின்றன.

ஜனவரி 2-ந் தேதி நடந்த தமிழகக் கடையடைப்புப் பற்றி ''கர்நாடகாவில் தமிழர்கள் தாக்கப்படுவதாக சொல்லப்படுவதை எதிர்த்த பந்த்'' என்று அரசின் பார்ப்பன ரேடியோவும் டி.வி.யும் செய்திகள் வாசிக்கின்றன. அதாவது உண்மையில் கர்நாடகா தமிழர்கள் தாக்கப்படவில்லை; அப்படித் தாக்கப்படுவதாகச் சொல்லிக் கொண்டு ''பந்த்'' நடத்துகிறார்கள் என்கிற தோரணையில் பிரச்சாரம் செய்கிறது.

கர்நாடகாவில் தமிழர்கள் தாக்கப்படுவதை கன்னடத் தலைவர்கள் கண்டித்தார்கள். ஆனால் தமிழ் நாட்டில் கன்னடர்கள் தாக்கப்படுவதைத் தமிழகத் தலைவர்கள் கண்டிக்கவில்லை எனப் பார்ப்பன ஏடுகள் எழுதுகின்றன. குறிப்பாக முற்போக்கு வேடங்கட்டிக் கொண்டு திரியும் டி.என். கோபாலன் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேடு மூலமாக இத்தகைய தமிழர் எதிர்ப்பு வெறுப்பு பிரச்சாரத்தை முன்னின்று நடத்துகிறார். தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்பட்டதாகவும், தமிழர்கள் கொல்லப்பட்டதாகவும் சொல்வது பொய் - புரளி என்று பார்ப்பன ஏடுகள் எழுதுகின்றன.

அதேசமயம் தமிழ் நாட்டில் சிற்சில இடங்களில் நடந்த சம்பவங்களை ஊதிப் பெருக்கி பெருமளவில் கன்னடர்கள் தாக்கப்பட்டதாக சித்தரிக்கின்றன. தி.மு.க. ஊர்வலத்தின் போது கன்னட நாய் என பங்காரப்பாவும் நடிகர் ராஜ்குமாரும் ஏசப்பட்டனர்; இரண்டு உடுப்பி ஓட்டல்கள் மீது கல் வீசப்பட்டன. ராஜ்குமார் வீட்டின் மீது சில கற்கள் வீசப்பட்டன. ஒருசில கர்நாடக வாகனங்கள் தர்மபுரியில் கொளுத்தப்பட்டன. பல ஆண்டுகளாகக் கூடலூரில் நடக்கும் மலையாளி, கன்னடர், தமிழர் மோதல்கள் மீண்டும் வெடிக்குமெனப் பீதியுற்று 320 கன்னடர்கள் மைசூருக்கு ஓடிவிட்டனர்.

இதையும் நூற்றுக்கணக்கான கர்நாடகா தமிழர்கள் கொல்லப்பட்டதும், பல தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்பட்டதும், நூற்றுக் கணக்கான வாகனங்களும் கடைகளும், ஒரு பெரிய துணி ஆலை - ஒரு பெரிய சர்க்கரை ஆலை உட்பட தமிழர்களின் ஆலைகளும், பண்ணை வீடுகளும், பயிர்களும் கொளுத்தப்பட்டதும், நூறு கோடி ரூபாய் மதிப்புடைய சொத்துக்கள் கொள்ளையிடப்பட்டதும் ஒரு லட்சத்துக்கும் மேலானவர்கள் அகதிகளாகி இருப்பதும் ஒரே சமமானவைதான் என்று பார்ப்பன ஏடுகள் எழுதுகின்றன.

தமிழகத்தில் கன்னடர்கள் மீது நடந்த ஒரு சில தாக்குதல்களும் கூட கர்நாடகாவில் தமிழர்கள் மீது நடந்த இனவெறி அராஜகத்திற்கு முற்றிலும் மாறுபட்டவை. இங்கு நடந்தவை எதிர் விளைவுதான்; தமிழர்கள் தாக்கப்படுவது கேட்டு ஆத்திரமுற்றுத் தன்னெழுச்சியாக ஏதோ சில தனி நபர்கள் நடத்தியதுதான். ஆனால் கர்நாடகாவில் அரசும் சர்வ கட்சிகளும் துவக்கி, அமைச்சர்களே தலைமையேற்று, அமைப்பு ரீதியில் திரட்டப்பட்டு, திட்டமிட்டு நடத்தப்பட்டதாகும். இரண்டையும் ஒரேதன்மை உடையதாகச் சித்தரிப்பதே தமிழர்களுக்கு எதிரானதும் அவதூறும் பொய்யுமாகும். இதே வேலையை ''மார்க்சிய''ப் போலிகளும் செய்துள்ளனர் (பார்க்க: பெட்டிச் செய்தி)

**கன்னட இனவெறியர்களின் அட்டூழியம்; பாதிக்கப்பட்ட தமிழர்கள்.**



கர்நாடகாவில் தமிழர்கள் தாக்கப்படுவதற்குக் காவிரி நீர்ப் பிரச்சினைகூட முக்கிய காரணமல்ல; தமிழர்களுக்கு அங்குள்ள பொருளாதார ஆதிக்கமும், தமிழ்ப் பண்பாடு - மொழி ஆகியவற்றின் மீது தமிழர்கள் கொண்டுள்ள வெறி ஆகியவைதான் காரணம் என்று பார்ப்பனப் பத்திரிக்கையாளர்கள் எழுதுகின்றனர்.

தமிழ் நாட்டில் வாழும் கன்னடர்கள் பங்காரப்பாவையோ, ஹெக்டேவையோ தலைவர்களாகக் கருதவில்லை; ஆனால் கர்நாடகாவில் வாழும் தமிழர்கள் தமிழ் நாட்டுத் தலைவர்கள் மீது மோகம் கொண்டுள்ளார்கள்; கர்நாடகாவில் வாழ்ந்தும் அம்மாநிலத் தலைவர்கள் மீதும் மாநிலத்தின் மீதும் பற்று வைக்கவில்லை என்று துக்ளக் 'சோ', தமிழர்கள் இனவெறி கொண்டிருப்பதாக அவதூறு செய்கிறார்.

மலையாளிகளும் கன்னடர்களும் தெலுங்கர்களும் கூட தமிழ்நாட்டில் முதல்வராகவும், மந்திரிகளாகவும் ஆக முடிகிறது; இங்கிலாந்திலும், ஆஸ்திரேலியாவிலும் குடியேறிய பிறகும் இந்தியப் பார்ப்பனர்கள் இந்தியக் 'கிரிக்கெட்' அணிக்குக் கொடி அசைத்து ஆர்ப்பரித்து ஆதரவு செலுத்துகிறார்கள்; அமெரிக்கப் பிட்ஸ்பர்க்கில் போய் முருகனுக்கும் வெங்கடாஜலபதிகளுக்கும் கோவில் கட்டியும், டெல்லியிலும் பம்பாயிலும் தமிழ்ச் சங்கம் வைத்தும் தங்கள் சாதிக்காரர்களைக் கூட்டிக் கொண்டு போய் கூத்தடிக்கிறார்கள் தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள்.

இதெல்லாம் பார்ப்பனரது அரசியல் சித்தாந்தத் தலைமைக் குரு 'சோ'வுக்குச் சரியானதாகத் தெரிகிறது; ஆனால் தமிழன் இன்னொரு தமிழனைத் தலைவனாக ஏற்ப

படிப்பகம்

www.padippakam.com

தும், தனது மொழி, பண்பாடு மீது பற்று வைப்பது மட்டும் கூடாது - வெறி என்கி றார். குடியேற்ற நாடுகளது மொழி - பண்பா டோடு ஒன்று கலப்பது என்பது பன்னெடுங் காலம் பிடிக்கும் பரிணாம வளர்ச்சியினா லேதான் நடக்கக் கூடியது. அதுவரை ஒரு குறிப்பிட்ட இடைக்காலத்துக்கு மொழி, இன, மதச் சிறுபான்மையினரிடையே பாது காப்புக் கருதி ஒரு தனிச்சிறப்பான குறுகிய மனப்பான்மை நிலவுவது தவிர்க்க முடி யாது; பெரும்பான்மையினர் தரும் நம் பிக்கை, பாதுகாப்பு, ஜனநாயக அணுகு முறையின் மூலமே அதைப் போக்கிட முடி யும்; இன, மொழி, மத வெறி அராஜகத்தி னால் அதை மாற்றிவிட முடியாது. ஆனால், ஆர்.எஸ்.எஸ். மதவெறிக் கும்பலின் கரு வாகிய பார்ப்பன - பாசிஸ்டுகள் இதை ஏற்க மாட்டார்கள் என்பது அவர்களது தமிழர் எதிர்ப்பு - வெறுப்பில் தெரிகிறது.

'அகில இந்திய தேசியம்' பேசும் கட்சி கள் மாநிலத்துக்கு மாநிலம் சந்தர்ப்பவாத மாக நடந்து கொள்கின்றன. அதே சமயம் அவற்றின் மத்தியத் தலைமைகளோ ஒரு மைப்பாடு காப்பது என்கிற பெயரில் பங்கா ரப்பாவின் குரலையே எதிரொலிக்கின்றன. இரு மாநில மக்களிடையே பகைமை ஏற் பட்டு, தேசிய ஒருமைப்பாட்டிற்குக் குந்த கம் விளைவதைத் தவிர்க்க வேண்டுமா னால் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண்பதே சரியானது என்கின்றன. இதுவே தான் பங்காரப்பாவின் கோரிக்கை. தேசிய ஒருமைப்பாட்டில் அக்கறை இருந்தால் 'தேசிய வாதிகளா'ன் காங்கிரசு ஆளும் கர் நாடக அரசு நடுவர் மன்றத் தீர்ப்பை அமுல் படுத்துவதுதானே!

இரண்டு தரப்புமே கட்டுப்பாடாக நடந்து கொள்ள வேண்டும்; வன்முறை யைக் கைவிட வேண்டும் என்று 'அகில இந்திய தேசிய'வாதிகள் உபதேசிக்கிறார் கள். உண்மையில் இனவெறி அராஜகத் துக்கு இலக்காகி இருப்பவர்கள் தமிழர்கள் தாம், கன்னடர்கள் அல்ல; கன்னட இனவெ றியர்கள் தாம், அங்குள்ள அரசும் சர்வ கட்சி யினரும் தாம் முன்னின்று சமூக விரோதிக ளைத் திரட்டி அராஜகம் புரிந்துள்ளனர். இவ் வளவு அக்கிரமங்கள் - அநீதிகளுக்குக் கார ணமானவர்களை எதிர்க்காத இந்த 'அகில இந்திய தேசியவாதிகளு'க்கு சமரசம் - நடு நிலை - பஞ்சாயத்துப் பேசவோ தமிழர்க ளுக்கு உபதேசம் செய்யவோ என்ன அரு கதை இருக்கிறது?

இப்போதுள்ள விவகாரம், காவிரியில் உபரி நீர் வந்து அதை எப்படிப் பகிர்ந்து கொள்வது என்பதல்ல; பற்றாக்குறையை எப்படிப் பகிர்ந்து கொள்வது என்பதுதான். அதாவது எப்போதாவதுதான் இந்த ஆண் டைப்போலக் காவிரியில் போதிய அளவு நீர்வரத்து ஏற்படுகிறது. நீர்வரத்து ஆண் டுக்கு ஆண்டு குறைந்துகொண்டே போகி றது. அதே சமயம் கர்நாடகா அரசு ஒருத லைப்பட்சமாக ஐந்து புதிய அணைகளைக் கட்டி பாசன பகுதிகளைப் பெருக்கிக் கொண்டுவிட்டது. இடைக்கால நிவாரண மாகிய 205 டி.எம்.சி. நீரை மறுப்பது மட்டு மல்ல; 11.5 லட்சம் ஏக்கருக்கு மேல் பாசனப் பகுதியை விரிவு படுத்துவதற்கான இடைக் காலத் தடையையும் கர்நாடக அரசு மீறுகி றது. நடுவர் மன்றத் தீர்ப்பை ஏற்பது என் பதே காவிரி நீரில் தமிழக உரிமையை அங்கீ கரிப்பதாகும் என்பதால்தான் கர்நாடகா அரசு அடாவடித்தனம் செய்கிறது.

ஆகவே நடுவர் மன்றத் தீர்ப்பை மட்டு மல்ல, பேச்சுவார்த்தை மூலமான தீர்வு எதையும் கூட எந்தக் கட்சியின் தலைமையி லான கர்நாடகா அரசும் ஏற்காது என்பதே உண்மை. பேச்சுவார்த்தை என்கிற பெயரில் இழுத்தடிப்பது, தமிழக உரிமையை மறுப் பது என்பதுதான் அவர்களது தந்திரம்.

காவிரி நீர் தகராறு உட்பட வெவ்வேறு இன, மொழி, மதப் பிரிவினருக்கு இடையி லான எந்தப் பிரச்சினையையும் எந்த வழியி லும் இந்த அகில இந்தியத் தேசியவாதிக ளால் தீர்த்திட முடியவில்லை என்பதற்கும் ஏராளமான சான்றுகள். பஞ்சாப் - அரி யானா - இமாசலப் பிரதேசம் - ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களுக்கிடையிலான ரவி - பியாஸ் ஆற்று நீரைப் பகிர்ந்து கொள்ளும் பிரச்சினை; சண்டிகரைப் பஞ்சாப்புக்குக் கையளிக்கும் பிரச்சினை; பஞ்சாபிலுள்ள "ஃபாசிகா - தேஜிப்பூர்" ஆகிய இந்தி பேசும் பகுதிகளை அரியானாவுக்கு மாற் றும் பிரச்சினை; மராட்டிய மற்றும் கேரள மாநிலங்களுக்கும் கர்நாடகாவுக்கும் இடை யிலான பிராந்தியத் தகராறு - இப்படிப் பல வேறு பிரச்சினைகள் பேச்சுவார்த்தை மூலமோ, நடுவர் மன்றங்கள் மூலமோ எப்ப டியும் தீராமல் கிடக்கின்றன.


காவிரி நீர் விகாரம் தீராமல் இழுத்தடிப் பதுதான் கர்நாடகாவுக்குச் சாதகமானது. எல்லா தேசியக் கட்சிகளுமே இதற்குத் துணைபோகும் வகையில் முடிவற்ற, பல னற்ற பேச்சுவார்த்தைக்கு தமிழக அரசை நிர்ப்பந்திக்கின்றன. அயோத்தி விவகாரத்தில் பேச்சுவார்த்தை - அரசியல் தீர்வுக்கு வழி இல்லை, கோர்ட்டுத் தீர்ப்பே ஒரே வழி எனக் கூறி பாரதீய ஜனதா முதலிய இந்துமத வெறியர்களை ஏற்கும்படி கோரும் 'தேசிய வாதிகள்' கர்நாடகா அரசு நடுவர் மன்றத் தீர்ப்பை ஏற்க மறுத்து அடாவடித்தனம் செய் வதை ஆமோதிக்கின்றனர். பேச்சுவார்த் தையே தீர்வு என்கின்றனர். பஞ்சாப், காஷ் மீர், அசாம் பிரச்சினையில் அரசியல் சட்டத் துக்கு உட்பட்டே பேச்சுவார்த்தை எனச் சாதிக்கும் 'தேசிய வாதிகள்' காவிரி விவகா ரத்தில் அரசியல் சட்டப்படியான நடுவர் மன்ற, உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளை மதிக்க மறுத்து இனவெறி அராஜகம் நடத்துவதை ஆதரிக்கின்றனர்.

இறுதியாக, கன்னடத் தொழிலாளர்கள் - தமிழகத் தொழிலாளர்களது ஒற்றுமை பாதிக்கப்படும் என்று ஒவ்வொரு பிரிவுத் தொழிலாளர்களுக்கும் தமது சுயநலனுக் கான போராட்டங்களுக்கு மட்டுமே குரல் கொடுத்துப் பழக்கி வரும் போலிக் கம்யூ னிஸ்டுகள் பெரும் கூச்சல் போடுகிறார்கள்.

தொழிலாளர் வர்க்க ஒற்றுமை என்பது அவர்கள் சார்ந்த இனங்களுக்கிடையிலான சமத்துவம், நியாயம், ஜனநாயக பூர்வமான தாக இருக்க வேண்டுமே தவிர ஒரு குறிப் பிட்ட பிரிவின் இனவெறி அராஜகத்துக்கும் அடாவடித்தனத்துக்கும் உரிமை மறுப்புக் கும் பணிந்து போவதாக இருக்க முடியாது. சரியான பாட்டாளி வர்க்க கண்ணோட்டம் சர்வதேசிய உணர்வையும் தேசிய உணர்வை யும் எதிரெதிரானவையாகவோ, ஏதாவது ஒன்று பலியிடக் கூடியதாகவோ இருக்க முடியாது.

ஆகவே, தமிழக உரிமைக்கான போராட்டத்தைப் பாட்டாளி வர்க்கம் நடத் துவது சரியானதும் அவசியமானதும் ஆகும். ஆனால், அப்போராட்டம் கர்நாடக அரசுக்கு எதிரானதாக மட்டுமல்ல; அதற்குத் துணைபோகும் 'தேசிய வாதி'களையும், இரு சிறுபான்மை இனங்களுக்கிடையே முரண்பாடுகளையும் மோதல்களையும் தனது அரசியல் ஆதாயத்துக்குப் பயன்ப டுத்தும் மத்திய அரசையும், தமிழக உரிமை யைப் பலியிடும் பார்ப்பன - பாசிச கும்ப லுக்கும் எதிரானதாக இருக்க வேண்டும்.

● மாணிக்கவாசகம்



என்ன குற்றம் செய்தாள் இந்தச் சிறுமி? கன்னட இனவெறியாட்டத்தில் வீடிழந்து தப்பியோடி வந்து நெடுஞ்சாலையில் பரிதவிக்கும் தமிழர் குடும்பம்.

படிப்பகம்

www.padippakam.com

# சோவியத் ஒன்றியக் கலைப்பு இன்னுமொரு ஆட்சி கவிழ்ப்பு

கடைசியில் எல்லாம் முடிந்து விட்டது. எதிர்பார்த்தபடியே கிரெம்ளின் கட்டிடத்தில் எஞ்சியிருந்த அரிவாள் - சுத்தியல் பொறித்த சின்னமும் செங்கொடியும் பிய்த்தெறியப்பட்டு விட்டது. 15 தேசங்களைக் கொண்ட மாபெரும் வல்லரசாகத் திகழ்ந்த சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டு விட்டது. அதன் அதிபராகத் திகழ்ந்த கோர்பச்சேவ் பதவியும் அதிகாரமும் பறிக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்டு கிடக்கிறார். கடந்த ஐந்தாண்டுகளுக்கும் மேலாக ஏகாதிபத்தியங்களுக்கு விசுவாசமாக ஊழியம் செய்த போதிலும், கோர்பச்சேவை அவை கைகழுவி விட்டன. ரஷிய மாநிலத்தின் அதிபரான யேல்ட்சின் இப்போது ஏகாதிபத்தியங்களின் புதுக் கதாநாயகனாகி விட்டார்.

கோர்பச்சேவ் ஏகாதிபத்தியங்களுடன் தொடர்ந்து சமரசமாக நடந்து கொண்டு, படிப்படியாக முதலாளித்துவத்தை நிறுவும் முயற்சியில்தான் ஈடுபட்டார். ஆனாலும் அவரைத் தூக்கியெறிந்து விட்டு, இரகசியமாக ஓர் ஆட்சிக் கவிழ்ப்பை ஏகாதிபத்தியங்கள் சோவியத் ஒன்றியத்தில் நடத்தியுள்ளன.

சோவியத் ஒன்றியத்தில் தோழர்கள் லெனின் - ஸ்டாலின் மறைவுக்குப் பிறகு ஓர் ரகசிய ஆட்சிக் கவிழ்ப்பின் மூலம் கம்யூனிஸ்ட் கட்சியையும் ஆட்சியையும் கைப்பற்றிய குருச்சேவ் - பிரஷ்னேவ் கும்பல் சோசலிசத்தை தூக்கியெறிந்து விட்டு அதிகார வர்க்க முதலாளித்துவத்தை நிறுவியது. அதைத் தொடர்ந்து அமெரிக்காவுடன் உலக மேலாதிக்கப் போட்டியில் இறங்கி, ரஷிய பொருளாதாரத்தை இராணுவ மயமாக்கி ஆயுதக் குவிப்பிலும் ஆக்கிரமிப்பிலும் ஈடுபட்டது. இதனால் சோவியத் ஒன்றியம் தீராத அரசியல் - பொருளாதார நெருக்கடியில் சிக்கித் திணறியது.

அதன் பிறகு ஆட்சிக்கு வந்த கோர்பச்சேவ் முதலாளித்துவ வாதிகளுடன் சமரசம் செய்து கொண்டு, பிரஷ்னேவ் கும்பலுக்கு எதிரான ரகசிய ஆட்சிக் கவிழ்ப்பில் இறங்கினார். பிரஷ்னேவ் கும்பலின் அதிகாரவர்க்க முதலாளித்துவத்தை படிப்படியாக உடைத்து மேற்கத்திய பாணியிலான சுதந்திர சந்தைப் பொருளாதாரத்தை - தனியார் ஏகபோக முதலாளித்துவத்தை நிலைநாட்டும் முயற்சியில் கோர்பச்சேவ் இறங்கினார். இதற்காக 1986ல் கிளாஸ்நாஸ்ட் எனும் திறந்துவிடும் கொள்கையையும், பெரஸ்த்ரோய்கா எனும் மறுசீரமைப்பு கொள்கையையும் செயல்படுத்தினார்.

ஆனாலும் நெருக்கடிகள் தீரவில்லை. கோர்பியின் கொள்கைகள் பெருந்தோல்வி அடைந்து, சோவியத் ஒன்றியத்தில் உணவுப் பஞ்சம் பெருகியது. இதைச் சாதகமாக்கிக் கொண்டு பழமைவாதிகளான பிரஷ்னேவின் விசுவாசிகள் ஒருபுறம் நெருக்கடி கொடுத்தனர். மறுபுறம் ஏகாதிபத்தியங்கள் மற்றும் தீவிர 'சீர்திருத்தவாதிகள்' முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரத்தை திறந்து விடுமாறு நிர்பந்தித்தனர். இதுதவிர சோவியத் ஒன்றியத்திலுள்ள பல்வேறு தேசிய இனங்கள் சுதந்திரம் கோரி கலகம் செய்தன. கோர்பியின் செல்வாக்கும் மங்கத் தொடங்கியது.

எனவே தனது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள மேலும் மேலும் முதலாளித்துவ வாதிகளுடன் சமரசம் செய்து கொண்டார் கோர்பச்சேவ். 1988ல் தனிச் சொத்துடமையை அங்கீகரிப்பது உட்பட மேலும் பல தீவிர முதலாளித்துவ சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். 1989ல் முதலாளித்துவ பாணியிலான பல கட்சி தேர்தல் முறையைச் செயல்படுத்தினார். நாட்டின் மீது பெயரளவில் இருந்த கம்யூனிஸ்ட் கட்சியின் மேலாண்மையையும் கட்டுப்பாட்டையும் நீக்கிவிட்டு முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரத்தை ஊக்குவித்தார்.

கோர்பியின் நடவடிக்கைகளால் நாளுக்கு நாள் தமது அதிகாரப்பிடிப்பு தகர்வதைக் கண்டு ஆத்திரமடைந்த பிரஷ்னேவின் வாரிசுகள், மீண்டும் தமது இழந்த சொர்க்கத்தை மீட்கும் முயற்சியில் அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பில் இறங்கினர். கடந்த ஆண்டு ஆகஸ்ட்டில் நடந்த இந்த அரண்மனைப் புரட்சி தோல்வியடைந்ததைச் சாதகமாக்கிக் கொண்டு, மார்க்சிய - லெனினிய சித்தாந்தத்தையும் ஆசான்களையும் ஏகாதிபத்திய வாதிகள் இழிவுபடுத்தி அவதூறு செய்தனர். ஏற்கனவே நெருக்கடியில் சிக்கியிருந்த கோர்பி, தனது இருப்பை தக்க வைத்துக் கொள்ள ரஷிய முதலாளித்துவ வாதிகளிடம் சரணடைந்தார். சோசலிசம் - கம்யூனிசத்தின் பெயரால் முதலாளித்துவ சீர்திருத்தங்களைச் செய்து வந்த கோர்பி, பதவியையும் அதிகாரத்தையும் நிலை நிறுத்திக் கொள்ள இதுநாள் வரை வாயளவில் உச்சரித்து வந்த கம்யூனிசத்தையே கைகழுவினார்.

கோர்பச்சேவின் சமரசத்தையும் சரணடைவையும் கண்டு உற்சாகமடைந்த முதலாளித்துவ வாதிகள், யேனயேவ் கும்பலின் அரண்மனைப் புரட்சியை எதிர்ப்பது என்ற பெயரில் கம்யூனிசம், ஜனநாயகம் - முற்போக்கு சிந்தனைகளுக்கு எதிரான அவதூறு பிரச்சாரத்தில் இறங்கி ரகசியமாகவே ஓர் ஆட்சிக் கவிழ்ப்பை நடத்தியுள்ளனர். யேனயேவ் கும்பலின் அதிரடிப் புரட்சி தோல்வியடைந்ததும், உலகப் பாட்டாளி வர்க்கத் தலைவர்களான மார்க்ஸ், லெனின் சிலைகள் உடைக்கப்பட்டு இழிவுப்படுத்தப்பட்டன. செங்கொடி தீக்கிரையாக்கப்பட்டது. கம்யூனிசம், ஜனநாயகம், மனித நேயத்தைப் பற்றி பேசுவோர் கைது செய்யப்பட்டனர். மார்க்சிய நூல்களை அச்சிடுவோர் மட்டுமின்றி, புரட்சிகர முற்போக்கு நூல்களை வெளியிடுவோர் கூட சிறை வைக்கப்படுவார்கள் என அச்சுறுத்தப்பட்டனர். ரஷிய போலிக் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டு அதன் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. தோழர் லெனின் தலைமையில் பாட்டாளி வர்க்கத்தை புரட்சிக்கு அணி திரட்டிய ''பிராவ்தா'' நாளிதழ் நிறுத்தப்பட்டது.



கோர்பச்சேவுக்கு நேர்ந்த கதி: விசுவாச ஊழியம் செய்த போதிலும் பதவி பறிக்கப்பட்டு, அவரோடு சேர்த்து அவரது உருவப்பட ''கட்-அவுட்''களும் குப்பைத் தொட்டியில் வீசப்படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com

இத்தனையும் கோர்பச்சேவின் முன்னிலையில் நடந்த போதும் அவர் எதிர்த்து வாயே திறக்கவில்லை. கம்யூனிஸ்ட் கட்சியையும் கலைத்து விட்டதால் அவருக்கென வேரோ விழுதோ இல்லாமல் போய், தனது அதிகாரத்தைக் காப்பாற்றிக் கொள்ள முதலாளித்துவ வாதிகளின் கைப்பாவையாகிப் போனார். அதைச் சாதகமாக்கிக் கொண்டு, ரஷ்ய குடியரசுத் தலைவரான யேல்ட்சின் தலைமையில் திரண்ட முதலாளித்துவ கும்பல், கோர்பச்சேவை முன்னிறுத்தி, பல்வேறு அவசர சட்டங்களை அறிவித்தது. சுப்ரீம் சோவியத் எனப்படும் மக்கள் பிரதிநிதிகள் பேரவையில் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மை கூட இல்லாமலேயே பல அவசரத் தீர்மானங்கள் ஜனநாயக விரோதமாக நிறைவேற்றப்பட்டதை ருஷ்ய பத்திரிகைகள் அம்பலப்படுத்தின.

'15 குடியரசுகளின் கூட்டமைப்பாக சோவியத் ஒன்றியம் என்கிற அதிகார பலமிக்க மைய அரசு இருப்பதால்தான் யேனயேவ் போன்ற பழமைவாதிகளால் திடீர் அரண்மனை புரட்சி செய்ய முடிகிறது; எதிர்காலத்தில் இத்தகைய அபாயத்தைத் தவிர்க்க மைய அரசமைப்பு முறை தேவையில்லை; குடியரசுகள் பிரிந்து செல்ல சுதந்திரம் வழங்க வேண்டும்' என்று கூறியும், பல்வேறு தேசிய இனங்களின் கலகங்களைக் காட்டியும் யேல்ட்சின் தலைமையிலான முதலாளித்துவ கும்பல் குடியரசுகளுக்கு சுதந்திரப் பிரகடனம் அளிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றின. அதைத் தொடர்ந்து அனைத்து குடியரசுகளும் தனிநாடுகளாகப் பிரகடனம் செய்தன. அதன் பிறகு சோவியத் ஒன்றியம் என்கிற மைய அதிகார அமைப்பு தேவையில்லாமல் போனது. அதோடு பெயரளவில் அதிபராக இருந்த கோர்பச்சேவும் பதவியிலிருந்து விரட்டப்பட்டார். சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டு அதன் ராணுவம், அணு ஆயுதம், பொருளாதாரம் முதலான பொறுப்புகளை ரஷிய குடியரசின் அதிபரும் தீவிர முதலாளித்துவ வாதியுமான யேல்ட்சின் ஏற்றுக் கொண்டார்.

இரகசியமாகவும், அடுத்தடுத்து அவசரமாகவும் நடந்தேறிய இந்த ஆட்சிக் கவிழ்ப்பையும், புதிய மாற்றங்களையும் திரைமறைவிலிருந்து ஆட்டுவித்த ஏகாதிபத்தியங்கள், பெருத்த ஆரவாரத்தோடு இவற்றை வரவேற்றன. யேல்ட்சின் தலைமையில் திரண்டுள்ள ரஷியாவின் கருப்புப் பண கோடீஸ்வரர்களால் ஏவிவிடப்பட்ட சமூக விரோத - கிரிமினல் பேர்வழிகள் லெனின் சிலையை உடைப்பது, செங்கொடியை எரிப்பது முதலான அட்டூழியங்களில் ஈடுபட்டதையே மாபெரும் மக்கள் புரட்சி என்று ஏகாதிபத்தியங்கள் ஊதிப் பெருக்கின. ''கம்யூனிசம் அதன் சொந்த மண்ணிலேயே புதைக்கப்பட்டு விட்டது; ஜனநாயகம் வென்றது'' என்று எக்காளமிட்டன.

இறுதிவரை ஏகாதிபத்தியங்களுக்கு விசுவாசமாக ஊழியம் செய்த போதிலும், கோர்பச்சேவைக் கூட அவை நம்பவில்லை. சோசலிசம் - கம்யூனிசத்தின் பெயரால் படிப்படியாக முதலாளித்துவத்தை நிறுவ முயற்சித்த கோர்பச்சேவை விட, அப்பட்டமாக முதலாளித்துவத்தை நிறுவியுள்ள யேல்ட்சின் இன்று ஏகாதிபத்தியங்களின் நம்பகமான கூட்டாளியாகி விட்டார். எனவேதான் கோர்பச்சேவை வெறும் ''சீர்திருத்தவாதி'' என்றழைக்கும் ஏகாதிபத்தியங்கள், யேல்ட்சினை ''துணிச்சல் மிக்கவர்; இரும்பு மனிதர்; முற்போக்காளர்'' என்று பாராட்டுகின்றன. ஏகாதிபத்தியங்களின் இறுதி நோக்கம் என்ன என்பதையும், எதற்காக டெங்சியாவோ பிங்கையும், சௌசெஸ்கூவையும், லேக் வாலேசாவையும், கோர்பச்சேவையும் தலையில் வைத்துக் கூத்தாடின என்பதையும் ரஷிய மாற்றங்கள் மீண்டுமொருமுறை உலகிற்கு உணர்த்தியுள்ளது.



இரகசியமாகவே ஓர் ஆட்சிக் கவிழ்ப்பைச் சாதித்துவிட்ட மகிழ்ச்சியில் அமெரிக்க அதிபர் புஷ் - ரஷ்யக் குடியரசின் அதிபர் யேல்ட்சின்.

ரஷியாவில் நடந்த இந்த ஆட்சிக் கவிழ்ப்பினூடே கம்யூனிசத்துக்கு எதிராக அவதூறு பிரச்சாரம் செய்துவரும் ஏகாதிபத்தியவாதிகள், இன்னுமொரு வரலாற்றுப் புரட்டையும் அவிழ்த்து விட்டுள்ளனர். 1917 மகத்தான அக்டோபர் சோசலிசப் புரட்சியைத் தொடர்ந்து லெனின் - ஸ்டாலின் தலைமையிலான சோவியத் அரசு, இதர சிறிய தேசிய இனக் குடிய்ரசுகளைக் கபளீகரம் செய்து, அச்சுறுத்தல், அடக்குமுறை மூலம் சோவியத் ஒன்றியமாக கட்டியமைத்ததாக அவர்கள் கூசாமல் புளுகுகிறார்கள்.

ஆனால், 1917 புரட்சியைத் தொடர்ந்து உடனடியாக சோவியத் ஒன்றியம் உருவாகவில்லை. சோசலிசத்துக்கு எதிராக 14 நாடுகளின் கூட்டணியோடு ஏகாதிபத்தியங்கள் நடத்திய படையெடுப்பு, எதிர்ப் புரட்சி கூலிப் படைகளின் அட்டூழியம், சீர்குலைவு முதலான அன்னிய தாக்குதலிலிருந்து தம்மைத் தற்காத்துக் கொள்ளவே சுயவிருப்பத்தின் அடிப்படையில் சிறிய தேசிய இனக் குடியரசுகள் சோவியத் ஒன்றியத்தில் இணைந்தன. இந்தப் போக்கு 1924 வரை நீடித்தது. தேசிய இனங்களிடையே சமத்துவத்தையும், பிரிந்து செல்வதற்கான சுயநிர்ணய உரிமையையும், சுதந்திரத்தையும் அங்கீகரித்து சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியமாக அவை மலர்ந்தன. இந்த வரலாற்று உண்மைகளை மூடிமறைத்துவிட்டு லெனின் - ஸ்டாலின் காலத்திலிருந்தே ருஷ்ய பெருந்தேசிய இன அடக்குமுறை நிலவியதாகவும், அதனால்தான் தேசிய இனங்கள் இப்போது சுதந்திரம் கோரி கலகம் செய்தன என்பதாகவும் ஏகாதிபத்தியவாதிகள் புளுகுகிறார்கள். இத்தகைய தேசிய இன அடக்குமுறை கம்யூனிசத் துரோகிகளான குருச்சேவ் - பிரஷ்னேவ் காலத்தில்தான் உருவாகியது என்பதையும் அவர்கள் வசதியாக மறைத்துவிட்டு மார்க்சிய ஆசான்கள் மீதே பழிதூற்றுகின்றனர். மார்க்சிய - லெனினியத்தையும், ஆசான்களையும் இழிவுபடுத்தும் நோக்கத்துடன் இதை ஸ்டாலினிச சர்வாதிகாரம் என்று ஏகாதிபத்தியவாதிகள் அவதூறு செய்தனர்.

இன்று அவர்கள் எதிர்பார்த்தவாறே ரஷிய ஒன்றியத்திலிருந்த குடியரசுகளுக்கு சுதந்திரம் கிடைத்துவிட்டது. ஆனால் மாபெரும் வல்லரசாகத் திகழ்ந்த சோவியத் ஒன்றியத்துக்கு மாற்றாக ஒரு கூட்டமைப்பை அவர்களால் கட்டியமைக்க முடியவில்லை. ஏனெனில் தேசிய இனக் குடியரசுகளிடம் பாட்டாளி வர்க்கத் தலைமையுமில்லை. ஐக்கியப்படுவதற்கான சித்தாந்தமுமில்லை. மாறாக தேசிய இனவெறிதான் விஞ்சி நிற்கிறது. அதனடிப்படையில்தான் கடந்த டிசம்பர் 8ந் தேதியன்று ருஷ்யா, உக்ரைன், பைலோருஷ்யா ஆகிய குடியரசுகள் ஒன்றிணைந்து சுதந்திர காமன்வெல்த் கூட்டமைப்பை நிறுவின. ஏனெனில் இம்மூன்று குடியரசுகளும் ஸ்லாவிய வர்ண இனத்தைச் சேர்ந்தவை.

அதன் பிறகு டிசம்பர் இறுதியில் அனைத்து குடியரசுகளின் சுதந்திர காமன்வெல்த் கூட்டமைப்பை நிறுவும் முயற்சிகள் நடந்தன. ஏற்கனவே பிரிந்து சென்ற 3 பால்டிக் குடியரசு நாடுகள் இக்கூட்டமைப்பில் பங்கேற்க மறுத்துவிட்டன. உள்நாட்டுப் போர் காரணமாக ஜியார்ஜியா இதில் சேர முடியவில்லை. எஞ்சிய 11 குடியரசுகளும் சேர்ந்து, நெல்லிக்காய் மூட்டையைப் போல இக்காமன்வெல்த் கூட்டமைப்பில் ஒன்றி

www.padippakam.com

# சிதைத்தாலும் எரித்தாலும் செங்கொடி அழிந்து விடுமா?



சோவியத் ஒன்றியம் சிதைந்து, ரஷிய மாநிலம் தனியே பிரிந்து சென்றதும் அதன் அதிபர் யேல்ட்சின் புதுவேகம் புது மோகத்தோடு முதலாளித்துவ சந்தைப் பொருளாதாரத்தை நிலைநாட்டக் கிளம்பினார். அதன்படி கடந்த ஜனவரி 2-ம் தேதி முதலாக அனைத்துப் பொருட்களின் விலையையும் கிடுகிடுவென உயர்த்தி, தனியார் முதலாளித்துவக் கொள்ளையைத் தீவிரப்படுத்தியது யேல்ட்சின் கும்பல். அதன் விளைவாக பால், ரொட்டி முதலான அத்தியாவசியப் பொருட்களின் விலை திடீரென 5 முதல் 10 மடங்கு உயர்ந்தது. மானிய விலையில் ரேஷனில் உணவுப் பொருட்களை வழங்குவதையும் யேல்ட்சின் கும்பல் நிறுத்திவிட்டதால், உழைக்கும் மக்கள் கைக்குழந்தைகளுடன் பட்டினியால் பரிதவித்தனர். குப்பைத் தொட்டியில் ரொட்டியைத் தேடி அலையும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

ஏற்கனவே கோர்பச்சேவின் முதலாளித்துவ மறு சீரமைப்புக் கொள்கையால் அவதிப்பட்ட மக்கள் இப்போதைய திடீர் விலையேற்றத் தாக்குதலைக் கண்டு ஆத்திரமடைந்து போராட்டத்தில் இறங்கத் தொடங்கியுள்ளனர். கடந்த ஜனவரி முதல் வாரத்தில் வடபகுதியிலுள்ள வோர்குதா சுரங்கத் தொழிலாளர்கள் முதலாளித்துவ ஆட்சியாளர்களை எதிர்த்து வேலை நிறுத்தத்தில் இறங்கினர். கரேலியா பிராந்தியத்தில் உள்ள தனியார் முதலாளித்துவ நிறுவனங்களையும் கடைகளையும் மக்கள் தன்னெழுச்சியாகத் திரண்டு தாக்கி தமது வெறுப்பை வெளிப்படுத்தினர். ரஷியாவிலுள்ள அனைத்து தொழிற் சங்கங்களும் விலையேற்றத்துக்கு ஏற்ப ஊதிய உயர்வு கோரி ஆர்ப்பாட்டம் செய்யப் போவதாக எச்சரித்துள்ளன.

கடந்த ஜனவரி 12-ந் தேதியன்று தலைநகர் மாஸ்கோவிலுள்ள கிரெம்ளின் சதுக்கத்தில் ஏறத்தாழ 3 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் அணிதிரண்டு யேல்ட்சின் கும்பலுக்கு எதிராக மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தியுள்ளனர். செங்கொடிகளுடனும் லெனின், ஸ்டாலின் உருவப் படங்களுடனும் பாட்டாளி வர்க்க சர்வதேசிய கீதத்தை இசைத்துக்கொண்டு ஊர்வலமாகச் சென்ற மக்கள், "முதலாளித்துவம் ஒழிக! சோசலிசம் வாழ்க!" என்று முழங்கினர். அமெரிக்க கைக்கூலி யேல்ட்சின் ஒழிக! சோவியத் ஒன்றியத்தைப் பிளவுபடுத்தாதே! இனவெறியைத் தூண்டி உழைக்கும் மக்களை மோதவிடாதே! உழைக்கும் மக்களைப் பட்டினிச் சாவுக்குத் தள்ளிய முதலாளித்துவ கும்பலே, பதவியிலிருந்து விலகு! என்கிற முழக்க அட்டைகளுடனும், கோர்பி-யேல்ட்சின் ஆகியோரை பன்றியாகச் சித்தரித்து கேலிச் சித்திரங்களுடனும் கடுங் குளிரையும் பொருட்படுத்தாமல் கோபம் கொப்பளிக்க இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளனர். அடுத்த கட்டமாக பிப்ரவரி 9ந் தேதியன்று ரஷ்ய நாடாளுமன்றத்தை முற்றுகையிடப் போவதாகவும் அறிவித்துள்ளனர். இதேபோல செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் (லெனின் கிராடு), உல்யனோவ்ஸ், விளாதிமீர், கிராவ், டாடார்ஸ்தான், குஸ்பாஸ் முதலான நகரங்களிலும் யேல்ட்சின் கும்பலுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன.

ரஷியாவில் கம்யூனிசத்துக்கு எதிராக மாபெரும் கிளர்ச்சியில் இறங்கி அந்நாட்டு மக்களே அத்தத்துவத்தையும் மார்க்சிய ஆசான்களையும் குப்பைத் தொட்டியில் வீசி எறிந்து விட்டார்கள் என்று எக்காளமிட்ட ஏகாதிபத்தியவாதிகளே, இப்போது என்ன சொல்கிறீர்கள்? செங்கொடியையும் பாட்டாளி வர்க்கத் தலைவர்களின் சிலைகளையும் சிதைத்த முதலாளித்துவ முட்டாள்களே, இப்போது மீண்டெழும் போராட்டங்களைக் கண்டு விழிபிதுங்கி நிற்பது ஏன்?

---

ணைந்தன. ஆனால் அடுத்த சில நாட்களிலேயே அவை முரண்பட்டு மோதிக் கொண்டு நிற்கின்றன.

முக்கியமாக, ருஷ்யா, உக்ரைன், பைலோ ரஷ்யா ஆகிய மூன்று குடியரசுகளின் ஸ்லாவிய பெருந்தேசிய இன கூட்டமைப்பைக் கண்டு இதர எட்டு தேசிய இனக் குடியரசுகளும் அஞ்சுகின்றன. காமன்வெல்த் என்ற பெயரில் மீண்டும் ஒரு அடிமை விலங்கைப் பூட்டிக் கொள்ள அவை தயாராக இல்லை. பொருளாதார ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் பலமாக உள்ள ஸ்லாவிய பெருந்தேசிய இனக் குடியரசுகள் கூட்டுச் சேர்ந்து இதர சிறிய தேசிய இனங்களின் மீது மேலாதிக்கம் செய்யும் என்றே அவை கருதுகின்றன.

ருஷ்யா, உக்ரைன், பைலோ ருஷ்யா, கசகஸ்தான் ஆகிய குடியரசுகளில் மட்டும் 27000 அணு ஆயுதக் குறியிடங்கள் உள்ளன. இவற்றில் உக்ரைனும் பைலோ ருஷ்யாவும் தமது குடியரசிலுள்ள அணு ஆயுதங்களை ரஷியாவிடம் கொடுத்து விட ஒப்புக் கொண்டுள்ளன. ஆனால் ஸ்லாவிய பெருந்தேசிய இனங்களின் மேலாதிக்க அச்சம் காரணமாக, கசகஸ்தான் தன்னிடமுள்ள அணு ஆயுதங்களைக் கையளிக்க மறுக்கிறது. இதே போல மால்டோவாவும், அஜர்பெய்ஜானும் ரஷியாவின் பொறுப்பில் கூட்டு ராணுவத்தை அமைப்பதை எதிர்க்கின்றன. மேலும் ஒருங்கிணைந்த பொருளாதாரக் கொள்கையை மேற்கொள்வதில் இக்கூட்டமைப்பிலுள்ள குடியரசுகளிடம் இன்னமும் உடன்பாடு ஏற்படவில்லை.

குறிப்பாக, கசகஸ்தான், அஜர்பெய்ஜான் முதலானவை முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்டவை. எனவே அவை ஈரான், ஈராக், துருக்கி, பாகிஸ்தான், லிபியா ஆகிய முஸ்லிம் நாடுகளுடன் கூட்டுச் சேர்ந்து அணு ஆயுத, வலிமைமிக்க இஸ்லாமிய கூட்டமைப்பை உருவாக்கி விடுமோ என்று ஏகாதிபத்தியங்கள் அஞ்சுகின்றன. எனவே அத்தகைய முயற்சிக்கு எதிராக இப்போதே அவதூறு பிரச்சாரத்தைத் துவக்கி விட்டன.

இது ஒருபுறமிருக்க, ஸ்லாவிய கூட்டமைப்பிலுள்ள ரஷ்யாவும் உக்ரைனும் இராணுவம் மற்றும் பொருளாதாரக் கொள்கைகளில் முரண்பட்டு மோதிக் கொண்டு நிற்கின்றன. பரப்பளவில் பெரிதாக உள்ள ரஷ்ய குடியரசின் மேலாதிக்கத்தை உக்ரைன் கடுமையாக எதிர்க்கிறது.

இந்நெருக்கடிகள் போதாதென்று, தீவிரமாகிவிட்ட வேலையின்மை, விலையேற்றம், உணவுப் பஞ்சம் காரணமாக இக்குடியரசுகளிலுள்ள மக்கள் பட்டினிச் சாவுக்குத் தள்ளப்பட்டுள்ளனர். புத்தாண்டு முதலாக ரஷியாவில் அனைத்து பொருட்களும் 3 முதல் 5 மடங்கு விலையேறி விட்டது. இதனால் 60 முதல் 70% உழைக்கும் மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே தள்ளப்பட்டுள்ளதாக ருஷ்ய அதிகாரிகளே ஒப்புக் கொள்கின்றனர். வல்லரசாகத் திகழ்ந்த சோவியத் ஒன்றியத்துக்கு இன்று ஏழை நாடான இந்தியா அவசர கால உதவி செய்ய வேண்டிய பரிதாபகரமான நிலை. இவற்றை சாதகமாக்கிக் கொண்டு, கடுமையான நிபந்தனைகளுடன் ரஷ்யாவுக்கு கடனுதவி செய்து, தனது ஒற்றைத் துருவ புதிய உலக ஒழுங்கமைப்பை விரைவாக சாதித்து வருகிறது அமெரிக்க வல்லரசு.

கம்யூனிசம் ஒரு மாயப் பிசாசு என்று ஏகாதிபத்தியவாதிகளோடு சேர்ந்து கூச்சல் போட்டுக் கொண்டு முதலாளித்துவத்தை நிலைநாட்டிய போதிலும் யேல்ட்சின் கும்பலால் ஜனநாயகத்தை நிறுவ முடியவில்லை. ஜனநாயகத்தின் பெயரால் மதவெறியர்களும், இனவெறியர்களும், நவீன நாஜி குழுக்களும் ஆட்டம் போடுகின்றனர். முற்போக்கு, நாத்திக, மனித நேய, ஜனநாயக சக்திகள் அடக்கி ஒடுக்கப்படுகின்றன. அடிப்படையிலேயே அதிபர் யேல்ட்சின் ஒரு இனவெறி பாசிஸ்டு. கடைசியில் ஆளும் யேல்ட்சின் கும்பல் ரஷிய மக்களுக்கு வறுமையையும் பாசிச அடக்குமுறையையும்தான் பரிசாக அளித்துள்ளது. சிதறிக் கிடக்கும் சோவியத் ஒன்றியத்தை இராணுவ சர்வாதிகாரத்தைக் கொண்டு 'ஒற்றுமைப்படுத்த' பாசிஸ்டுகள் முயன்று கொண்டிருக்கிறார்கள். தனது தலைவிதியை ஏகாதிபத்தியங்களிடமும் இனவெறியர்களிடமும் விட்டுவிட்டு அழிவை நோக்கி சோவியத் ஒன்றிய குடியரசுகள் சென்று கொண்டிருக்கின்றன.

● பாலன்

www.padippakam.com

# "தடா" கைது ஏன்?

ஜனவரி 7-ந் தேதி விழுப்புரம் இலவச விழாவில் பேசிய பார்ப்பன - பாசிச ஜெயலலிதா வருமாறு குறிப்பிட்டார்:

"தி.மு.க. தலைமை தனது ஊழல் நடவடிக்கைகளில் இருந்து திசை திருப்பவும் தீய வழிகளில் சேர்த்த சொத்துக்களைக் காத்துக் கொள்ளவும் வேண்டி நான் எனது அரசியல் எதிரிகளுக்கு எதிராகத் 'தடா' சட்டத்தைப் பயன்படுத்துவதாகப் புரளி கிளம்புகிறது.

"வன்முறையைத் தூண்டிவிடும் நோக்கத்தோடு தாங்கள் கைது செய்யப்படுவதாக வதந்திகளைப் பரப்புகின்றனர். சிறைதான் தங்களுக்குப் பாதுகாப்பானது என்று கருதி அங்கே போவதற்கு அவர்கள் அவசரமாக விரும்புகின்றனர். அவசரப்பட்டு அதற்கு இந்த அரசு இடம் தராது.

"தடா சட்டம் தமிழகத்தைக் காக்க, தமிழக மக்களைக் காக்க, இந்திய ஒருமைப்பாட்டைக் காக்கத்தான் பயன்படுத்தப்படுமே தவிர எங்கள் அரசியல் எதிரிகளை அடக்குகிற ஆயுதமாக, சொந்த விருப்பு வெறுப்புகளை நிறைவேற்றிக் கொள்கிற கருவியாக, சுயநலத்துக்காகப் பயன்படுத்த - சட்டமாக அதைப் பயன்படுத்த நாங்கள் நினைத்ததும் இல்லை. இனி நினைக்கப் போவதும் இல்லை".

- இப்படிச் சொன்ன இரண்டாம் நாள் அதிகாலையில் முன்னாள் அ.தி.மு.க. மற்றும் தி.மு.க. மந்திரி மொடக்குறிச்சி சுப்புலட்சுமியும் அவரது கணவர் ஜெகதீசனும் பயங்கரவாதத் 'தடா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். அதற்கு முன்பாகவே அவர்களைக் கைது செய்வதற்கான 'பிடிவாரண்ட்' பெறப்பட்டுள்ளது. ஆகவே இந்தக் கைது பற்றித் தெரிந்தேதான் மேற்கண்டவாறு ஜெயலலிதா பேசினார். இது அவரது சொல்லுக்கும் செயலுக்கும் உள்ள உறவை, பார்ப்பன-பாசிஸ்டுக்கே உள்ள பித்தலாட்டக் குணத்தையே குறிக்கிறது.

ஈழத் துரோகி பத்மநாபா கொலை வழக்கைக் காரணங்காட்டி போலீசுத் துறையின் முன்னாள் செயலாளர் நாகராஜன் கைது செய்யப்பட்டு, மிரட்டியும் துன்புறுத்தியும் ஆசை காட்டியும் அவரை அப்ரூவர் ஆக்கி 'வாக்குமூலம்' பெற்றபோதே தி.மு.க. வைச் சேர்ந்த சில புள்ளிகள் கைது செய்யப்படலாம் என்பது எதிர்பார்த்தது தான். ஆனால் அது போலீசே தயாரித்த 'வாக்குமூலம்' தான் என்பது அம்பலமாகியது; எனவே அரசியல் பழிவாங்குதல் என்று தெரிந்து விடாதவாறு எச்சரிக்கை, நிதானம், தகுந்த தயாரிப்போடு 'தடா' கைதுகளை நடத்தும்படி பார்ப்பன ஏடுகளும் ஆலோசகர்களும் உபதேசித்ததை ஏற்றுத் தள்ளிப் போடப்பட்டு வந்தது. இப்போது மீண்டும் அரசியல் பழிவாங்கும் வேட்டையைப் பார்ப்பன-பாசிச ஜெயா கும்பல் துவங்கிவிட்டது.

அரசியல் பழிவாங்குதலுக்கும், அரசியல் எதிரிகளை அடக்குவதற்கும் 'தடா' சட்டத்தைப் பயன்படுத்துவதில்லை என்று என்னதான் திரும்பத் திரும்பக் கூறினாலும் 'தடா' சட்டத்தைப் பயன்படுத்துவதே அதற்காகத்தான் என்பதைக் காட்டுகிறது. நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சியின் கீழ் உலகிலேயே மிகக் கொடிய சட்டங்களில் ஒன்று 'தடா'. இதன் கீழ் ஒருவரது குற்றம் பகிரங்கமாகவும் நேர்மையாகவும் நிரூபிக்கப்படாமலேயே மரண தண்டனை, ஆயுள் தண்டனை வரை விதிக்கப்படலாம்.

சாதாரணச் சட்டங்களின் கீழ் கைதானவர்கள் மீது குற்றப்பத்திரிக்கைகள் தாக்கல் செய்து வழக்கு நடத்தாமலேயே விசாரணை ஏதுமின்றியே மூன்று மாதங்கள் காவலில் வைக்கமுடியும். ஆனால் 'தடா'வின் கீழ் ஓராண்டிற்கு அப்படி வைக்கலாம். பயங்கர நிலைமைகள் இருப்பதாகக் கூறி 'தடா' ஏவிவிடப்படுவதால் 'நீதி'பதிகளே பயபீதியூட்டப்படுகிறார்கள். இதனால், பிணையில் விடும் அதிகாரம் சிறப்பு நீதிமன்றத்துக்கும் உச்சநீதி மன்றத்துக்குமே உள்ளதாலும் (விதிவிலக்காகவே உயர்நீதி மன்றங்கள் இந்த அதிகாரத்தைச் செலுத்துவதாலும்) விசாரணைக் கைதிகள் பிணையில் வருவதும் எளிதல்ல.

சிறப்பு நீதி மன்றத்துக்கு மட்டுமே வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம் உடையன. சிறப்பு நீதி மன்றமும் நாட்டின் எந்தப் பகுதியிலும் நிறுவப்பட்டு அங்கேபோய் வழக்கு நடத்த வேண்டும். அடுத்து உச்சநீதி மன்றத்துக்கு தான் மேல்முறையீடு செய்யலாம். அதுவும் கூட தன் விசாரணை அதிகாரத்தைத் தானே கைகழுவி விட்டது. ஒரு ஏழைக் 'கைதி'யினால் இப்படிப்போய் வழக்காடித் தான் நிரபராதி என்று நிரூபித்து அரசு பயங்கரவாத பிடியில் இருந்து விடுபட முடியுமா? வசதியான கைதிகள் அல்லது பலமான அமைப்பு ஆதரவு பெற்றவர்கள் வாதாடவே முடியும். ஒரு 'தடா' கைதியின் பிணைக்காக வாதிடுவதற்கு மட்டுமே ஐயாயிரம், பத்தாயிரம் என்று வக்கீல்கள் கட்டணம் வசூலிக்கிறார்கள்! இதைப் போல 4,5 மடங்கு வழக்கு நடத்தும் கட்டணமாக வசூலிக்கிறார்கள்!

விதிவிலக்கான விவகாரங்கள் தவிர சிறப்பு நீதிமன்ற விசாரணைகள் எல்லாமே இரகசியமாகவே நடக்கும். சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்வதற்கு மட்டுமல்ல, யார் யார் சாட்சியளிக்கிறார்கள், அவர்களது அடையாளங்கள் என்னவென்று அறிந்து கொள்ளவும் எதிர்த்தரப்பினருக்கு உரிமை இல்லை. சாதாரண வழக்குகளின்படி போலீசு விசாரணையின் போது பெறப்படும் வாக்குமூலங்கள் செல்லுபடியாகாது; மாஜிஸ்டிரேட் முன்பு அளிக்கப்படுபவைதாம் செல்லும். ஆனால் 'தடா' கைதிகள் போலீசு விசாரணையின்போது 'தரும்' வாக்குமூலங்கள் செல்லுபடியாகும். குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தாம் நிரபராதிகள் என்று நிரூபிப்பதற்குத் தேவையான எல்லா விவரங்களையும் போலீசு - அரசுத் தரப்பிடம் கோரி பெற உரிமை கிடையாது.

ஆகவே இந்த போலீசு வழக்கமாக பொய்ச்சாட்சிகள், சித்திரவதை வாக்குமூலம் தயாரித்து வழக்குகளை ஜோடித்து வருவதே 'தடா' சட்டத்தின்படி நியாயமானதாகவும், சட்டபூர்வமானதாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும் மற்றபிற சட்டங்களைப் போல 'தடா' சட்டத்தின் கீழ் தவறாக சிறையிலடைத்து சித்திரவதை செய்யப்பட்டதாக நிரூபிக்கப்பட்டாலும் அதற்காக போலீசுக்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்கவோ, நட்ட ஈடு கேட்கவோ முடியாது.

இவ்வளவு அக்கிரமமான, கொடிய 'தடா' சட்டம் இந்திய அரசியல் சட்டத்துக்கு முரணானது, செல்லுபடியாகாது என்று ஆயிரக் கணக்கான வழக்குகள் பல ஆண்டுகளாக உச்சநீதி மன்றத்தில் உறங்குகின்றன. அவற்றின் மீது விசாரணை நடத்தி முடிவெடுக்கு முன்பே 'தடா' சட்டத்தை ஏவி 35,000 பேரை, 6 வயது சிறுவன் முதல் 80 வயது முதியவர் வரை சிறையிலடைத்துள்ளனர். இந்திய இராணுவ முன்னாள் தளபதி வைத்தியாவைக் கொன்று பொற்கோவில் மீதான இராணுவ தாக்குதலுக்கும் பழிவாங்கிய சீக்கியத் தீவிரவாதிகள் ஜிண்டா, நிம்மி ஆகியோருக்கும் 'தடா' வின் கீழ் மரண தண்டனை தீர்ப்பாகியுள்ளது. பலரைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துக் கொண்டு அவர்களை விடுதலை செய்யும்படி அடிக்கடி சீக்கியத்தீவிரவாதிகள் நிர்ப்பந்திக்கின்றனர். எனவே ஜிண்டா, நிம்மியைத் தூக்கிலிட்டு விட இந்திய அரசு அவசரப்படுகிறது. ஆனால் 'தடா'வே அரசியல் சட்டத்துக்கு முரணானது என்கிற வழக்கு முடியாமல் இருப்பதால் அவ்வாறு செய்யாமலிருக்கிறது.

'தடா' சட்டம் பற்றிய மேற்கண்ட விவரங்களே போதும், ஏன் பார்ப்பன-பாசிச ஜெயா கும்பல் அச்சட்டத்தைக்கையில் எடுத்துள்ளது என்பதை இவையே காட்டிவிடுகின்றன.

போலீசுத்துறையின் முன்னாள் செயலாளர் நாகராஜனைத் 'தடா'வில் கைது செய்வதற்கான சாட்சியங்கள் மாநில 'கியூ'பிரிவு போலீசிடம் சிக்கியுள்ள சில விடுதலைப்புலிகள் கொடுத்தவை; இதே போன்றதுதான் வை.கோபாலசாமியின் தம்பிக்கு எதிரான சாட்சியங்கள்; இந்த நாகராஜனிடம் "வாங்கிய" வாக்கு மூலமும் ஓரிரு போலீசுக்காரர்கள் சாட்சியம் தான் சுப்புலட்சுமி, ஜெகதீசன் கைதுக்கான ஆதாரம். ஈழத் துரோகி பத்மநாபா கொலைக்குத் காரணமானவர்கள் தப்பி ஓடவும், தஞ்சம் புகவும் காரணமாக இருந்தார்கள் என்பது இவர்கள் மீதான குற்றச்சாட்டு. போலீசிடம் சிக்கிய புலிகளை விடுவிக்கும்படி செய்ததாக சுப்புலட்சுமி மீது இன்னுமொரு குற்றச்சாட்டு.

இந்தக் குற்றச்சாட்டுகளும், ஆதாரங்களும், சாட்சியங்களும் சாதாரண வழக்கு

padippakam

www.padippakam.com

மன்றங்கள்-சட்டங்களின் முன்பு தகர்ந்து போய்விடும் என்பதாலேயே 'தடா' சட்டம் ஏவிவிடப்பட்டுள்ளது. இதே வழக்கில் 'தடா'வின் கீழ் கைதான வக்கீல் வீரசேகரனது பிணைக்கான வழக்கில்வந்துள்ள உயர் நீதிமன்றத் தீர்ப்பே பார்ப்பன-பாசிச கும்பல் எவ்வாறு 'தடா' சட்டத்தைக் கேடாகப் பயன்படுத்துகிறது; அதற்குச் சிறப்பு நீதி மன்றமும் உடந்தையாக இருக்கிறது என்பதற்கு ஆதாரமாக உள்ளது.

பத்மநாபா கொலை வழக்கில் தேடப்பட்ட புலிகளுக்குத் தஞ்சமளித்ததாகவும், அவர்களில் குண்டு சாந்தனைத் தலைமறைவாகப் போகும்படி கடிதம் எழுதியதாக வக்கீல் வீரசேகரன் கைது செய்யப்பட்டு, சிறப்பு நீதிமன்றம் அவரது பிணைமனுவை நிராகரித்துவிட்டது. இவ்வாறு செய்த நீதிபதி சித்திக் தனது மூளையைப்பயன்படுத்தித் தீர்ப்பளிக்கவில்லை என்கிறது உயர்நீதி மன்றம்.

வீரசேகரன் எழுதியதாகக் கூறப்படும் கடிதம் தேதியோ, கையெழுத்தோ இல்லாதது. அது இன்னொரு புலியான வசந்தனிடம் இருந்து அக்டோபர் 1-ந் தேதி கைப்பற்றப்பட்டதாம். ஆனால் அக்டோபர் 7-ந் தேதி தான் 'குண்டு சாந்தன் தேடப்படும் குற்றவாளி' என்று பிரகடனப் படுத்தப்பட்டார். புலிகளின் வக்கீல் என்கிற முறையில் அவரது கட்சிக்காரர்களுக்கும் அவருக்கும் இடையிலான இரகசியத்தில் குறுக்கிட அரசுக்கு உரிமையில்லை. ஆகவே வீரசேகரனே அந்தக் கடிதத்தை எழுதியிருந்தாலும் குற்றமாகாது. இதையெல்லாம் பரிசீலித்து சிந்தனையற்ற முறையில் சிறப்பு நீதிமன்றம் வீரசேகரன் வழக்கில் நடந்து கொண்டுள்ளது. சம்பந்தமே இல்லாமல், சட்ட - நியாய அடிப்படை ஏதும் இல்லாமல் 'தடா'வை ஏவியுள்ளது என்று நிரூபணமானது.

பார்ப்பன - பாசிச கும்பல் இப்போது நடத்துவது மூன்றாவது சுற்றுத் 'தடா' தாக்குதல் முதலாவதாக சி.பி.ஐ.யின் சிறப்புப் புலனாய்வுக் குழு மூலமாக விடுதலைப் புலிகளும் அவர்களது ஆதரவாளர்கள் எனச் சந்தேகிக்கப்படுவோரும் 'தடா'வின் கீழ் சிறையில் தள்ளப்பட்டனர். இரண்டாவதாக, ஈழ அகதிகள் - போராளிகள் உரிமைக்கும் ஈழ விடுதலைக்கு ஆதரவாகவும் குரல் கொடுத்த மக்கள் கலை இலக்கியக் கழகம் மற்றும் முற்போக்கு இளைஞர் அணித் தோழர்கள் 'தடா'வின் கீழ் சிறையில் தள்ளப்பட்டனர். மூன்றாவதாக, ஈழ துரோகி பத்மநாபா கொலை வழக்கு என்கிற பெயரில் புலிகளோடு அவர்களுக்குத் தஞ்சம் அளித்ததாகவும், தப்பிவிட உதவியதாகவும் பலர் 'தடா'வின் கீழ் கைதாகியுள்ளனர்.

ராஜீவ், பத்மநாபா கொலைகளுடன் எவ்விதத் தொடர்பும் இல்லாதவர்கள் என்று தெரிந்தும் அடிப்படை ஆதாரம் சிறிதும் காட்ட முடியாதபோதும் ம.க.இ.க. மற்றும் மு.இ.அ. தோழர்கள் 'தடா'வில் கைது செய்யப்பட்டுள்ளதே எதைக் காட்டுகிறது?

ராஜீவ், பத்மநாபா கொலைகள் ஆகிய இரண்டு சம்பவங்களை மட்டுமே வைத்து தமிழ்நாட்டில் பயங்கரவாதம் தலை விரித்தாடுவதாகக் 'கோயாபல்சு' பாணிப் பிரச்சாரம் கட்டவிழ்த்தப்படுவதே எதைக் காட்டுகிறது? பயங்கரவாத - பிளவுவாத - தீவிரவாத பீதியூட்டி அரசியல் ஆதாயம் அடைவதையும், அரசியல் பழிவாங்குவதையும் தானே!



பழி வாங்கும் பாசிச வேட்டை: 'தடா' வின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் தி.மு.க. அமைச்சர் சுப்புலட்சுமி - கணவர் ஜெகதீசன்.

பார்ப்பன - பாசிச கும்பல் இப்படித் தொடர்ந்து 'தடா' வேட்டையில் ஈடுபட்டிருப்பது ஏன்? தமிழக மக்கள் இப்போது என்னென்ன பிரச்சனைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று எண்ணிப் பார்த்தாலே பதில் கிடைத்துவிடும். கர்நாடகாவில் நடந்த இனவெறித் தாக்குதலைத் தொடர்ந்து ஒன்றரை லட்சம் இந்தியத் தமிழ் அகதிகள் - அப்படியும் தமிழகத்துக்கு நீதி கிடைக்கவில்லை. வரலாறு காணாத விலைவாசி ஏற்றத்தால் ஏற்பட்டுள்ள தவிப்பு; ஒரு புறம் திடீரெனப் பெருகிவிட்ட சமூக விரோதிகளின் கொலை - கொள்ளை - கற்பழிப்பு, மறுபுறம் கேள்வி முறையற்ற போலீசு சித்திரவதை - கொலைகள். இவையெல்லாம் பிரச்சனைகளே அல்லவென்றும் விடுதலைப் புலிகள் மற்றும் புரட்சிகர சக்திகளால் ஏற்பட்டுள்ள சட்டம் ஒழுங்கு - பயங்கரவாதம் தான் தலையாய பிரச்சினை என்று திசை திருப்பும் உள்நோக்கம் கொண்டதுதான் இந்த 'தடா' கைதுகளும் - பயங்கரவாத பீதிப் பிரச்சாரமும். ஆகவே இந்தப் பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் ஆட்சியில் இருந்து தூக்கி எறியப்படும் வரை இது தொடரும்.

ஆனால் பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலின் சட்டபூர்வ சட்டமன்ற எதிரிகளால் அதன் 'தடா' தாக்குதலுக்குச் சரியான பதிலடி கொடுத்து முறியடிக்க முடிகிறதா? போலிக் கம்யூனிஸ்டுகள் அதிகார பூர்வமாக இன்னமும் கருணாநிதியின் கூட்டணியில் இருந்தாலும் கொள்கை பூர்வமாக அக்கட்சிகள் பார்ப்பன பாசிச ஜெயாவுடனே இருக்கின்றன. விடுதலைப் புலிகளையும் அவர்களது ஆதாரவாளர்களையும் புரட்சிகர - ஜனநாயக சக்திகளையும் ஒடுக்குவதில் அக்கட்சிகளுக்கு உடன்பாடுதான்.

உதட்டுச் சேவை செய்யும் வகையில் 'தடா' அடக்குமுறைகளைக் கண்டிக்கும் அதே சமயம் துரோகிகளான பண்ருட்டி, வீரமணி மூலமாக பார்ப்பன - பாசிச ஜெயாவுடன் சமரசம் செய்து கொள்ளும் சந்தர்ப்பவாத அரசியலே ராமதாசு தலைமையிலான மூன்றாவது அணியின் அடிப்படையாக உள்ளது. நாகராஜன் கைதான பிறகுதான் கருணாநிதிக்கும், வீரசேகரன் கைதான பிறகுதான் வீரமணிக்கும் 'தடா' சட்டம் கேடாகப் பயன்படுத்தப்படுவதே உறைத்தது. அதற்கு முன்பு ஈழப் போரில் அடிபட்டு சிகிச்சைக்காகத் தஞ்சம் புகுந்துள்ள புலிகள், அவர்களது ஆதரவாளர்கள், ராமகிருஷ்ணன் தலைமையிலான தி.க.காரர்கள், ம.க.இ.க., மு.இ.அ. தோழர்கள் எனப்பலர் மீது ''தடா'' பாய்ந்தபோது இந்தத் தமிழினத் தலைவருக்கும் தளபதிக்கும் 'தடா'வின் கொடுமை தெரியவில்லை! 'புதிய ஜனநாயகம்' ஏட்டின் மீது பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் பாய்வது இவர்களுக்குத் தெரியவில்லை; ''நக்கீரன்'' மீது எடுக்கப்படும் நடவடிக்கை மட்டுமே தெரிகிறது.

இப்போதும் ''தடா'' சட்டமே அரசியல் - ஜனநாயக உரிமைக்கு எதிரானதாகக் கருணாநிதிக்குத் தெரியவில்லை; ''கியூ'' பிரிவு போலீசே அரசியல் - ஜனநாயக உரிமைகளைப் பறிப்பதற்கானதுதான் என்றும் அவர் ஏற்கவில்லை. பஞ்சாப், அசாம், காஷ்மீரில் பயன்படுத்த வேண்டிய ''தடா''வை இங்கே ஏவலாமா? தீவிரவாதிகளை ஒடுக்க வேண்டிய ''கியூ'' பிரிவு போலீசை தி.மு.க.வுக்கு எதிராகப் பயன்படுத்தலாமா? என்று கேட்கிறார். ஏனென்றால் ''தடா'' சட்டம் நிறைவேற்றுவதை கருணாநிதி எதிர்த்ததே இல்லை; ஆதரித்தார். ''கியூ'' பிரிவு போலீசை உருவாக்கியதே கருணாநிதி தான்! இப்போது அவை தன்க்கு எதிராகவே பயன்படுத்தப் படுகிறது என்றதும் கூச்சல் போடுகிறார்.

ஆகவே இவர்கள் அனைவரையும் நிராகரித்து புரட்சிகர - ஜனநாயகத் தலைமையில் திரளுவதுதான் தமிழக மக்களுக்குள்ள ஒரே சரியான வழி! இவர்கள் மட்டுமே ''தடா'' போன்ற கொடிய சட்டங்கள், ''கியூ'' - சி.பி.ஐ. போன்ற உளவுப்படைகள் ஆகியவற்றோடு பார்ப்பன - பாசிச கும்பலையும் எதிர்த்துப் போராடவும் முறியடிக்கவும் முடியும்.

● ஆர்.கே.

படிப்பகம்

www.padippakam.com

## காவிரியில் தமிழக உரிமைப் போராட்டம்
## பங்காரப்பா கொடும்பாவி தூக்கு - எரிப்பு
## ஒடுக்குவதற்கு தமிழக போலீசு முயற்சி

# திருச்சி நகர் குலுங்கியது

காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை மத்திய அரசு அரசிதழில் வெளியிட்டதும் கர்நாடகாவில் தமிழர்கள் கன்னட வெறியர்களால் தாக்கப்பட்டனர். தமிழ் பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். பலர் வெட்டிக் கொல்லப்பட்டனர். தமிழர் பகுதிகள் எல்லாம் சூறையாடப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன. இதுவரை லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் தமிழகத்திற்கு அகதிகளாக வந்துள்ளதாக அரசே புள்ளி விவரம் தருகிறது. இத்தாக்குதலை கண்டித்தும் இப்பிரச்சினையில் ஓட்டுக்கட்சிகளின் தமிழர் விரோத போக்கை அம்பலப்படுத்தி புரட்சிகர அமைப்புகள் பல்வேறு வடிவங்களில் இயக்கம் மேற்கொண்டன.

திருச்சியில் மக்கள் கலை இலக்கிய கழகம், புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி, ரயில்வே ஒர்க்கர்ஸ் யூனியன் ஆகிய அமைப்புகள் இணைந்து எழுச்சிகரமாக இயக்கமெடுத்தன. இது ஓட்டுக்கட்சிகளை கதிகலங்க வைத்தது. பகுதி மக்களிடையே மேலான வரவேற்பை பெற்றது.

முழக்கங்கள் எழுதப்பட்ட தட்டியும், தூக்கில் பங்காரப்பாவின் கொடும்பாவியும் திருச்சி தெப்பக்குளம் அஞ்சலகம் எதிரிலும், புத்தூர் நாலுரோட்டிலும் வைக்கப்பட்டன. அன்று (1.1.92) இரவே கொடும்பாவி பொம்மைகளை போலீசு திருடிச் சென்றது. மறுநாள் விவரம் அறிந்த தோழர்கள் காந்திபுரத்திலிருந்து புறப்பட்டு தில்லை நகர் மெயின்ரோடு வழியாக முழக்கமிட்டவாறு சென்று தில்லை நகர் போலீசு நிலையம் முன்பு ஆர்ப்பாட்டம் செய்தனர். போலீசை அம்பலப்படுத்தி தோழர்கள் போட்ட முழக்கம் மக்களை பெரிதும் கவர்ந்தது. பிறகு போலீசு இன்ஸ்பெக்டர், ம.க.இ.க. செயலர் முத்துவை அழைத்து பேசினார். "பந்த் அன்று இப்படி ஊர்வலமாக முழக்கமிட்டு வருவது சட்டப்படி குற்றம்" என சட்டம் பேசினார். விளம்பரத்திற்காக வைத்திருந்த பொம்மையை நீங்கள் திருடிச் சென்றதுதான் முதல் குற்றம் என தோழர் கூறியதும் இன்ஸ்பெக்டர் வாயடைத்துப் போனார். நீங்கள் எரித்து விடுவீர்கள் என நினைத்து பொம்மையை எடுத்து வந்து விட்டோம் என மழுப்பினார். பிறகு தோழர் தகுந்த பதில் கொடுத்ததும் பொம்மையை திருப்பி கொடுக்க சம்மதித்தார். மீண்டும் கொம்பாவியை தோழர்கள் ஊர்வலமாக முழக்கமிட்டு எடுத்துச் சென்று புத்தூர் நாலு ரோட்டில் தூக்கிலிட்டனர் வழிநெடுகிலும் கொலைகாரனை கொளுத்துங்கள் என மக்கள் ஆவேசப்பட்டு கூறியது குறிப்பிடத்தக்கது.

தெப்பக்குளமருகே வைக்கப்பட்ட பொம்மையையும் திருடிய கோட்டை நிலைய போலீசிடம் திருப்பித் தருமாறு தோழர்கள் கேட்டனர். போலீசு நிலையத்தில் சப்-இன்ஸ்பெக்டரிடம் எழுதி வாங்கி வரச் சொன்னார்கள். சப்-இன்ஸ்பெக்டரோ வேறு ஒரு இடத்தில் 'டூட்டி'யில் இருக்கும் இன்ஸ்பெக்டரை குறிப்பிட்டு அவரை கேட்கும்படி கூறினார். பிறகு மாலை தருகிறோம் என்றார்கள். போலீசின் இழுத்தடிப்பை புரிந்து கொண்ட தோழர்கள் மாற்றுவழியை கையாண்டனர். தெப்பக்குளம் அஞ்சலகத்திலிருந்து மெயின்ரோடு வழியாக கோட்டை போலீசு நிலையத்தை நோக்கி ஊர்வலமாக முழக்கமிட்டுச் சென்றனர். தோழர்களின் உறுதியைக் கண்டு போலீசு பணிந்து பொம்மையை ஒப்படைத்தது. மீண்டும் பொம்மையை அதே இடத்திற்கு எடுத்து வந்து தோழர்கள் தூக்கிலிட்டனர்.

2.1.92 அன்று மாலை 7 மணிக்கு திருச்சி - காந்திபுரம் பகுதியில் பங்காரப்பாவின் கொடும்பாவி தெரு தெருவாக இழுத்துச் செல்லப்பட்டு கொளுத்தப்பட்டது. தோழர் தமிழ்மணி 'தேசிய' ஒருமைப்பாடு கூப்பாடு போடும் ஓட்டுக்கட்சிகளின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்தி பேசினார். நூற்றுக்கணக்கானோர் கூடி நின்று ஆதரவளித்தனர்.

3.1.92 அன்று மாலை தாராநல்லூர் பகுதியில் பங்காரப்பா கொடும்பாவி தெருத் தெருவாக இழுத்துச் செல்லப்பட்டு நூற்றுக்கணக்கானோர் மத்தியில் கொளுத்தப்பட்டது. போராட்டத்தைப் பற்றி தோழர் ஜெகதீசன் (RSYF) விளக்கிப் பேசினார். பங்காரப்பா கொடும்பாவி மீது சிலர் மண்ணெண்ணெய் ஊற்றி கொழுந்து விட்டு எரியச் செய்வித்தனர். சிலர் கொடும்பாவியை செருப்பால் அடித்தனர். சிறுவர்கள் கொடும்பாவி மீது சிறுநீர் கழித்தும் தங்களின் கோபாவேசத்தை வெளிப்படுத்தினர்.

4.1.92. அன்று திருச்சி உறையூர் கடை வீதியிலும், புத்தூர் நாலு ரோட்டிலும் பங்காரப்பாவின் கொடும்பாவி எரிக்கப்பட்டது. இரு இடங்களிலும் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கூடி நின்று ஆதரவளித்ததோடு கொடும்பாவியை செருப்பால் அடித்தும் காரி ஊமிழ்ந்தும் தமது உள்ளக்குமுறலை வெளிப்படுத்தினர்.

6.1.92 அன்று மாலை திருச்சி பொன்மலை ஆர்மரிகேட் எதிரில் பங்காரப்பா கொடும்பாவியை எரிக்க ரெயில்வே ஒர்க்கர்ஸ் யூனியன் தலைமையில் தோழர்கள் கூடினர். அப்பொழுது பொன்மலை போலீசு வந்து தடுத்தது. பொம்மையை எரித்தால் கைது செய்யும்படி எஸ்.பி. உத்தரவு என மிரட்டினர். தோழர்கள் கொளுத்தத்தான் போகிறோம் என உறுதியாக கூறவே செய்வதறியாது தவித்தது போலீசு. கூடியிருந்தவர்களில் பெரியவர் ஒருவர் போலீசை இடைமறித்து "நான் வெளியூர்க்காரன். இந்த இயக்கத்தைச் சேர்ந்தவனும் இல்லை. கர்நாடகாவில் நடக்கும் கொடுமையை கண்டித்து தமது உணர்வை வெளிப்படுத்தும் இப்போராட்டத்தை ஏன் தடுக்கிறீர்? தடுப்பது நியாயமா?" எனக் கேட்டார். பதில் எதுவும் பேசாமல் போலீசு இடத்தை விட்டு நழுவி விட்டது. பிறகு கூடியிருந்த ஏராளமான தொழிலாளர்கள் முன்னிலையில் கொடும்பாவி கொளுத்தப்பட்டது. தோழர் தமிழ்மணி எழுச்சிகரமாக பேசி முடித்த போது தொழிலாளர்கள் கரவொலி எழுப்பி ஆதரவளித்தனர்.

7.1.92. அன்று மாலை திருச்சி சத்திரம் பேருந்து நிலையத்தில் நடுரோட்டில் பங்காரப்பா கொடும்பாவி நூற்றுக்கணக்கானோர் முன்னிலையில் எரிக்கப்பட்டது. பிறகு தோழர்கள், மற்றொரு கொடும்பாவியை சைக்கிளில் கட்டி எடத் தெரு அண்ணா சிலை அருகில் எரிப்பதற்காக எடுத்துச் சென்றனர். டவுன்ஹால் இன்ஸ்பெக்டர் அய்யனார் வழிமறித்து பங்காரப்பா கொடும்பாவியை இப்படி வெளிப்படையாக எடுத்துச் செல்லக் கூடாது எனத் தடுத்து சைக்கிள் ரிக்ஷாவில் வைத்து எடுத்துச் செல்லுமாறு கூறி உடன் இரண்டு போலீசையும் அனுப்பி வைத்தார். ஆனால் வழியிலேயே போலீசு, கொடும்பாவியையும் அதை எடுத்துச் சென்ற தோழரையும் கைது செய்து பாலக்கரை போலீசு நிலையத்தில் வைத்தது.

எடத்தெருவில் கூடியிருந்த தோழர்கள் செய்தியறிந்த பிறகு அங்கு கூடியிருந்த மக்களிடம் போராட்டத்தை தடுக்க போலீசு செய்யும் நடவடிக்கையை அம்பலப்படுத்தினர். பிறகு பொம்மையை திரும்ப பெறுவதற்காக எடத்தெரு அண்ணா சிலையிலிருந்து பாலக்கரை போலீசு நிலையத்திற்கு முழக்கமிட்டவாறு ஊர்வலமாக வந்தனர். வழி நெடுக தோழர்கள் விண்ணதிர முழக்கமிட்டு வந்தது மக்களை கவர்ந்தது. இங்கும் போலீசு அரைமணி நேரம் கழித்துத் தருகிறேன். எஸ்.ஐ. வந்தால் தருகிறேன், இன்ஸ்பெக்டர் வந்தால் தருகிறேன் என இழுத்தடிக்கும் வேலை செய்தது. உடனே தோழர்கள் போலீசு நிலையம் முன்பு ஆர்ப்பாட்டம் - மறியலில் ஈடுபட்டனர். போக்குவரத்து நெரிசலான அப்பகுதி உடனே ஸ்தம்பித்தது. எதற்காக ஆர்ப்பாட்டம் - மறியல் செய்கிறோம் என தோழர்கள் கூடிய மக்களிடம் விளக்கிப் பேசினர். போலீசு, கூடிய மக்களை கலைக்க முயற்சித்தது. ஆனால்,

படிப்பகம்

www.padippakam.com

பொம்மையை ஏன் திருடினீர்கள் என மக்கள் கேள்வி கேட்டு குரல் எழுப்பவே வாயடைத்து திரும்பியது போலீசு. சுமார் ஒரு மணிநேரத்திற்கு மேல் மறியல் தொடர்ந்தது. ஆயிரக்கணக்கானோர் கூடி நின்று ஆதரவளித்தனர்.

இதைக் கண்டு பொறுக்க முடியாத போலீசு, தோழர்கள் மீது தாக்குதல் தொடுக்க திட்டமிட்டது. பாலக்கரை எஸ்.ஐ. ராஜேந்திரன், கண்டோன்ட்மென்ட் இன்ஸ்பெக்டர் முருகானந்தத்தை (இவர் ஏற்கனவே ம.க.இ.க. தோழர்கள் மீது ஆபாசப் பாடல் பாடியதாக பொய் வழக்குப் போட்டவர்) துணைக்கு அழைத்துக் கொண்டனர். இவர்கள் தலைமையில் போலீசு கும்பல் கூடியிருந்த மக்கள் மீதும் தோழர்கள் மீதும் பாய்ந்து வெறித்தனமாக தடியடி பிரயோகம் செய்தது. கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தியது. போலீசார் அருகிலிருந்த பிரபாத் தியேட்டர் வரை மக்களை விரட்டிச் சென்று தாக்கினர். பொதுமக்களில் பலருக்கு மண்டை உடைந்தது. எஸ்.ஐ. ராஜேந்திரனும், இன்ஸ்பெக்டர் முருகானந்தமும் தோழர்களை காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கி கைது செய்வதாகக் கூறி போலீசு நிலையத்திற்குள் அடைத்தனர்.

ம.க.இ.க. தோழர்கள் முத்து, கபிலன், தமிழ்மணி, நிர்மலா, உஷா ஆகியோரும் RSYF தோழர்கள் ஜெகதீசன், கிருஷ்டி மற்றும் RWU தோழர் முருகானந்தம், பு.ஜ. முகவர் சரவணன் ஆகியோர் உட்பட 11 பேர் கைதாகினர். எஸ்.ஐ. ராஜேந்திரன் மிருகத்தனமாக தோழர்களை தாக்கினார். தோழர் உஷாவை ''ஏண்டி கோஷமாப் போடுற'' என்று திட்டியவாறே லத்தியால் அடித்தார். தோழர்கள் கிருஷ்டி, தமிழ்மணி, முருகானந்தம் ஆகியோருக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டது. தோழர் கிருஷ்டியை கீழே தள்ளி போலீசுக் கும்பல் அடித்தது. தோழர்கள் தமிழ்மணி, முருகானந்தம் ஆகியோரை போலீசு அடித்தபோது லத்தி உடைந்து சிதறியது.

போலீசார் செய்தது சரி, தோழர்கள் செய்தது தவறு என ஒத்துக் கொண்டால் விட்டு விடுவதாக இன்ஸ்பெக்டர் முருகானந்தம் கூறினார். நாங்கள் செய்தது சரிதான் என தோழர்கள் திருப்பி கூறியதும் வாயடைத்துப் போனார். பிறகு டி.எஸ்.பி. திருஞானம் வந்த பிறகு அதே பல்லவியை பாடினார். கொடும்பாவி பொம்மையை வழியிலேயே பிடுங்கி வந்து வைத்திருப்பது தவறு என்றும் பொம்மையை பெறுவதற்காக மறியல் - ஆர்ப்பாட்டம் செய்தது சரி என்றும் கூறி தோழர்கள் உறுதியாக இருந்தனர். வேறு வழியின்றி போலீசு பொம்மையைத் தருவதாகக் கூறி தோழர்களை விடுவித்தது.

''எடத்தெரு அண்ணா சிலை அருகில் 8.1.92 மாலை அதே பொம்மையை எரிக்க எங்களுக்கு அனுமதி கொடுத்தால் மட்டுமே வெளியே போவோம்'' என தோழர்கள் உறுதியாக அறிவித்தனர். போலீசு அதற்கும் பணிந்து அனுமதி தருவதாக எழுத்து மூலமாக ஒப்புக் கொண்டது. பொம்மையை 8.1.92 அன்று காலை கண்டோன்மென்ட் போலீசு நிலையத்தில் பெற்றுக் கொள்ளுமாறு கூறினர். பாலக்கரை போலீசு நிலையத்திலிருந்து கொடுத்தால் அவர்களுக்கு கவுரவக் குறைச்சலாம்! பிறகு தோழர்கள் விடுவிக்கப்பட்டு இரவு 11 மணிக்கு வெளி வந்தனர். தடியடியை கண்டித்து 8.1.92 அன்று பேருந்துகளில் சுவரொட்டி ஒட்டப்பட்டது.




கடந்த ஒரு மாதமாக தொடர்ச்சியாக எடுத்த இவ்வியக்கம் ஓட்டுக்கட்சிகளையே கதிகலங்க வைத்தது. மேலும் பேருந்துகளிலும், பகுதிகளிலும் பரவலாக தொடர்ந்து சுவரொட்டிகள் மூலம் 'தேசிய' கட்சிகளின் கபட நாடகம் அம்பலப்படுத்தப்பட்டது. ஆயிரக்கணக்கில் பிரசுரங்கள் அச்சிட்டும் விநியோகிக்கப்பட்டது. காவிரி பிரச்சினையில் தி.மு.க., தி.க. உள்பட பல கட்சிகள் வாய்மூடி மௌனியாக இருக்கும்போது ம.க.இ.க. RSYF சார்பாக எடுத்த சுவரொட்டி இயக்கம், கொடும்பாவி எரிப்பு போராட்டம் பரவலாக வீச்சை ஏற்படுத்தி மக்களிடையே சிறந்த வரவேற்பை பெற்றது.

**தருமபுரி மாவட்டம் பென்னாகரம்** பகுதியில் பு.ஜ. வாசகர்களும், வி.வி.மு.வும் இணைந்து பங்காரப்பாவின் கொடும்பாவியை தூக்கிலிட்டனர். சுமார் 30க்கும் மேற்பட்டோர் அக்ராஹரம் கிராமத்தில் இருந்து தோழர் வெங்கடேசன் (வி.வி.மு.) தலைமையில் பங்காரப்பாவின் கொடும்பாவி உருவத்தை எடுத்துக்கொண்டு சைக்கிளில் பென்னாகரம் பேருந்து நிலையத்தை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர். சுமார் எட்டு இடங்களில் ஊர்வலத்தின் போது தெருமுனைப் பிரச்சாரம் செய்யப்பட்டது. ஒவ்வொரு தெருமுனை கூட்டத்தின் போதும் 100க்கும் மேற்பட்டவர்கள் கூடி சிறந்த வரவேற்பை அளித்தார்கள். பிறகு ஊர்வலத்தில் பொதுமக்கள் தன்னிச்சையாக கலந்து கொண்டார்கள். அதுமட்டுமல்லாது அவர்களே கோசம் போட்டார்கள். அவர்களில் ஒருசிலர், அசிங்கமான கோசமிட்டு அவர்களின் ஆத்திரத்தை வெளிக்காட்டினர். தோழர்களின் வேண்டுகோளின் பேரில் அசிங்கமான கோசத்தை கை விட்டனர்.

ஒரு வயதான தாய் ''பங்காரப்பனை ஏன் சைக்கிளில் எடுத்துச் செல்கின்றீர்கள், கழுதையின் மீது எடுத்துச் செல்வதுதானே?'' என்று கூறினார். அவரது நியாயமான கோபத்தை தோழர்கள் ஒப்புக் கொண்டனர். தொடர்ந்து ''கியூ'' பிரிவு போலீசார் ஊர்வலம் முடியும்வரை வந்தார்கள். அன்று (2.1.91) தமிழ்நாடு பந்த் இருந்ததால் கூட்டம் குறைவாக இருக்கும் என்று நினைத்ததற்கு மாறாக 300க்கு மேற்பட்ட மக்கள் கூட்டம் குழுமியது. தோழர்கள் பறை அடித்து கோசமிட்டனர். பென்னாகரம் பஸ் நிலையத்தில் தோழர் செல்வராஜ் (R.S.Y.F.) மக்களிடத்தில் பேசினார். அப்போது போலீஸ் வந்து என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டான். ''தூக்கிலிடப் போகிறோம்'' என்று அறிவித்தோம். 'இங்கு இது எல்லாம் செய்யக் கூடாது மக்கள் கொதிப்படைந்து உள்ளார்கள்' என்றான். பிறகு 'வேண்டாம் எடுத்துச் சென்று விடுங்கள்' என நைசாக கண்ணடித்து சொன்னான்; அதற்கு தோழர்கள் மறுத்து விட்டனர்.

ஊர்வலம் மீண்டும் பென்னாகரம் பேருந்து நிலையம் வந்து புளிய மரத்தில் விண்ணதிர முழக்கத்துடன் பங்காரப்பா கொடும்பாவி தூக்கிலிடப்பட்டது. பங்காரப்பாவை பார்த்த மக்கள் கிண்டல், கேலி செய்து சிரித்தனர். கிரிமினல் பங்காரப்பாவை ஏன் தூக்கிலிடுகிறோம் என்று தோழர்கள் விளக்கிப் பேசினர்.

ஈரோடு பள்ளிப்பாளையத்திலும் RSYF தோழர்களால் பங்காரப்பா கொடும்பாவி தூக்கிலிடப்பட்டு முழக்கத் தட்டிகளோடு வைக்கப்பட்டது. கொடும்பாவி பொம்மையை போலீசு திருடிச் சென்றது. RSYF தோழர்கள் ஆர்ப்பாட்டம் செய்து போலீசிடமிருந்து பொம்மையை திரும்பப் பெற்று கொளுத்தினர். பலர் கூடி நின்று ஆதரவளித்தனர்.

**கோவையில்** ம.க.இ.க. சார்பாக 27.12.91 அன்று தோழர்கள் எழுச்சிகரமான முழக்கங்களுடன் ஊர்வலம் நடத்தி ஒண்டிப்புதூரில் பங்காரப்பா கொடும்பாவியைக் கொளுத்தினர். பிறகு தோழர் நசீம் இக்மத் விளக்க உரை நிகழ்த்தினார். நூற்றுக்கணக்கானோர் கூடி ஆதரவளித்தனர். ●

www.padippakam.com



1

2



3





# 'நீரோ'யினி

கன்னட வெறியர்கள் மூட்டிய இனவெறித் தீயில் கர்நாடகாவில் வாழும் தமிழர்கள் வெந்துகொண்டிருக்கையில் பூனாவுக்குப் போய் இன்னிசை கேட்டு மகிழ்ந்தார் 'நவீன நீரோ' பங்காரப்பா என்பதை நாம் அறிவோம்.

ஆனால் தமிழ் மக்களை ஏய்த்து ஓட்டுப் பொறுக்கிக் கொண்டுபோய் ஆட்சியில் அமர்ந்துள்ள ஜெயலலிதா துடித்துப் போனாரா? துவண்டு போனாரா? மத்திய அரசை எதிர்த்து மார்தட்டினாரா? கர்நாடகத் தமிழர்களுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கும் அவரது பினாமிகளின் அறிக்கைகள் மட்டுமே வந்தன. ஜெயலலிதாவோ பங்காரப்பாவுடன் போட்டி போட்டுக் கொண்டு நவீன 'நீரா'யினியாக மாறி விழா - விருந்து என்று கொட்டமடித்தார் என்பதுதான் உண்மை! இதோ அந்நாட்களில் ஜெயலலிதா கலந்து கொண்ட சில நிகழ்ச்சிகளின் படங்களை வெளியிட்டுள்ளோம். தமிழ் மக்களின் மீது பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலுக்குள்ள கரிசனை எத்தகையது என்பதை அவையே காட்டிவிடும்!

1 ஜெயாவிற்கு முகத்துதி பாடுபவர்களை முந்திக் கொண்டுள்ள சென்னை பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா



படிப்பகம்



# ஜயலலிதா!

2 ஆண்டுதோறும் பார்ப்பனக் கும்பல் கூடிக் கூத்தடிக்கும் இசைவிழாவில் சிறப்பு விருந்தினராக - தரகு முதலாளி டி.டி.வாசு வரவேற்கிறார்.

3 கர்நாடகத் தமிழர்கள் மீது இன வெறித் தாக்குதல் நடத்திய பங்காரப்பாவை டில்லி முதலமைச்சர்கள் மாநாட்டில் சந்தித்து மகிழ்ந்தார்.

4 18-வது அகில இந்தியச் சுற்றுலா - தொழிற்காட்சியைத் திறந்து வைத்து, பாராட்டு - பரிசு பெறுகிறார்.

5 மாதந்தவறாமல் வந்து போகும் காஞ்சி சங்கர மடத்தின் புதுடில்லி அரசியல் பிரதிநிதி ஆர்.வெங்கடராமனை பொன்னாடை போர்த்தி வரவேற்கிறார்.

6 மாமல்லபுரத்தில் நடந்த நாட்டிய விழாவை குத்துவிளக்கு ஏற்றி வைத்துக் கொண்டாடினார்.

இவையில்லாமல் விழுப்புரம், சென்னை, காங்கேயம், பர்கூரில் பல இலவச விழாக்களை நடத்தினார். விமானத்தில் இருந்து பூக்கள் சொரிந்தனர். மலராலேயே அமைத்த மேடைகளில் அலங்காரப் பதுமையாகத் தோன்றி ஏழை - எளிய மக்களுக்குக் கையசைத்தார்.



4



5

6



www.padippakam.com

# அசாமை ரணமாக்கும் 'காண்டாமிருக ராணுவம்'

பிரம்மபுத்திரா நதி அமைதியாக ஓடிக்கொண்டிருக்கும் அசாமின் சோனிட்பூர் மாவட்டம்; கடந்த செப்டம்பர் 17-ந் தேதியன்று தேகியாசுலி கிராமத்தைச் சேர்ந்த காண்டிராக்டர் ராஜ் போங்சியை இராணுவம் இழுத்துச் சென்றது. அடுத்த நாள், வயல்வெளியில் அவர் பிணமாகக் கிடந்தார். அவர் ஒரு 'உல்பா' தீவிரவாதி என்றும் இராணுவத்துடன் நடந்த மோதலில் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்றும் அரசு விளக்கமளித்தது. ஆத்திரமடைந்த கிராம மக்கள் ராஜ் போங்சியின் பிணத்துடன் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தி நீதி விசாரணை கோரினர். பீதியடைந்த இராணுவமும் அரசும் சோனிட்பூர் உள்ளிட்டு எட்டு மாவட்டங்களை கலவரப் பகுதியாக அறிவித்து, சட்டபூர்வ நடவடிக்கை எதிலும் மக்கள் ஈடுபடக்கூடாது என்று தடைவிதித்தனர்.

அசாமில் 'உல்பா' போராளிகளுக்கு எதிராக இந்திய அரசும், ராணுவமும் கட்டவிழ்த்து விட்டுள்ள பயங்கரவாத அடக்குமுறைக்கு முதற் பலியானார் ராஜ்போங்சி. அடுத்த ஒரு வார காலத்திற்குள் 13 போராளிகளும் 76 அப்பாவி பொது மக்களும் இராணுவக் கும்பலால் சுட்டுக் கொல்லப்பட்டனர் அசாமில் காங்கிரசு கட்சி ஆட்சிக்கு வந்து 75 நாட்களே ஆகியிருந்த நிலையில், முதல்வர் சைக்கியாவைக்கூட கலந்தாலோசிக்காமல் திடீரென செப்டம்பர் 14-ந் தேதி நள்ளிரவில் இந்திய ராணுவத்தின் ''காண்டாமிருக'' நடவடிக்கை ஏவிவிடப்பட்டது. 'பிரிவினைவாத, பயங்கரவாத' உல்பா இயக்கத்தை ஒழித்துக்கட்டி, அமைதியையும் தேச ஒற்றுமையையும் நிலைநாட்டுவதாகக் கூறிக்கொண்டு 40,000பேர் கொண்ட இராணுவப் படையும், 10,000த்துக்கும் மேற்பட்ட துணை இராணுவப் படைகளும், இது தவிர மாநில போலீசுப் படையும் அசாமில் குவிக்கப்பட்டன. அன்றிலிருந்து, இந்திய இராணுவம் கட்டவிழ்த்து விட்டுள்ள அரசு பயங்கரவாத அடக்குமுறையால் அசாம் மாநிலமே குருதிச் சேறாகிவிட்டது. போராளிகளின் கூட்டாளிகள் என்று குழந்தைகள் உட்பட அப்பாவிகளைப் பிடித்து சித்திரவதை செய்வதும், பெண்களைக் கும்பலாக கற்பழிப்பதும் ராணுவத்தின் அன்றாட நடவடிக்கைகளாகிவிட்டன.

அக்டோபர் மாதத் துவக்கத்தில் கோபூர் அருகிலுள்ள ஒரு கிராமத்தில் ராஜு பருவா என்கிற 20 வயது கல்லூரி மாணவியை சீருடை அணியாத ராணுவத்தினர் 4 பேர் கும்பலாக கற்பழித்துக் கொன்றனர். இந்த விவகாரம் அம்பலமாகி, மக்கள் ஆத்திரமடைந்து போராடத் தொடங்கியதும் வேறு வழியின்றி ராணுவத்தின் ஒரு கம்பெனி ஹவில்தார் கைது செய்யப்பட்டார்.

கௌகாத்தி பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சில மாணவர்கள் போராளிகளுடன் தொடர்புடையவர்கள் என்று கூறி வகுப்பறைக்குள்ளும், விடுதிக்குள்ளும் அத்துமீறி நுழைந்த ராணுவம், 50க்கும் மேற்பட்ட மாணவர்களைக் கைது செய்தது. கிரிமினல்களைப்போல அவர்களின் கைகளைக்கட்டி, இராணுவ முகாம் வரை அவர்களை ஓடச் சொல்லி துரத்திச் சென்று சித்திரவதை செய்து அவமானப்படுத்தியது. இந்த அட்டூழியத்தை எதிர்த்து பல்கலைக் கழக துணை வேந்தரே மாணவர்களைத் திரட்டி போராட்டத்தை தலைமையேற்று வழி நடத்தினார். இதேபோல, தீபக் சைக்கியா என்ற மாணவர் தலைவரை ராணுவம் கைது செய்ததைக் கண்டித்து மருத்துவக் கல்லூரி மாணவர்கள் போராட்டத்தில் குதித்தனர்.

அப்பாவிகளை சிறை பிடித்து சித்திரவதை செய்வது, கைது செய்தவர்களைச் சுட்டுக் கொன்றுவிட்டு காணாமல் போனதாகப் புளுகுவது, வீடு புகுந்து சூறையாடுவது என்பதாக ராணுவத்தின் அட்டூழியங்கள் பெருகத் தொடங்கியதும் அனைத்து அசாம் மாணவர் சங்கத்தினர் கடந்த அக்டோபர் 8-ம் தேதியன்று அமைதியான கண்டன ஊர்வலம் நடத்த முயன்றனர். ஆனால் ராணுவம் மாணவர் தலைவர்களைக் கைது செய்து ஊரடங்கு உத்திரவு போட்டது. இதை எதிர்த்து அக்டோபர் 12-ந் தேதியன்று மக்கள் ஆதரவுடன் கடையடைப்பு போராட்டத்தை மாணவர்கள் நடத்தினர்.

அசாம் கணபரிஷத் கட்சியின் ராஜ்ய சபா எம்.பி.நாகென்சைக்கியா. இவர் இந்திய பத்திரிகை கவுன்சிலின் உறுப்பினரும் ஆவார். மாவட்ட மாஜிஸ்டிரேட்டின் ஆலோசனையைக் கூட கேட்காமல், இந்திய ராணுவம் திப்ருகார் நகரிலுள்ள அவரது வீட்டை நவம்பர் 17-ந் தேதி திடீர் சோதனை நடத்தி சூறையாடியது. இத்தனைக்கும் அவர் வீட்டில் இல்லாதபோதே இந்த அட்டூழியம் நடந்தது. நாடாளுமன்ற உறுப்பினருக்கே இந்த கதி என்றால், சாமானிய மக்களின் நிலையைப்பற்றி சொல்ல வேண்டியதில்லை.

உல்பா போராளிகளைத் தேடுவது என்ற பெயரில் ஜோர்காட் மாவட்டத்தில் எல்லா கிராமங்களிலும் ராணுவம் வீடு புகுந்து சோதனை நடத்தி கிராம மக்களை மிருகத்தனமாக தாக்கியது. இளைஞர்களை 'உல்பா' போராளிகளின் கூட்டாளிகள் என்று முத்திரை குத்தி கிராம மக்கள் முன்னிலையிலேயே சித்திரவதை செய்தது. மாணவிகள் பலரை ''உல்பா''-க்களின் ரகசிய செய்தித் தொடர்பாளர்கள் என்று பொய்க் குற்றம் சாட்டி கைது செய்து, பின்னர் கற்பழித்துக் கொன்றது, திடீரென பேருந்துகளை வழிமறித்து நிறுத்தி, போராளிகளின் கூட்டாளிகள் என்று பல அப்பாவிகளைக் கைது செய்வது, பின்னர் ராணுவத்துடனான மோதலில் அவர்கள் கொல்லப்பட்டதாகப் புளுகுவது என்பதாக ராணுவத்தின் அக்கிரமங்கள் பெருகத் தொடங்கின.

இத்தகைய அட்டூழியங்களை எதிர்த்து ஜோர்காட் மாவட்ட மக்கள் கண்டன ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை அக்டோபர் 12-ந் தேதியன்று நடத்தினர். ஆத்திரமடைந்த ராணுவம், அமைதியாகச் சென்ற ஊர்வலத்தின் மீது கண்மூடித்தனமான தாக்குதலை நடத்தி பலரது மண்டையைப் பிளந்தது. நூற்றுக்

**அசாம் கிராமங்களை ரணகளமாக்கும் இராணுவக் கும்பல்; அரசு பயங்கரவாத அட்டூழியம்.**



படிப்பகம்

www.padippakam.com

# பயங்காரவாதப் பிடியில் அசாம் பத்திரிகைகள்

அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடும் போது, அக்கொடுமைகளைப் பற்றிய செய்திகள் வெளிவரா வண்ணம் பத்திரிகைகளின் குரல்வளையை நெறிப்பதென்பது பாசிஸ்டுகள் வழக்கமாகப் பின்பற்றும் உத்தி. அசாமில் காண்டாமிருக நடவடிக்கை என்ற பெயரில் அரச பயங்கரவாதத்தை ஏவிய ஆட்சியாளர்கள் அடுத்த சில நாட்களிலேயே பத்திரிகைகளின் மீது பாய்ந்தனர்.

கடந்த நவம்பர் 25, 26 தேதிகளில் "அஜிர் அசாம்" எனும் பத்திரிகையின் செய்திக் கட்டுரையாளரான மன்ஜித் மகந்தாவும், "சென்டினெல்" பத்திரிகையின் உதவி ஆசிரியரான ராஜிப் போராவும் பயங்கரவாத த்டுப்புச் சட்டத்தின் கீழ் ("தடா") இராணுவத்தால் கைது செய்யப்பட்டனர். ஏறத்தாழ 10 நாட்களுக்கு சித்திரவதை செய்த பின்னரே இராணுவம் இவர்களைக் கோர்ட்டுக்கு கொண்டு வந்தது. இவர்கள் தடை செய்யப்பட்ட "உல்பா" அமைப்பில் ஊக்கமாகச் செயல்பட்டு, அதன் ரகசிய தொடர்பாளராக இருந்தனர் என்று ராணுவம் குற்றம் சாட்டுகிறது. தமிழகத்தில் முன்னாள் உள்துறை செயலர் நாகராஜனிடம் வாக்குமூலம் பெற்றதைப் போல, இவர்களிடமும் வாக்குமூலத்தைப் பெற்று அரசு பயங்கரவாதிகள் விளம்பரப்படுத்தினர்.

பத்திரிகையாளர்களின் மீதான இத் தாக்குதலைக் கண்டித்து, அசாமிலுள்ள அனைத்து பத்திரிகைகளும் அரசு நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் புறக்கணித்தன. தலையங்கப் பகுதியை கருப்பாக வெளியிட்டு தமது எதிர்ப்பைத் தெரிவித்தன. நவம்.29 அன்று அனைத்து பத்திரிகையாளர்களும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர். பின்னர் டிசம்.8 முதலாக போலீசு கமிஷனர் அலுவலகம் முன்னர் தொடர்ந்து தர்ணா போராட்டம் நடத்தினர்.

உடனே காங்கிரசு பயங்கரவாத அரசு 144 தடையுத்திரவு போட்டு அனைவரையும் விரட்டியது. பல்வேறு பத்திரிகையாளர்கள், செய்தியாளர்களின் வீடு புகுந்து



சோதனை நடத்தி பலரை "உல் பா"வுடன் தொடர்புடையவர்கள் என்று பொய்குற்றம் சாட்டி சிறையிலடைத்துள்ளது. "அசாம் டிரிப்யூன்" நாளேட்டின் முதுநிலை செய்தியாளரும், சிவில் உரிமைக் கழக செயல்வீரருமான சரத்போர்கா காடி இவ்வாறு பொய் வழக்கு சோடிக்கப்பட்டு "தடா" சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். "தனிக் அசாம்" நாளேட்டின் ஆசிரியர் இராணுவக் கும்பலால் மிருகத்தனமாக தாக்கப்பட்டார். இக் காட்டுமிராண்டித் தனம் அம்பலமானதால் வேறு வழியின்றி அசாம் அரசு பகிரங்கமாக மன்னிப்பு கோரியது.

"உல்பா" போராளிகளுக்கு எதிராக இந்திய அரசும் இராணுவமும் "பஜ்ராங் நடவடிக்கை" என்ற பெயரில் முன்பு அடக்குமுறையை ஏவின. அப்போது இராணுவத்தின் அட்டூழியங்களையும் கொலைகளையும் பத்திரிகைகளும் சிவில் உரிமை அமைப்புகளும் அம்பலப்படுத்தி எதிர்த்தன. மக்களிடம் அம்பலப்பட்டு தனிமைப்பட்ட இராணுவக் கும்பல் பஜ்ராங் நடவடிக்கையில் தோல்வியடைந்து பின்வாங்கியது. அதனால் ஏற்பட்ட ஆத்திரத்தையும் வெறுப்பையும் தற்போதைய "காண்டாமிருக நடவடிக்கையில்" இராணுவம் வெளிக்காட்டுகிறது. இராணுவத்தை விமர்சித்தவர்களைப் பழிவாங்கும் நடவடிக்கையாகவே, இப்போது பத்திரிகையாளர்களும் சிவில் உரிமை அமைப்பினரும் கைது செய்யப்படுகின்றனர்.

இப்படி, கருத்துச் சுதந்திரத்துக்கு கல்லறை கட்டிவிட்டு அசாமில் அமைதி திரும்பிவிட்டதாக அரசு பயங்கரவாதிகள் கதைக்கிறார்கள். ஆனால், புதைக்கப்படும் உரிமைகள் ஒருநாள் பூதமாகக் கிளம்பப் போவது மட்டும் நிச்சயம்!

கணக்கானோரை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து சித்திரவதை செய்தது. பின்னர் இவர்களில் சிலர் மோதலில் மாண்டதாக செய்திகள் வந்தன.

"எனது எட்டு வயது மகன் என்ன குற்றம் செய்தான்? நாயைப் போல சுட்டுக் கொல்ல அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது" என்று குமுறினாள் ஒரு தாய். "கடந்த அக்டோபர் மாதம் 17-ம் தேதியன்று நள்ளிரவில் அவரைக் கைது செய்து கொண்டு போனார்கள்; இன்றுவரை அவர் உயிருடன் இருக்கிறாரா என்று கூட எங்களுக்குத் தெரியவில்லை" என்று விம்முகிறாள், கணவனைப் பறிகொடுத்த ஒரு சகோதரி. ஜோர்காட், சோனிட்பூர், லக்கிம்பூர், காம்ரூப் முதலான மாவட்டங்களில் தொடர்ந்து ஊரடங்கு உத்திரவு போடப்பட்டதால் அப்பகுதிவாழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். தமது அன்றாட பிழைப்பு பாதிக்கப்படுவதால் ஊரடங்கு உத்திரவை ரத்து செய்யக்கோரி அக்டோபர் இறுதியில் அமைதியாக ஊர்வலம் சென்ற போது, துணை ராணுவப் படைகள் காட்டுமிராண்டித்தனமாக தடியடி நடத்தி நூற்றுக் கணக்கானோரைக் படுகாயப்படுத்தின. இளைஞர்கள் பலரை போராளிகள் என்று முத்திரை குத்தி சிறையிலடைத்தன.

அசாமில் தொடரும் ராணுவ அட்டூழியங்களுக்கு எதிராக தன்னெழுச்சியாக மக்கள் போராடத் துவங்கிய பின்னரே, ஒருசில ஓட்டுக் கட்சிகள் நமது எதிர்ப்பைக் காட்டின. அசாம் கணபரிஷத், நாதுன் அசாம் கணபரிஷத், சுயாட்சி மாநில கோரிக்கைக் கமிட்டி, "சுசி" ஆகிய கட்சிகள் தலைநகர் கௌகாத்தியிலும், டெல்லியிலும் ராணுவ அட்டூழியங்களை எதிர்த்து தர்ணா போராட்டங்களையும், கண்டன ஆர்ப்பாட்டங்களையும் நடத்தின. ஆனால் ஜனதாதளம், பாரதீய ஜனதா மற்றும் போலிக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் இன்று வரை ராணுவ அட்டூழியங்களை எதிர்த்து வாயே திறக்கவில்லை.

ஓட்டுக் கட்சிகள் அறிந்தே துரோகமிழைத்த போதிலும், ஒரு பிரிவு அறிவு ஜீவிகளும். சிவில் உரிமை இயக்கத்தினரும், பத்திரிகைகளும் ராணுவ அட்டூழியங்களுக்கு எதிராக மக்களுடன் ஐக்கியப்பட்டு தொடர்ந்து போராடி வருகின்றனர். அனைத்து அசாம் ஜனநாயக குடிமக்கள் இயக்கம் என்ற அமைப்பின் கீழ் பிரபல பத்திரிகையாளர்கள், அறிவு ஜீவிகள், பேராசிரியர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் முதலானோர் அணிதிரண்டு கடந்த டிசம்பர் மாதத்தில் கண்டன ஊர்வலத்தை நடத்தினர். அதன் பின்னர் பிரபல சமூகவியலாளர்களும், மனித உரிமை இயக்கத்தினரும் அசாமுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை விளக்கி பல்வேறு கருத்தரங்குகளை நடத்தியுள்ளனர். பலவகையான இடர்ப்பாடுகள், அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் அசாமிய பத்திரிக்கைகள் தொடர்ந்து ராணுவ அட்டூழியங்களை அம்பலப்படுத்தி வருகின்றன.

உல்பா போராளிகளின் தலைமையிலான அசாம் மக்களின் சுய நிர்ணய உரிமைக்கான போராட்டம் பிரிவினைவாதம், பிளவுவாதமாகும்; நாட்டைத் துண்டாட அன்னிய நாடுகள் செய்யும் சதி; அப்போராட்டத்தை ஆதரிப்பது தேசவிரோதமானது என்று பயங்கரவாத பீதியூட்டியும் தேசிய வெறியூட்டியும் காங்கிரசு ஆட்சியாளர்கள் தொடர்ந்து தமது அரசு பயங்கரவாத அடக்குமுறையை ஏவி வருகின்றனர். ஆனால் ஏறத்தாழ இரண்டு தலைமுறைக்கும் மேலாகத் தொடரும் அசாம் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போரை அரசு பயங்கரவாதத்தால் அடக்கிவிட முடியாது என்பதையே அண்மைக்கால சம்பவங்கள் நிரூபித்துக் காட்டுகின்றன.

காண்டாமிருக நடவடிக்கை என்ற பெயரில் காட்டுமிராண்டித் தனத்தை இந்திய ராணுவம் கட்டவிழ்த்துவிட்ட போதி

www.padippakam.com



அப்பாவி இளைஞர்களை ''உல்பா''வின் கூட்டாளிகள் என்று கைது செய்யும் துணை ராணுவப்படை; பயங்கரவாத அடக்குமுறை.

லும், உல்பா இயக்கத்தின் ஒரு சில தலைவர்களை மட்டுமே சிறைபிடிக்க முடிந்துள்ளது. ''பஞ்சாப் பயங்கரவாதிகளைப் போல உல்பா இயக்கத்தினரை தனிமைப்படுத்தி தாக்கி அழிக்க முடிவதில்லை. அவர்கள் மக்களோடு கலந்திருக்கிறார்கள். மக்கள் கூட்டத்தில் யார் போராளி, யார் அப்பாவி என்று எங்களால் இனம் பிரிக்க முடியவில்லை'' என்ற தனது தோல்வியை ஒப்புக் கொண்டுள்ளார், லெப்டிணன்ட் ஜெனரல் அஜாய் சிங். இவர் காண்டாமிருக நடவடிக்கையை தலைமையேற்று வழிநடத்தும் தலைமை தள்பதி ஆவார்.

உல்பா போராளிகளுக்கு எதிராக கடந்த 1990 இறுதியில், பஜ்ராங் நடவடிக்கை என்ற பெயரில் இந்திய ராணுவத்தின் அரச பயங்கரவாதம் ஏவப்பட்டது. அப்பாவிகளைப் பிடித்து சுட்டுக் கொல்வது, கொடூரமான சித்திரவதை, பாலியல் வன்முறை என ராணுவத்தின் அட்டூழியங்களால் அசாம் மாநிலம் ரணகளமாகியது. பத்திரிகைகள் மற்றும் ஜனநாயக உரிமைக்கான இயக்கங்களின் தொடர்ச்சியான போராட்டங்கள் காரணமாகவும், அசாம் கணபரிஷத்தின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டதாலும் பஜ்ராங் நடவடிக்கையை நிறுத்தி இந்திய ராணுவம் பின்வாங்கியது.

பின்னர் சைக்கியா தலைமையில் காங்கிரசு ஆட்சி அமைந்தும், மீண்டும் காண்டாமிருக நடவடிக்கை என்ற பெயரில் இந்திய ராணுவத்தின் பயங்கரவாதம் இப்போது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. ராணுவ அட்டூழியங்களால் அப்பாவி பொது மக்கள் அல்லற்படுவதன் காரணமாக, தாம் பிடித்துச் சென்ற பிணைக் கைதிளை விடுவித்தும் நிபந்தனையற்ற போர் நிறுத்தத்தை அறிவித்தும் உல்பா போராளிகள் தற்காலிகமாகப் பின்வாங்கினார்கள். இதைக் காட்டி, காண்டாமிருக நடவடிக்கை வெற்றி பெற்றுவிட்டதாகப் பாராட்டி, அத்துமீறல் பற்றிய புகார்களைக் கண்டு கொள்ளாமல் தீவிரவாதிகளை பூண்டோடு அழிக்குமாறு முதலாளித்துவ பத்திரிக்கைகள் இந்திய ராணுவத்தை உசுப்பி விடுகின்றனர். அதன்படி, ஒருபுறம் பேச்சுவார்த்தை நாடகமாடிக் கொண்டே மறுபுறம் அரசு பயங்கரவாதத்தை ஏவி அடக்குகிறது காங்கிரசு அரசு.

காஷ்மீர், பஞ்சாபைப் போல அசாமையும் இந்தியாவின் காலனியாக மாற்றி, அத்தேசிய இன மக்களை துடிக்கத் துடிக்க கொன்றொழிப்பதை மனித நேயமுள்ள எவரும் சகித்துக் கொண்டிருக்க முடியாது. அரசு பயங்கரவாத அட்டூழியங்களை அம்பலப்படுத்தி, அசாம் மக்களின் நியாயமான சுயநிர்ணய உரிமைப் போரை ஆதரித்து உரத்த குரலெழுப்ப வேண்டிய தருணமிது.

● மனோகரன்

# தர்மபுரி கூட்டுறவு நூற்பாலை நிர்வாகத்தின் பகல் கொள்ளை

*ஆட்சியாளர்களின் உருப்படியற்ற திட்டங்களாலும், தொடர்ச்சியான புறக்கணிப்பினாலும் கூட்டுறவு நிறுவனங்கள் இழுபறியில் இயங்கி வருகின்றன. இவை அதிகாரவர்க்கத்தின் ஊழலால் மேலும் நொடிந்து போய் மூடுவிழாவை நோக்கித் தள்ளப்படுகின்றன. இதற்கு தர்மபுரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை ஒரு எடுத்துக்காட்டாகி வருகிறது. இவ்வாலையின் நிர்வாகத்தின் பகல் கொள்ளை அண்மையில் அம்பலத்திற்கு வந்து நாறியது!*

*ஆலையில் இயங்கி வரும் மோட்டார்கள் பழுது அடைந்தால் (காயில் போனால்) அதிலுள்ள பழைய கம்பிகளை 'ஸ்டாக் ரிஜிஸ்டரில்' பதிவு செய்து அதற்குரியவரிடம் ஒப்படைத்து விட்டு புதிய கம்பியை வாங்கிப் போட வேண்டும். அவ்வாறு ஒப்படைக்கப்படும் பழைய கம்பிகள் 300 கிலோ ஆனதும் ஏலம் விட வேண்டும். ஏல நோட்டிசை தகவல் பலகையில் ஒட்ட வேண்டும் அல்லது 'கொட்டேசன்' கேட்டு செய்தி தாளில் விளம்பரம் செய்ய வேண்டும். ஆனால் ஆலை விதிமுறைகள் எதுவும் கடைபிடிக்கப்படாமல் மறைமுகமாக 'கொட்டேசன்' பெறப்பட்டு மிகக் குறைந்த விலைக்கு ஊத்தங்கரை கலைவாணி எலெக்ட்ரிக்கல்ஸ் கடைக்கு விற்கப்பட்டுள்ளது. இதில் கணிசமான தொகை கமிஷன் அடிக்கப்பட்டுள்ளது. ஏலம் முடிந்ததும் கம்பியை எடைபோடும் போது 150 கிலோ தான் இருந்தது. 150 கிலோ கம்பி திருடி விற்கப்பட்டுள்ளது. இது கிடங்கு பொறுப்பாளர், வாட்ச்மேன் ஆகியோர் உடந்தையோடு நடந்துள்ளது.*

*சாதாரண தவறு செய்தாலே தொழிலாளியை உடனடி வேலை நீக்கம் செய்து பழி*

*வாங்கும் நிர்வாக இயக்குனர், இக்கொள்ளை சம்பந்தமாக கண்துடைப்பு நடவடிக்கையே மேற்கொண்டார். சம்பந்தப்பட்டவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் இல்லாமல் கம்பிக்குரிய 'பெனால்டியை' வசூலித்தார்.*

*மேலும் ஆலை வளாகத்தில் சைக்கிள் நிறுத்தம் இருக்கும் போது அதிகாரிகள் தங்களது வாகனங்களை அவரவர் இருப்பிடத்திற்கே எடுத்துச் சென்று அந்த வாகனப் பெட்டியில் ஆலையின் விலை உயர்ந்த பொருட்களை கடத்துவதை இவர் கண்டு கொள்வதே இல்லை.*

*நூல் கோன்களை பண்டல் செய்யும் சாக்குப் பையிலும் கொள்ளை! 2 பேல் சாக்கு வாங்கியதாக பொய் கணக்கெழுதி ரூ.10,000க்கு மேல் சுருட்டப்பட்டுள்ளது. இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் இல்லை. அதிகார வர்க்கத்தின் ஊழலால் ஆலை திவால் நிலையை நோக்கி முன்னேறுகிறது. என்வே இத்தகைய அநீதிகளுக்கு எதிராக குரல் கொடுக்க தொழிலாளர்கள் புரட்சிகர தொழிற்சங்கத்தைக் கட்டியமைத்து போராடுவது இன்றைய உடனடிக் கடமையாக உள்ளது.*

— தகவல்: மில் தொழிலாளர் பிரச்சாரக் குழு, ஊத்தங்கரை.


படிப்பகம்

www.padippakam.com

அமெரிக்க ஒலிபரப்பு நிறுவனமான 'வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா', இலங்கையின் ஒலிபரப்பு நிறுவனத்தின் வாயிலாக தனது ஒலிபரப்பை தெற்கு ஆசியா, சீனா, இந்தோனேசியா ஆகிய பகுதிகளுக்கு அஞ்சல் செய்து வந்தது. கடந்த டிசம்பர் 17ந் தேதி தனது ஒலிபரப்பிற்கான அஞ்சல் நிலையத்தை (Relay Station) தனியாக நிறுவிக் கொள்வதற்காக 'வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா இலங்கை அரசுடன் ஒரு ஒப்பந்தம் போட்டுள்ளது. இதன் மூலம் அரேபிய தீபகற்பம் மற்றும் தெற்கு - கிழக்கு ஆப்பிரிக்காவிற்கு 'வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா'வின் ஒலிபரப்பை அஞ்சல் செய்ய முடியும். இலங்கை அரசு இதற்கென சில்லா மாவட்டத்தில் 400 ஏக்கர் நிலத்தை ஒதுக்கிக் கொடுத்துள்ளது. இப்பகுதியிலுள்ள கிராம மக்கள் இந்நிலையத்தின் மூலம் தங்களுடைய வாழ்வும், பண்பாடும் பாதிக்கப்படும் எனக்கூறி எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். ஆனால் 'வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா' அமைக்கப்படுவதன் நோக்கமே இதுதான் என்பதை அமெரிக்காவின் முன்னாள் ஒலிபரப்பு நிறுவன இயக்குனர் ஜான் ஹக்ஸ் என்பவரே ஒத்துக் கொள்கிறார். ''ஆயுதத்தைக் காட்டிலும் வார்த்தை மூலம் (வானொலி பரப்பு மூலம்) நடத்தும் மலிவான யுத்தத்தில் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. இவ்வுலகை கட்டிப்போட்டு விடுவோம்'' என்கிறார். இதில் என்ன வெட்கக்கேடு என்னவென்றால் இந்திய அரசு, இலங்கை வெளியுறவு மந்திரியிடம் இந்த அஞ்சல் நிலையத்தை எதிர்க்க மாட்டோம் என உறுதி கூறியுள்ளது.

டில்லியில் பிரபல வக்கீல் எல்.ஆர் குப்தாவிற்குச் சொந்தமான அடுக்குமாடிக் கட்டிடத்தை வருமான வரி அதிகாரிகள் சோதனையிட்டபோது சட்டவிரோதச் சொத்துக்களும், கறுப்புப் பணமும் ஏராளமாக சிக்கின. ஆனால், வருமான வரி அதிகாரிகள் தனது குடும்பத்தினரை முறைகேடாக நடத்தியதாகவும் பல லட்சம் ரூபாய் நகைகளை திருடிக் கொண்டதாகவும் வழக்கு தொடுத்தார் குப்தா. இவ்வழக்கை விசாரித்த டில்லி உயர் நீதிமன்ற நீதிபதிகள் இருவர், வருமான வரித்துறை அதிகாரிகள் தரப்பு வாதங்களில் நியாயம் உள்ளது என ஒத்துக் கொண்டனர். அதாவது ''வருமான வரி அதிகாரிகளுக்கு 132 (i) மற்றும் 132 (i)(C) ஆகிய பிரிவு சட்டங்கள் மூலம் கைது செய்ய முடியாது. சோதனை மட்டுமே. சோதனை செய்வதிலும் பல வரம்புகள் விதிக்கப்படுகின்றன! முறையான நடவடிக்கை மூலம் கிடைக்கும் கால தாமதத்தைப் பயன்படுத்தி சொத்துக்கள் மற்றும் கறுப்புப் பணத்தை மறைத்தும் பொய் கணக்குகளை ஜோடித்தும் சம்பந்தப்பட்டவர்கள் எளிதாக தப்பித்துக் கொள்கிறார்கள்'' என்பதுதான்

இருந்தாலும் 28.77 கோடி ரூபாய்க்குரிய வருமான வரியை கட்டாமல் ஏய்த்து வரும் குப்தாவை நீதிபதிகளால் சட்டப்படி தண்டிக்க முடியவில்லை. வருமான வரி அதிகாரிகள் கைப்பற்றிய பொருட்களை குப்தாவிடம் திருப்பி ஒப்படைக்கும்படி தீர்ப்பளித்துள்ளனர். இவ்வழக்கு வருமான வரிச் சட்டங்கள் ஒரு காகிதப்புலி என்பதை



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

அம்பலப்படுத்துவதோடு நீதிமன்றத்தின் கையாலாகாத் தனத்தையும் வெட்ட வெளிச்சமாக்குகிறது.

'தடா' சட்டத்தின் கீழ் எதிர்க்கட்சியினரும், போராளிகளும், புரட்சியாளர்களும் மட்டுமல்ல தொழிலாளர்களும், விவசாயிகளும், அப்பாவி மக்களும், சிறுவர்களும் கூட கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்படுதற்கு மேலும் ஒரு சான்று இது. குஜராத்தில், ஜாம்ஜோத்பூர் போலீசு நிலையத்தில் 'தடா'வில் கைது செய்யப்பட்டு ஒரு கர்ப்பிணிப் பெண்ணும், ஒரு 8 வயது சிறுவனும் கொடுமையான சித்ரவதைக்கு உள்ளாகிய செய்தி மெல்ல கசிந்து அக்டோபர் 30ந் தேதி வெளிவந்தது. வயலில் இருந்து திரும்பிய அப்பாவி விவசாயிகள் 12 பேரும், மின் வேலை செய்தவர்கள் 3 பேரும், வேலை முடித்து திரும்பிய ஒரு காவலாளியும், ஒரு பத்திரிக்கையாளரும், ஒரு கோயில் தலைமைகர்த்தாவும் 'தடா'வின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். இதுவல்லாமல் பலர் 'தடா'வில் போட்டுவிடுவதாக போலீசால் மிரட்டப்பட்டுள்ளனர். இது தொடர்பாக பல புகார் மனுக்கள் வந்ததும் அரசு, பி.பி.தேசாய் தலைமையில் நீதிமன்ற விசாரணை நடத்தியது. இவ்விசாரணையிலும் போலீசின் அக்கிரமங்கள் உண்மை என நிரூபணமானதும் வேறு வழியில்லாமல் ஜாம்ஜோத்பூர் நகரின் உதவிக் கமிஷனரை மாற்றம் செய்துள்ளது அரசு.

''இந்தியாவிலேயே 'லாக் - அப்' கொலைகள் அதிகமுள்ள மாநிலமாக ஆந்திரா இருந்து வந்தது. இன்று, ஆந்திராவை பின்னுக்குத் தள்ளிவிட்டு மேற்கு வங்கம் முன்னிலைக்கு வந்துள்ளது. மேற்கு வங்கத்தில் இந்திரா காந்தியின் 'எமர்ஜன்சி' காலக் கட்டத்திலிருந்து 20 டிசம்பர் 1991 வரை 118 பேர் 'லாக் - அப்'பில் கொல்லப்பட்டுள்ளனர்'' என மனித உரிமை பாதுகாப்பு கழகம் (APDR) சர்வதேச பொதுமன்னிப்பு கழகம் (Amnesty International) போன்ற அமைப்புகள் அறிவித்துள்ளன. சர்வதேச பொது மன்னிப்பு கழகம், இத்தகைய 'லாக் - அப் கொலைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கோரி மாநில அரசுக்கு ஏற்கனவே ஒரு அறிக்கை சமர்ப்பித்திருந்தது. அதற்குப் பிறகும் நிலைமை அப்படியே தொடர்வதால் 'லாக் - அப்' வன்முறைகளுக்கு எதிரான இயக்கத்திற்குரிய தளமாக 1992ம் வருடம் மேற்கு வங்கத்தை தேர்ந்தெடுத்துள்ளது.

பிரபீர் தேப்நாத்தை சிகரெட் நெருப்பால் அவரது தொடைகளை ரணப்படுத்தி சித்திரவதை செய்து கொன்றுவிட்டு, தேப்நாத் போதைப் பழக்கம் உள்ளவர் என்றும் தற்கொலை செய்து கொண்டார் என்றும் புளுகியது மேற்கு வங்க போலீசு.

மிட்நாப்பூரைச் சேர்ந்த மாணவர் ஒருவர், சுபாங்கர் சாரங்கி என்ற போலீசு அதிகாரியால் கொல்லப்பட்டது அம்பலமானது. இவ்வழக்கில் அந்த போலீசு அதிகாரி 'சஸ்பெண்ட்' கூட செய்யப்படவில்லை. மாறாக கொல்லப்பட்ட மாணவனின் தந்தையே தொல்லைக்குட்படுத்தப்பட்டு வருகிறார்.

மேற்கு வங்கத்தில் போலீசை மக்களின் நண்பர்களாக மாற்றிவிட்டோம் என 'மார்க்சிஸ்டுகள்' மார்தட்டியதன் உண்மை அர்த்தம் இப்பொழுதுதான் புரிகிறது?!



படிப்பகம்

www.padippakam.com

# போலிகளின் மாநாடு: வெங்காயத் தோலை உரித்த கதை

ஓட்டுப் பொறுக்குவதையே புரட்சிகர நடவடிக்கையாகக் கொண்டுள்ள நாற்காலிக் கம்யூனிஸ்டுகளான 'மார்க்சிஸ்டுகள்', ஐரோப்பிய பாணி சமூக ஜனநாயகக் கட்சியாக சீரழிவதை நோக்கி வேகமாக முன்னேறி வருகிறார்கள். அண்மையில் சென்னையில் நடந்தேறிய அக்கட்சியின் 14-வது அகில இந்திய மாநாடு இதை மேலும் நிரூபித்துக் காட்டியுள்ளது.

"கிழக்கு ஐரோப்பிய போலி சோசலிச நாடுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், குறிப்பாக சோவியத் ஒன்றியத்தின் சிதைவு ஆகிய சூழ்நிலையில் மாநாடு கூட்டியுள்ள மார்க்சிஸ்டுகள் என்ன முடிவு எடுப்பார்களோ? வறட்டுவாதிகளாக, காலாவதியான கம்யூனிசத்தை ஆதரிப்பார்களா? அல்லது மாறிய சூழ்நிலைக்கேற்ப புதிய முடிவுகள் எடுப்பார்களா?" என்று முதலாளித்துவப் பத்திரிகைகள் ஊகங்களை வெளியிட்டு பரபரப்பூட்டின. கடைசியாக வெங்காயத் தோலை உரித்துப் பார்த்த கதையாக சித்தாந்த, அரசியல் பிரச்சினைகளில் எந்தவொரு முடிவுமின்றி இம்மாநாடு கூடிக் கலைந்துள்ளது.

## சித்தாந்த ஓட்டாண்டித்தனம்

ரஷியாவில் 1985ல் கோர்பச்சேவ் ஆட்சிக்கு வந்து கிளாஸ் நாஸ்ட், பெரஸ்த்ரோய்கா கொள்கைகளை அறிவித்து முதலாளித்துவ மீட்சியைத் தீவிரப்படுத்தியபோது, அது சோசலிச அமைப்பில் ஏற்பட்ட குறைபாடுகளை சீர்திருத்தும் நடவடிக்கை என்று 'மார்க்சிஸ்டுகள்' வியாக்கியானம் செய்தனர். ரஷியாவை "சோசலிச நாடு" என்றும், கோர்பச்சேவை "தோழர்" என்றும் துதிபாடினர். அதே போல கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நடந்த ஆட்சிக் கவிழ்ப்புகளைக் கூட சோலிச் அமைப்பில் ஏற்பட்ட தவறுகள், குறைபாடுகளின் விளைவுதான் என்றனர்.

அதன் பிறகு சோவியத் ஒன்றியத்தில் கோர்பச்சேவுக்கு எதிராக யேனயேவ் கும்பல் அரண்மனை ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தியதும் 'மார்க்சிஸ்டு'கள் அவசர அவசரமாக அதை ஆதரித்தனர். ஆனால் மூன்று நாட்களில் யேனயேவ் கும்பலின் அதிரடிப் புரட்சி தோல்வியடைந்ததும் செய்வதறியாது விழிபிதுங்கி நின்ற 'மார்க்சிஸ்டுகள்' மீண்டும் ஆட்சிக்கு வந்த கோர்பி-யேல்ட்சின் கும்பலை எதிர்ப்பதாக நிலைப்பாடு எடுத்தனர். அதன் பிறகு சோவியத் ஒன்றியம் சிதைந்து கோர்பி பதவியிலிருந்து விரட்டப்பட்டதும் அவரை இப்போது துரோகி என்று சாடுகின்றனர். இப்போதும்கூட ரஷியா சோசலிச நாடா, முதலாளித்துவ நாடா என்று அவர்கள் தெளிவாக்கவில்லை

கிழக்கு ஐரோப்பிய, ரஷிய மாற்றங்களைப் பற்றி 'மார்க்சிஸ்டு' தலைவர்கள் அவ்வப்போது ஏதாவது கூறினாலும், இந்நாடுகளுக்கு நேரில் சென்று ஆய்வு செய்து முழுமையான அறிக்கை வெளியிடப்போவதாகக் கூறி எந்த நிலைப்பாடுமின்றி காலம் கடத்தி வந்தனர். இப்போது மாநாட்டிலாவது சித்தாந்த ரீதியாக ஒரு முடிவுக்கு வருவார்கள் என்று எதிர்பார்த்தால், மாநாட்டிலும் எந்த முடிவும் இல்லை. சித்தாந்தப் பிரச்சினைகள் பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்படாமல் குழப்பத்தில் சிக்கிக் கொண்டதும், வழக்கம் போலவே முன்னாள் போலி சோசலிச நாடுகளில் ஏற்பட்ட மாற்றங்களை இன்னும் ஆழமாக ஆய்வு செய்ய போதிய கால அவகாசம் இல்லை என்று மழுப்பினர். புதிதாக தேர்ந்தேடுக்கப்படும் மத்திய கமிட்டி விரைவில் இது பற்றிய ஆய்வுடன் தீர்மானத்தை தயாரித்து அறிக்கையாக வெளியிடும் என அறிவித்துள்ளனர். அதன் பிறகு சித்தாந்தப் பிரச்சினைகளைப் பற்றிய தீர்மானம் "சில சித்தாந்தப் பிரச்சினைகளைப் பற்றிய தீர்மானம்" என மாற்றம் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

## அந்தரத்தில் அரசியல் முடிவுகள்

சர்வதேசிய நிலைமைகளைப் பற்றி சித்தாந்த ரீதியாக எந்த முடிவும் இல்லாததால், தேசிய நிலைமைகளைப் பற்றியும், புரட்சிக்கான பாதை, யுத்த தந்திரம், செயல் தந்திரக் கடமைகளைப் பற்றியும் மாநாட்டில் எந்த முடிவும் இல்லை. வகுப்புவாத கட்சியான பாரதீய ஜனதாவும், பெருமுதலாளிகளின் கட்சியான காங்கிரசும் எதிரிகள்; ஜனதா தளத்தின் சமரசத்தால் பாரதீய ஜனதா ஆதாயமடைந்து வளர்ந்துவிட்டது; தெலுங்கு தேசம், தி.மு.க. ஆகிய கட்சிகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்; மதச்சார்பற்ற முதலாளித்துவ கட்சிகளுடன் இணைந்து விரிந்த இடதுசாரி முன்னணியைக் கட்டியமைக்க வேண்டும் என்று தேர்தல் கூட்டணிக்கான உத்தியை மட்டுமே வகுத்துள்ளனர். தேசிய, சர்வதேசிய நிலைமைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கணக்கில் கொண்டு இனிமேல்தான் கட்சித் திட்டத்தை மாற்றியமைக்கப் போகிறார்கள். தேர்ந்தெடுக்கப்படும் மத்தியக் கமிட்டி ஒரு கமிஷனை நியமித்து புதிய கட்சித் திட்டத்தை தயாரிக்கும் என முடிவெடுத்துள்ளனர். இதேபோல 1951-ல் தயாரிக்கப்பட்ட கொள்கைத் தீர்மானத்தையும் திருத்தியமைக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

கடைசியில், சர்வதேச நிலைமைகளைப் பற்றிய சித்தாந்தக் கண்ணோட்டமும் இல்லை; இந்தியாவில் எத்தகைய புரட்சியை செய்யப் போகிறார்கள், யார் எதிரிகள், யார் நண்பர்கள் என்பதற்கான கட்சித் திட்டமோ, கொள்கையோ இல்லை. வேடிக்கை என்ன வென்றால், மாநாட்டில் முன்வைக்கப்பட்ட சித்தாந்த மற்றும் அரசியல் தீர்மானங்களை டெல்லியிலுள்ள கட்சி சாராத பிரபல அறிவுஜீவிகள், பேராசிரியர்களுக்கு அனுப்பி அவர்களிடம் கருத்துக்கள், ஆலோசனைகளைக் கேட்டுள்ளனர். முதலாளித்துவ அறிஞர்களிடம் ஆலோசனை கேட்டு கட்சிக் கொள்கையை வகுக்குமளவுக்கு 'மார்க்சிஸ்டுகள்' முன்னேறிவிட்டார்கள். போதாக்குறைக்கு கட்சிக்குள் ஊழல் பெருச்சாளிகளும் கிரிமினல் பேர்வழிகளும் நிறைந்துள்ளதோடு கோஷ்டிப் பூசலும் பெருகிவிட்டது. இதை மாநாட்டில் முன்வைத்த அமைப்பு பிரச்சினை பற்றிய அறிக்கையிலேயே ஒப்புக் கொண்டுள்ளனர்.

## புழுத்து நாறும் கோஷ்டிப் பூசல்

கேரளாவில் அச்சுதானந்தன் கோஷ்டி என்றும் நாயனார்-நம்பூதிரிபாடு கோஷ்டி என்றும் கட்சி இருகூறுகளாகப் பிரிந்து கிடக்கிறது. கோஷ்டி நடவடிக்கையில் இறங்கிய மாநில செயலாளராக இருந்த அச்சுதானந்தனை பொறுப்பிலிருந்து நீக்குவதற்காக மாநில செயற்குழுவை விரிவுபடுத்தி புதிய கோஷ்டியைக் கூட்டி பதவியைப் பிடித்துள்ளார் நாயனார். மேற்கு வங்கத்தில் அசைக்க முடியாத தலைமையாக சித்தரிக்கப்பட்ட ஜோதிபாசு கோஷ்டிக்கு எதிராக பல்வேறு கோஷ்டிகள் கலகம் செய்கின்றன. திரிபுராவில் முன்னாள் முதல்வர் நிருபன் சக்ரவர்த்தி கோஷ்டிக்கு எதிராக அஜய் பிஸ்வாஸ் தலைமையில் "நவம்பர் புரட்சிக் கட்சி" என்ற பெயரில் ஒரு கோஷ்டி நாய்ச் சண்டையில் இறங்கியுள்ளது. ஒரிசாவில் மாநில கட்சி செயலாளரான அஜய்ரவுத் தனிக்கோஷ்டியாக பிரிந்து சென்று விட்டார். புழுத்து நாறும் கோஷ்டி சண்டைகள் ஒருபுறமிருக்க ஊழல் பெருச்சாளிகளும் கிரிமினல் பேர்வழிகளும் பெருமளவில் கட்சியில் புகுந்து கட்சியை சீர்குலைத்து விட்டதாக மேற்கு வங்கக் கமிட்டி குறைபட்டுக் கொள்கிறது. ஒவ்வொரு கோஷ்டியும் தம்மை பலப்படுத்திக் கொள்ள தீய சக்திகளைக்கூட கட்சியில் சேர்த்துள்ளன என்று மாநாட்டின் அமைப்பு பிரச்சினை பற்றிய அறிக்கை பகிரங்கமாக ஒப்புக் கொண்டுள்ளது. 1978-ல் 1.61 லட்சமாக இருந்த கட்சி உறுப்பினர் எண்ணிக்கை இப்போது 5.8 லட்சமாக உயர்ந்தது எப்படி என்பதற்கான காரணம் இப்போது புரிகிறதல்லவா?

சித்தாந்த ஓட்டாண்டித்தனமும், எந்த முடிவுகளுமில்லாத அரசியல் கையாலாகாத்தனமும், கட்சிக்குள் தீய சக்திகள் பெருகியிருப்பதும் இன்னுமொரு முதலாளித்துவ கட்சியாக, குட்டி முதலாளித்துவ சமூக ஜனநாயகக் கட்சியாக சீரழிவதற்கான வலுவான அடிப்படைகள். இன்னும் அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லையே தவிர, ஐரோப்பிய பாணி போலி சோசலிசக் கட்சியாக சீரழிவதை நோக்கித்தான் 'மார்க்சிஸ்ட்' கட்சி சென்று கொண்டிருக்கிறது.

www.padippakam.com



### நீ முன்னாலே போனால் நான் பின்னாலே வாரேன்

நவீன திரிபுவாதிகளான 'மார்க்சிஸ்டு' களுக்கு கடைந்தெடுத்த திருத்தல்வாதிகளான வலது கம்யூனிஸ்டுகள் தான் வழிகாட்டிகளும் முன்னோடிகளுமாவர். வலதுகள் ஒவ்வொரு முறையும் திருத்தல்வாதப் புதைசேற்றுக்கு தாவியோடிய பிறகு, அவர்களை அடியொற்றி புரட்சிகர வாய்ச்சவடாலுடன் ''மார்க்சிஸ்டுகள்'' செல்வது வழக்கம். 'மார்க்சிஸ்டு'களின் முன்னோடிகளான வலதுகள் ஏற்கனவே சமூக ஜனநாயகக் கட்சியாக சீரழிவதை நோக்கி நாலுகால் பாய்ச்சலில் புறப்பட்டு விட்டார்கள். கடந்த ஜனவரி 1-ந் தேதி முதலாக கோவையில் நடந்து முடிந்த தேசிய கவுன்சில் கூட்டத்தில் வலதுகள், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும், பாட்டாளி வர்க்க சர்வதேசியமும் இனி தேவையில்லை; மார்க்சிய லெனினியத்தை அப்படியே பின்பற்றக்கூடாது; மண்ணுக்கேற்ப மார்க்சியத்தை வளப்படுத்த வேண்டும்; சொத்துடமையை அடிப்படை உரிமையாக கருத வேண்டும்; கட்சிக்குள் கோஷ்டிகள் இருப்பதில் தவறில்லை; முழுமையான உட்கட்சி ஜனநாயகம் நிலவவேண்டும்; ஜனநாயக மத்தியத்துவம் என்ற பெயரில் கட்டுப்பாடுகள் கூடாது என்றும் சமத்துவ-ஜனநாயக உரிமை கொண்ட நேர்மையான சமுதாயத்தை (சோசலிசம் அல்ல) நிறுவுவது தான் எங்கள் லட்சியம் என்றும், தீர்மானித்துள்ளனர்.

வலதுகளின் வழியில், மத்தியக் கமிட்டியின் கட்டுப்பாடு ஏதுமின்றி கட்டுப்பாட்டு கமிஷன் (உறுப்பினர்களின் புகார்களை விசாரிக்கும் குழு) சுதந்திரமாக செயல்பட புதிய ஏற்பாட்டை இடதுகள் இம்மாநாட்டில் அறிவித்துள்ளனர். ஊழியர்களின் கருத்து சுதந்திரத்தையும் உட்கட்சி ஜனநாயகத்தையும் வலுப்படுத்துவது என்ற பெயரில் வலதுகளின் பாணியில் இன்னும் சில



போலிகளின் மாநாடு: மேடைக்கு மார்க்சியம்; பிழைப்புக்கு சந்தர்ப்பவாதம் ; வலது கோடியில் சுர்ஜித்.

அமைப்புத்துறை மாற்றங்களை கொண்டு வர தீர்மானித்துள்ளனர். மூப்பு காரணமாக நம்பூதிரிபாடுக்கு கட்டாய ஓய்வு அளித்து விட்டு, ஆளும் வர்க்கங்களின் மேலும் நம்பகமான தரகரான சுர்ஜித் இம்மாநாட்டில் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ''வறட்டுவாத கண்ணோட்டமற்ற யதார்த்தவாதி'' என்று ஆளும் வர்க்கப் பத்திரிகைகளால் புகழப்படும் அவரது தலைமையின் கீழ் வலதுகளை அடியொற்றி விரைவில் இன்னும் பல சந்தர்ப்பவாத சாகசங்கள் நடக்கப் போவது மட்டும் நிச்சயம்.

அதை இம்மாநாட்டிலேயே போலிக் கம்யூனிஸ்டுகள் துவக்கிவிட்டனர். கோர்பச்சேவை துரோகி என்று சாடினாலும் அவரது கொள்கையைத்தான் போலிகள் செயல்படுத்தி வருகின்றனர். முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் கட்டிக் காப்பது, புரட்சியை பூசையறையில் வைப்பது, அன்னிய ஏகாதிபத்திய மூலதனத்தையும், உலக வங்கி ஐ.எம்.எப்.பின் கடன் கொள்ளையையும் சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்பது என்று கோர்பியின் கொள்கையைத்தான் இருதலைமுறைக்கும் மேலாக போலிகள் நடைமுறைப்படுத்தி வருகின்றனர். ஆனால் புரட்சிகரமான வாய்ச் சவடால்கள் மூலமும், ஆரவாரமாக கூட்டத்தை சேர்த்தும் தமது சந்தர்ப்பவாதத்தை திறமையாக மூடி மறைத்து வருகின்றனர்.

போலிக் கம்யூனிஸ்டுகளின் இந்த மோசடிகளை புரட்சிகர அணிகள் விழிப்புடனிருந்து அம்பலப்படுத்தி, முறியடிக்க வேண்டும். நக்சல்பாரி புரட்சியாளர்களுடன் ஐக்கியப்பட்டு, மார்க்சிய-லெனினியத்தைப் பாதுகாக்கும் இன்றைய மகத்தான பணிக்கு தோள் கொடுக்க வேண்டும்.

● குமார்

# போலிகள் நடத்திய கூத்து!

செங்கொடியைக் காட்டியும், மார்க்சிய ஆசான்களின் படங்களை வைத்தும் தம்மை ஏதோ புரட்சிவாதிகளாகக் காட்டிக் கொண்ட போதிலும், போலிக் கம்யூனிஸ்டுகள் நடத்திய இம்மாநாட்டில் நடந்த கூத்துகள், அவர்களைக் கடைந்தெடுத்த திருத்தல்வாதிகள் என்பதைக் காட்டிக் கொடுத்துவிட்டது.

மாநாட்டு துவக்க நாளன்று நுழைவாயிலில் ஒரு சிறுமியை நிறுத்தி, பிரதிநிதிகளுக்கு ரோஜாப் பூவும் சந்தனமும் கொடுத்து வரவேற்க ஏற்பாடு செய்திருந்தனர். உள்ளே ஏதோ விசேட பூஜை நடத்துவதைப் போல சந்தனம் கொடுத்ததைக் கண்டு, பலர் அதை பயபக்தியுடன் நெற்றியில் பூசிக் கொண்டனர். கேரளாவின் பிரபல 'மார்க்சிஸ்டு' தலைவரும், ''தேசாபிமானி'' என்கிற கட்சி நாளேட்டின் முன்னாள் ஆசிரியருமான பி.கோவிந்தபிள்ளை கூட சந்தனத்தை நெற்றியில் பூசிக் கொண்டு திவ்யமாக காட்சியளித்தார்.

மார்க்சியத்தை இந்து மதத்தில் தேடும் கோவிந்த பிள்ளை ஏற்கனவே சாய்பாபாவின் பக்தர். பலமுறை புட்டபர்த்திக்கு ரகசியப் பயணமாக சென்று சாய்பாபாவின் அருளாசியைப் பெற்றவர். இப்போது இவர் விவேகானந்தரின் பக்தராகி விட்டார். விவேகானந்தரின் பொன்மொழிகளைத் தொகுத்துள்ள இவர், விரைவில் புத்தகமாக வெளியிட உள்ளார்.

'மார்க்சிஸ்ட்' கட்சியின் வரலாறு பற்றிய கண்காட்சியில் ஆபாச சினிமா கவிஞன் வைரமுத்துவின் கவிதையும் இடம் பெற்றிருந்தது. எந்த நாட்டிலும் மின்சாரமும் மார்க்சியமும் இல்லாமல் இல்லை என்பது தான் அக்கவிதை. சினிமாக் கவிஞனிடமிருந்து மார்க்சியத்தை அறிந்து கொள்ள முற்பட்டார்களா, அல்லது ஆபாச சினிமாக் கவிஞனுக்கு அங்கீகாரம் அளித்துள்ளார்களா? தெரியவில்லை.

தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் தீர்மானத்தில், செங்கொடிக்காக அளப்பரிய தியாகம் செய்ததாக நூற்றுக் கணக்கானோருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. இவர்களில் ஆகப் பெரும்பான்மையினர், தேர்தலின் போது ஓட்டுப் பொறுக்கவும் கள்ள ஓட்டுப் போடவும் இதர ஓட்டுக் கட்சிக் குண்டர்களுடன் நடந்த மோதலில் மாண்டவர்கள். இதன்படி மே.வங்கத்தில் 296, திரிபுராவில் 222, கேரளாவில் 74, ஆந்திராவில் 30 என நீண்ட பட்டியல் தயாரித்து அஞ்சலி செலுத்தினர்.

கம்யூனிசத் துரோகிகளுக்குக் கூட சிவப்பு வணக்கம் செலுத்தும் புதிய பாரம்பரியத்தை இம்மாநாட்டில் உருவாக்கியுள்ளனர். 'மார்க்சிஸ்டு'களால் கடுமையாக சாடப்பட்ட கடைந்தெடுத்த கம்யூனிசத் துரோகியான எஸ்.ஏ.டாங்கேவுக்கு இம்மாநாட்டில் சிவப்பஞ்சலி செலுத்தப்பட்டது. அதே போல, காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்து உழைக்கும் மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி அடக்கி ஒடுக்கிய வலது 'கம்யூனிஸ்ட்' கட்சியின் முன்னாள் கேரள முதல்வரான அச்சுதமேனனுக்கும் சிவப்பஞ்சலி செலுத்தப்பட்டது.

www.padippakam.com

# ஆந்திராவில் பயங்கரவாத ஆட்சி

பஞ்சாப், காஷ்மீருக்குச் சமமாக, சில சமயம் அவற்றையும் விஞ்சிவிடும் அளவுக்கு ஆந்திராவின் தெலுங்கானா மக்கள் மீது அரசு பயங்கரவாத ஒடுக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. நூற்றுக்கணக்கான போலீசாரும் துணை ராணுவத்தினரும் ஒரே சமயத்தில் கிராமங்களைச் சூழ்ந்து கொள்ளுகிறார்கள். கிராம மக்களை ஓரிடத்தில் திரட்டி வைத்து கண்மண் தெரியாமல் தாக்குகின்றனர். ஆண்களைத் தனியே பிரித்து, வாலிபர்களை தலைகீழாகத் தொங்கவிட்டு மனிதத் தன்மையே இல்லாமல் அடிக்கின்றனர். உழுபடைக் கருவிகளை, பண்டு பாத்திரங்களை அடித்து நொறுக்குகிறார்கள். அரிசி பருப்போடு உப்பையும் மண்ணெண்ணையும் கலந்து நாசமாக்குகிறார்கள். துணிமணிகளை எரிக்கிறார்கள்; வீடுகளை இடித்துத் தள்ளுகிறார்கள்.

இப்படி ஒவ்வொரு கிராமமும் குறைந்தது 6 தடவை தாக்கப்பட்டுள்ளது. இதைத்தான் ஆயிரக்கணக்கான 'நக்சலைட்டுகள்' சரணடைந்தனர் என போலீசு அறிக்கையை வெளியிடுகிறது. மாலை 7 மணிக்கு மேல் தெருவில் கண்ணில் படுபவர்களை எல்லாம் நக்சலைட்டுகள் என்று கூறி சுட்டுக் கொன்று விடுவோம் என்று ஒலிபெருக்கி மூலம் பகிரங்கமாக எச்சரிக்கிறார்கள். சுருக்கமாகச் சொன்னால், தெலுங்கானா கிராமங்களில் ஊரடங்கு உத்திரவு அதிகார பூர்வமற்ற முறையில், ஆனால் நிரந்தரமாக இருக்கிறது. இதற்காக மத்திய அரசின் மத்திய ரிசர்வ் போலீசு, இந்தோ - திபேத் எல்லைக் காவல்படை, எல்லைக் காவல் படை ஆகியவை குவிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு போலீசு நிலையத்துக்கும் ''கொலைக் கோட்டா'' நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நக்சல்பாரி இயக்கம் பலமாக உள்ள கிராமங்களின் வாலிபர்களது பட்டியல்கள் தயாரிக்கப்படுகின்றன. அந்தப் பட்டியலில் உள்ளவர்களைக் கண்ணில் கண்டதும் அந்த இடத்திலேயே சுட்டுக் கொல்லுகிறார்கள்.

''போலீசுடன் நடந்த மோதல்'' என்கிற பெயரில் இளைஞர்கள் பலரும் பயங்கரமான முறையில் சுட்டுக் கொல்லப்படுகின்றனர். இந்தக் கொலைகளை மறைப்பதற்காக பல கட்டுக்கதைகளை போலீசும் அரசும் பரப்புகின்றன. கடந்த டிசம்பர் மாதத்தில் மட்டும் இப்படி 30 பேரைக் கொன்றிருக்கின்றனர்.

அப்பாவி மக்கள் போலீசின் தொல்லைக்கும், மிரட்டலுக்கும் ஆளாவதோடு அவர்கள் மீது பல பயங்கரவாதத் தடைச்சட்ட வழக்குகள் ஜோடிக்கப்பட்டுள்ளன. தாழ்த்தப்பட்ட மற்றும் பிற பலவீனமான பிரிவுகளைச் சேர்ந்த இளைஞர்கள் போலீசுடனான மோதல் என்கிற பெயரில் படுகொலை செய்யப்படுகின்றனர். ஏழை - எளிய பிரிவுப் பெண்கள் மானபங்கப்படுத்தப் படுகிறார்கள், கற்பழிக்கப் படுகிறார்கள். மக்களது உணர்வுகளைப் புண்படுத்தும் வகையில் தியாகிகளின் நினைவுச் சின்னங்கள் போலீசாலேயே தகர்க்கப்படுகின்றன.

ஹயாகிரீவாச்சாரி என்ற முன்னாள் காங்கிரசு மந்திரியை 'நக்சலைட்டுகள்' கொன்று விட்டார்கள் என்பதைச் சாக்கு வைத்து ஆந்திரப் பிரதேச சிவில் உரிமைக் கவுன்சிலின் அமைப்பாளரும், வாராங்கல் வக்கீல்கள் சங்க செயலருமான பிரபாகர ரெட்டியை முகமூடி அணிந்த போலீசாரே படுகொலை செய்துள்ளனர்.

தமது சொந்தக் கிராமங்களில் தமக்குப் பாதுகாப்பு இல்லையென்று தப்பி ஓடும் இளைஞர்களை வழியிலேயே மடக்கிப் பிடித்துக் கொண்டுபோய் 'போலீசுடன் மோதல்' என்கிற பெயரில் படுகொலை செய்கிறார்கள். இந்தக் கொலைகளைத் தற்செயலாகப் பார்க்க நேர்ந்தவர்கள் சாட்சியமாகி விடுவார்கள் என்று கருதி அவர்களும் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள்.

ஐதராபாத் அருகே உள்ள மீது குடாவில் நடந்த ''போலீசுடனான மோதல்'' என்கிற படுகொலை மிக மிகக் கொடூரமானதும் ரத்தவெறியர்களான போலீசை பச்சையாக அம்பலப்படுத்துவதுமாக இருந்தது. ''உதயம்'' என்கிற தெலுங்கு நாளேட்டின் நிருபர் குலாம் ராசூல் மீது ஐதராபாத் டி.எஸ்.பி. ராஜய்யாவிற்கிருந்த வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக நடந்ததுதான் இந்த மோதல் நாடகக் கொலை.

ஐதராபாத்தின் புறநகர் பகுதியில் உள்ள பெரும் குடிசைப்பகுதி என்.டி.ஆர். நகர். இந்தக் குடிசைகளை இடித்துத் தள்ளி அந்த நிலத்தை ஆக்கிரமிக்க 'ரியல் எஸ்டேட்' முதலாளிகள் தொடர்ந்து முயன்று வருகின்றனர். இந்த நிலத் திமிங்கிலங்களுக்கு முன்னாள் மத்திய மந்திரி சிவசங்கரின் மகனும் எம்.எல்.ஏ.வுமான சுதீர்குமார் முழு ஆதரவு தருகிறார். பல உயர் போலீசு அதிகாரிகளும் இந்தக் கும்பலில் அடக்கம். இந்தக் கட்டாய வெறியேற்றத்தை எதிர்த்து ஆந்திரப்பிரதேச சிவில் உரிமை கவுன்சி

**''போலீசுடன் நடந்த மோதல்'' என்கிற பெயரில் புரட்சியாளர்களும் கிராம மக்கள் பலரும் பயங்கரமான முறையில் சுட்டுக் கொல்லப்படுகின்றனர். இந்தக் கொலைகளை மறைக்க பல கட்டுக்கதைகளை போலீசும் அரசும் பரப்புகின்றன. கடந்த டிசம்பரில் மட்டும் இப்படி 30 பேரைக் கொன்றுள்ளனர்.**





படிப்பகம்

www.padippakam.com

லும் வேறுபல அமைப்புகளும் தொடர்ந்து போராடி வருகின்றன. குலாம் ரசூல் தொடர்ச்சியாகக் குடிசைவாழ் மக்களின் நியாயத்தை எழுதி வந்தார். இந்த 'ரியல் எஸ்டேட் முதலைகளுக்கும் டி.எஸ்.பி. ராஜய்யாவுக்கும் இடையில் உள்ள கள்ளத் தொடர்பு பற்றிய ஆதாரங்கள் தன்னிடம் சிக்கி இருப்பதாகவும் அதை தாம் எழுதப் போவதாகவும் குலாம் ரசூல் பத்திரிக்கையா ளர்களிடையே கூறி வந்திருக்கிறார்.


சம்பவ தினத்தன்று இன்னொரு பத்தி ரிக்கையாளரின், 'ஸ்கூட்டரி'ல் தனது நண் பர் விஜயப் பிரசாத்துடன் சொந்த ஊருக்குப் போய்க் கொண்டிருந்தார். அவர்கள் செல் லும் வழியில் தான் டி.எஸ்.பி. ராஜய்யா வின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள போலீசு நிலையம் இருக்கிறது. ரசூலையும் விஜயப் பிரசாத்தையும் வழி மறித்த போலீசு நக ருக்கு வெளியே ஒரு பாழடைந்த மண்டபத் திற்கு இழுத்துப்போய் கொன்றது. நக்ச லைட்டுகளுடன் நடந்த மோதலில் அடை யாளம் தெரியாத நக்சலைட்டுகள் இருவர் கொல்லப்பட்டதாக அறிவித்தது. அவர்க ளது உடலை உறவினர்களுக்கு ஒப்படைக் காது தானே எரித்துவிட்டது.

முதலில் அடையாளம் தெரியாதவர் கள் என்று மழுப்பிய போலீசு, பின்னர் குலாம் ரசூல், மக்கள் யுத்தக் குழுவில் உள்ள அலேரு சத்தியம் என்பவரின் கொரில்லாக் குழுவைச் சேர்ந்தவர் எனக் கூசாமல் புளுகி யது. சிறையில் உள்ள அலேரு சத்தியத்தைப் பேட்டிகண்டு எழுதியிருப்பதே இதற்கு ஆதாரம் என்றும் கதை கட்டியது.

எப்படியும் நியாயப்படுத்த முடியாத இந்த குரூரமான கொலையை எதிர்த்து ஆந் திரப் பத்திரிக்கையாளர்கள் பெரும் கண்டன ஊர்வலம் நடத்தினர்; பிரதமர் நரசிம்மராவ் முன்பு கருப்புப் பட்டை அணிந்து ஆர்ப் பாட்டம் செய்தனர்; உச்ச நீதிமன்றத்தில் 'ரிட்' மனுவும் தாக்கல் செய்தனர். இதை ஏற்று உச்சநீதி மன்றம் விசாரணைக்கு உத்தி ரவிட்டது.

ஜனநாட்டிய மண்டலி என்னும் புரட்சி கரக் கலைக்குழுவின் முன்னணியாளரான இசை - நாட்டியக் கலைஞர் சஞ்சீவி; கத்தா ருக்கு அடுத்து ஆந்திரா முழுவதும் பிரபல மானவர். இவர் 8.1.92 அன்று ஐதராபாத் அருகே உள்ள ஒரு கிராமத்தில் கலை நிகழ்ச்சி நடத்திவிட்டுத் திரும்பும்போது ஒரு பாழுங் கிணற்றில் தவறி விழுந்ததில் கை முறிந்து போனது. ஐதராபாத்தின் பிரபல நிசாம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டி ருந்தார்.

அப்போது வாரங்கல் மாவட்ட டி.எஸ்.பி. அனுராதாவும் 30 போலீசுக்காரர் களும் சிவில் உடையில் திடுமென மருத்துவ மனைக்குள் புகுந்தனர். சஞ்சீவியைக் குண் டுக்கட்டாகத் தூக்கிச் சென்றனர். தடுத்த மருத்துவமனை ஊழியரிடம் துப்பாக்கிக ளைக் காட்டி மிரட்டினர். செய்தி பரவி மருத் துவமனை வாயிலில் மக்கள் திரளாகக் கூடி விடவே, அவர்களைத் திசை திருப்புவதற் காக 'புரட்சி ஓங்குக!' 'புரட்சியாளர்கள் வாழ்க!' (ரேடிகல்ஸ் ஜிந்தாபாத்!) என முழங்கியவாறே சஞ்சீவியைத் தூக்கிக் கொண்டு வாரங்கல்லுக்கே பறந்தனர்.



மருத்துவமனையில் சிகிச்சை பெறும், ஜனநாட்டிய மண்டலி எனும் புரட்சிகரக் கலைக்குழு வின் முன்னணியாளர் சஞ்சீவி. அவரைப் பார்வையிடும் புரட்சிக்கரக் கலைஞர் கத்தார். தோழர் சஞ்சீவியை துப்பாக்கி முனையில் கடத்திச் சென்ற ஆந்திர போலீசு, மக்களின் கண்டனத்திற்குப் பிறகு அம்பலப்பட்டு விடுவித்தது.

செய்தி வெளியாகி மாநிலமெங்கும் கண்டனக் குரல் எழும்பியது; ஏற்கனவே பத்திரிக்கையாளர் ரசூல் கொலையில் மிக வும் அம்பலப்பட்டுப் போயிருந்த போலீசு வேறு வழியின்றி சஞ்சீவியை விடுவித்தது. அப்போது, "வாரங்கல் போலீசின் கையில் பிடிபட்டு உயிருடன் திரும்புவது நீ மட்டும் தான்" என்று ஆத்திரத்துடன் எச்சரித்தது போலீசு.

தெலுங்கானாவின் பல பகுதிகளிலும் நிறுவப்பட்டுள்ள தியாகிகளின் சின்னங்கள் போலீசால் தகர்க்கப்படுகின்றன.

கரீம் நகர் மாவட்டத்தின் 93 தியாகிகள் நினைவாக 1990 இல் ஒரு சின்னம் நிறுவப் பட்டது. ஒரு லட்சம் பேர் அந்நிகழ்ச்சிக்குக் கூடினர் என்பதே மக்களின் உணர்வைக் காட்டுகிறது. அச்சின்னத்தை இப்போது போலீசே வெடி வைத்துத் தகர்த்துவிட்டது. சிரீகாகுளம் மாவட்டம் மந்தஸ்ஸாவில் உள்ள தோழர் சுப்பராவ் பாணிக்கிரகி என்ற புரட்சிப் பாடகரின் நினைவுச் சின்னமும் இவ்வாறே தகர்க்கப்பட்டுள்ளது. இதற்குப் பதிலடி தருவதாக மக்கள் யுத்தக் குழுவினர் ஐதராபாத்தில் உள்ள காந்தி, இந்திரா ஆகி யோரின் சிலைகளைத் தகர்த்தனர்.

தமிழ் நாட்டைப் போலவே ஆந்திரா விலும் எங்கும் பொதுக் கூட்டங்கள் நடத் தும் உரிமை மறுக்கப்படுகிறது. சில பகுதிக ளில் அறைக் கூட்டங்கள் மட்டுமே நடத்த முடிகிறது. புரட்சி எழுத்தாளர் சங்கம் (RWA) தனது 13வது மாநாட்டை சமீபத்தில் குண்டூரில் நடத்தியது. பொதுக்கூட்டம், ஊர் வலத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டு அரங்கக் கூட்டமே நடந்தது. திடீரென உள்ளே நுழைந்த போலீசாருக்கு அனுமதி மறுத்த போது, சந்தேகத்துக்குரிய நபரைத் தேடி உள்ளே நுழையத் தமக்கு அதிகாரம் உண் டெனக் கூறி எத்தணித்தது. அதற்கும் எதிர்ப் புக் காட்டி கூட்டம் நிறுத்தப்பட்டு பிற்பகல் நிகழ்ச்சி மட்டுமே நடந்தது.

கம்யூனிசப் புரட்சியாளர்களுக்கு விலைபேசி, பேச்சுவார்த்தை - சரணடைவு நாடகமாடிய ஆந்திர அரசு அதில் தோற்றுப் போகவே பகிரங்கமான பாசிச பயங்கர வாத ஒடுக்கு முறையில் இறங்கிவிட்ட தையே இவையெல்லாம் காட்டுகின்றன. தற் போதைய அரசியல் பொருளாதார நெருக்க டியில் போலிக் கம்யூனிஸ்டுகள் உட்பட எல்லா ஓட்டுக் கட்சிகளும் அம்பலப்பட்டுப் போய்விட்டன. கம்யூனிசப் புரட்சியாளர் கள் மட்டுமே மக்களின் போராட்டங்களுக் குத் தலைமையேற்க வல்லவர்களாக உள்ள னர். எனவே அவர்களையும் ஒடுக்குவதற் காக நாடு முழுவதும் இத்தகைய பயங்கர வாத அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட் டுள்ளது. ஆனால், கம்யூனிசப் புரட்சியாளர் கள் இதையும் முறியடித்து விரைவிலேயே ஒரு பெரும் சக்தியாகப் பரிணமிப்பார்கள் என்பது மட்டும் நிச்சயம்.

● பச்சையப்பன்

படிப்பகம்

www.padippakam.com

## காங்கிரசு - பாகிஸ்தான் - இரண்டாவது வங்கப் பிரிவினை

# காங்கிரசுக்காரர்களே பிரிவினைவாதிகள்

*1947-ல் மத அடிப்படையில் இந்தியா - பாகிஸ்தான் என துண்டாடியதற்கு காங்கிரசும் பிரிட்டிஷாருமே பிரதான காரணம் என்பதை சென்ற இதழில் அம்பலப் படுத்தினார், தோழர் சுனிதிகுமார்கோஷ். அதன் தொடர்ச்சியாக பஞ்சாபையும் வங்காளத்தையும் உடைத்து பாகிஸ்தானை உருவாக்கிவிட்டு, எஞ்சிய பகுதியை தாம் விரும்பியபடி இந்துஸ்தானமாக்க காந்தியும் காங்கிரசும் நடத்திய பிரிவினை சூழ்ச்சிகளை இப்பகுதியில் தொகுத்தளிக்கிறார்.*


### 'பாகிஸ்தான் தீர்மானம்'

சௌதுரி ரகமத் அலியின் பாகிஸ்தான் திட்டம் என்பது ஒரு 'பொருந்தாத கற்பனை' என்று 1930களின் மத்தியில் நிராகரித்திருந்த முஸ்லீம் தலைவர்கள் 1940 மார்ச்சு லாகூரில் 'பாகிஸ்தான் தீர்மானம்' என ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். பஞ்சாப் பிரதமர் சிக்கந்தர் ஹாயத்கான் 1942இல் அவர் இறக்கும்வரை வலியுறுத்தி வந்ததைப் போல ஒருவேளை அத்தீர்மானம் முஸ்லீம் லீக்குக்குப் 'பேரம் பேசுவதற்கான ஒரு அம்சமாக' மட்டுமே இருந்தது.[19] அது காங்கிரசின் அனைத்திந்திய தேசியவாதம் என்கிற முழக்கத்துக்கு எதிராக அனைத்திந்திய முஸ்லீம் தேசியவாதம் என்கிற முழக்கமாக லீக் எழுப்பியதாகத் தெரிகிறது.

பிரிட்டிஷ் அரசு, காங்கிரசு, லீக் ஆகிய முத்தரப்புக்கிடையே நடந்த நீண்ட பேச்சுவார்த்தைகளின் மூலம்தான் அதிகாரம் மாற்றப்பட்டதே தவிர அது கைப்பற்றப்படவில்லை. காங்கிரசுத் தலைவர்களைப் பொருத்தவரை ஒரு அதிகபட்சம் மற்றும் ஒரு குறைந்தபட்சம் கோரிக்கை இருந்தது. வலுவானதொரு மையத்துடன் கூடிய பிளவுபடாத ஏக இந்தியாவே இறுதியில் கிட்ட வேண்டுமென்பது அவர்கள் மனதார விரும்பினர். ஆனால் பேச்சுவார்த்தையின் மூலம் அதைச் சாதிப்பது முடியாதது அல்ல எனினும் மிகவும் கடினமானது என்பது அவர்களுக்குத் தெரியும். சாத்தியமானால் பிளவுபடாத, இல்லையானால் இறுதியில் வேறு வழியின்றிப் பிளவுபட்டாலும் இந்தியாவில் ஒரு ஒற்றை மைய அரசாங்கம் வேண்டுமென அவர்கள் வலியுறுத்தினார்கள். வட மேற்கிலும், கிழக்கிலும் சில பகுதிகள் துண்டாடப்பட்டு பிளவுபட்ட இந்தியாவை அவர்கள் ஏற்கக் கூடியவர்களாக இருந்தார்கள்; ஆனால் (மக்கள் செலுத்தக்கூடிய) என்ன விலை கொடுத்தாகிலும் ஒரு ஒற்றை மைய வலுவான மைய அரசு என்கிற விவகாரத்தில் மட்டும் சமரசம் செய்து கொள்ளும் மனநிலையில் அவர்கள் எப்போதும் இருந்ததில்லை.

லீக் கோரிக்கை எழுப்பிய உடனடியாகவே பிரிவினைக்குக் கொள்கை ரீதியில் காங்கிரசுத் தலைவர்கள் ஒப்புக்கொண்டு விட்டனர். 1940 மார்ச்சில் லீக்கின் லாகூர் தீர்மானம் நிறைவேறிய ஒரே வாரத்தில். "இரண்டு தேசக் கோட்பாட்டை" ஏற்க மறுத்தாலும் கூட முஸ்லீம்களுக்கு "சுயநிர்ணய உரிமை" வேண்டும், கூட்டுக் குடும்பத்தின் ஒரு உறுப்பினரைப் போல "ஒரு பிரிவினையை அவர்கள் கோர முடியும்" என்று காந்தி பிரகடனம் செய்தார்.[20] "தாங்கள் 'பிரகனப்படுத்தி நிலைநாட்டிக் கொண்ட சித்தத்துக்கு எதிராக இந்திய யூனியனின் ஒரு பிராந்திய அங்கமாக இருக்கும்படி எந்த மக்களையும் நிர்பந்திக்கும் வகையில் சிந்திப்பது" முடியாது என்று காங்கிரசு காரியக் கமிட்டியும் தனிப்பட்ட தலைவர்களும் பல்வேறு தீர்மானங்கள், அறிக்கைகளில் திரும்பத் திரும்பச் சொன்னார்கள்.[21] பிரிட்டிஷ் அமைச்சரவையின் சார்பாக பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு 1942 மார்ச்சு இறுதியில் சர். ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் வந்தார். அவரிடம், "பாகிஸ்தான் அக்கூ பறவையின் முட்டை" "அவர்கள் பாகிஸ்தான் என்ற கருத்தை மறுத்து ஒதுக்கி விட விரும்பவில்லை" என்று பிரிட்டிஷ் அரசு செயலாளர் எல்.ஆமெரி குறிப்பிட்டவாறான பரிந்துரைகளைக் கூட எடுத்துச் சொன்னார்கள்.[22]

**காங்கிரசின் போக்கை எதிர்த்து முஸ்லிம் தேசியவாதத்தை முன்னிறுத்தி கிரிப்சுடன் பேரம் பேசும் ஜின்னா.**



ஜி.டி.பிர்லா காந்தியின் மகனைப் போன்றவர்; காங்கிரசுத் தலைவர்களின் மிகப்பெரும் புரவலர். அவர் குறைந்தது 1932 ஜனவரியிலிருந்தே அதாவது லீக் 'பாகிஸ்தான் தீர்மானம்' நிறைவேற்றுவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பே வகுப்புவாத அடிப்படையில் இந்தியாவைப் பிளவுப்படுத்துவது, அதன் விளைவாக வங்கத்தைகையும் பஞ்சாபையும் பிளவுபடுத்துவது என்பதற்காகத் திரைமறைவு வேலைகளில் ஈடுபட்டிருந்தார். அதற்கு முன்பாக இல்லாவிட்டாலும் 1938 ஜனவரி 11-இல் ஒன்று இந்து மற்றும் முஸ்லீம் என்று இரண்டு கூட்டமைப்புகளாக இந்தியாவைப் பிளவுபடுத்த வேண்டுமென்று பிர்லா காந்தியிடம் முன்மொழிந்தார்.[23] இந்தியாவின் அரசியல் நிர்ணயப் பிரச்சினைக்கு இந்தியாவைப் பிளவுபடுத்துவதுதான் ஒரே வழி என்று மீண்டும் 1939 டிசம்பரில் சர். ஸ்டாஃபோர்டு கிரிப்சுக்கு பிர்லா பரிந்துரைத்தார்.[24]

ஜி.டி. பிர்லாவின் 1942 ஜூலை 14-ந் தேதி கடிதத்தில் பதிலளித்து பிளவுபடுத்துவதற்கு ஆதரவாக வாதிட்டு ஜூலை 16-ந் தேதி காந்தியின் நம்பிக்கை பெற்ற செயலாளர் மகாதேவ் தேசாய் ஒரு கடிதம் எழுதினார். "பாபு (அதாவது காந்தி) அதற்கு மிகவும் சிரத்தையுடன் கூடிய கவனம் செலுத்தினார்... பிரச்சினை பாகிஸ்தானா அல்லது பிளவா என்பதல்ல. இதன் உண்மையான உள்ளடக்கம் பற்றியது (வெட்கக்கேடு!) தான்"[25] என்று அவர் எழுதினார். வகுப்புவாத அடிப்படையில் பிளவுபடுத்துவது பிரச்சினையல்ல: பாகிஸ்தானின் "உள்ளடக்கம்"தான் பிரச்சினையாக இருந்தது.

"பஞ்சாபின் ஒரு பகுதி மற்றும் வங்கத்தின் ஒரு பகுதி ஆகியவற்றை மட்டுமே உள்ளடக்கிய ஒரு பாகிஸ்தானா அல்லது பிரிவினையே கிடையாதா என்பதுதான் பாகிஸ்தான் பிரச்சினையின் மூலக்கரு"[26] என்று 1946 ஜனவரியில் கிரிப்சுக்கு நேரு எழுதினார். காங்கிரசுத் தலைவர்களின் சொற்பொழிவுகள், அறிக்கைகளின் உள்ளடக்கமாக இது மாறியது[27] இவ்வாறு தான் 1946 மார்ச்சு 11-இல் வைஸ்ராய் வேவல் பிரிட்டிஷ் அரசு செயலருக்கு அனுப்பிய தந்தியில் எழுதினார்.



படிப்பகம்

www.padippakam.com

''காங்கிரசுக்கும் லீக்குக்கும் இடையிலான உண்மையான பிரச்சினை முஸ்லீம் பெரும்பான்மை மாநிலங்களுக்கு சுயநிர்ணய உரிமை பற்றியதே இல்லை; மீண்டும் சொல்கிறேன் அது பற்றியதே இல்லை; இறுதி வழியாக பஞ்சாபையும் வங்கத்தையும் பிரிப்பதா, அப்படிப் பிரித்தால் எவ்வாறு அதைச் செய்வது என்பதுதான்''[28].

காங்கிரசுக்கும் லீக்குக்கும் இடையில் விஷச் சூழலாக ''அதிகார உரிமைக்காக மூண்டயுத்தம்'' ரத்தக் குளியல் பிரிவினை அல்லது பாகிஸ்தான் மீதானது அல்ல; மாறாக பாகிஸ்தானின் ''உள்ளடக்கம்'' பற்றியதுதான். ஒரு பாகிஸ்தான் அரசாக முஸ்லீம் பெரும்பான்மைப் பகுதிகளைத் துண்டாடுவதற்கு முஸ்லீம் தலைவர்களிடம் ஒப்புக் கொண்ட காங்கிரசுத் தலைவர்கள், இறுதித் தருணம் வரை தங்களிடம் பிளவுபடாத ஒரு இந்தியாவைக் கையளிக்கும்படி பிரிட்டிஷ் அரசுக்கு நிர்பந்தம் கொடுத்து வந்தார்கள் என்பது உண்மைதான்.

ஒரு பலவீனமான மையத்துடன் கூடிய பிளவுபடாத ஒரு இந்தியாவை முன்வைக்கும் 1946 மே மந்திரி சபைத் தூதுக்குழுத் திட்டத்தை முதலில் காங்கிரசு மற்றும் லீக் இரண்டுமே ஏற்றுக் கொண்டன என்று குலீதீப் நய்யார் சொல்லுவது சரியானதல்ல. உண்மை என்னவென்றால் தங்களது வரம்புகளை ஏற்காதும், தமது சொந்த வியாக்கியானங்களை தராமலும் ஒரு திட்டத்தைக் காங்கிரசு எப்போதும் ஒப்புக் கொண்டதில்லை. ''16 மே திட்டத்தின் ஒரு முக்கிய பகுதியாக உள்ளவாறும், ''திட்டத்தின் மொத்தமான மூலக்கருவாக'' வேவல் கூறியவாறும் இந்தியக் கூட்டமைப்புக்குள்ளடங்கிய ஒரு வகையான துணைக் கூட்டமைப்புகள் என்கிற ஒரு குழுக்கூட்டமைப்பாக மந்திரி சபைத் தூதுக் குழுவும் 1946 டிசம்பர் 16-இல் பிரிட்டிஷ் மந்திரி சபையும் சித்தரித்தன; அதைக் காங்கிரசு ஒப்புக் கொள்ள மறுத்துவிட்டது.[29]

குழுக் கூட்டமைப்பு என்பதையே அதாவது திட்டத்தையே தகர்ப்பதற்காக பிரதேச சுயாட்சி மற்றும் சீக்கியர் என்கிற துருப்புச் சீட்டுக்களை ஒரு வன்மத்தோடு காங்கிரசு தலைவர்கள் பயன்படுத்தினார்கள். உண்மையான பிரதேச சுயாட்சியை ஏற்க மறுப்பது பிளவு என்கிற பூதத்தைக் கிளப்பிவிடும் என்றாலும் அவர்கள் அவ்வாறே செய்தனர். ''காங்கிரசு வலுவான மையத்துக்காகவும், குழுக் கூட்டமைப்பைத் தகர்க்கவும் பணியாற்றப் போகிறது, அதில் அது வெற்றியம் பெறும்''[30] என்று மந்திரி சபைத் தூதுக் குழுவிடம் நேரு 1946 ஜூன் 10-இல் சொன்னார். 1946 ஜூலை முன் பகுதியில் காங்கிரசுத் தலைவராக ஆசாத் பதவியேற்ற போது திட்டம் காங்கிரசைக் கட்டுப்படுத்தாது என்று பகிரங்கமாக நிராகரித்தார், நேரு தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசாங்கங்களை பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் உட்பட மையத்தில் எதேச்சதிகார அதிகாரங்களைக் குவிக்கும் ஒரு அரசியல் நிர்ணயச் சட்டத்தை உருவாக்கிக் கொள்வதில் காங்கிரசுத் தலைவர்களின் உறுதிப்பாட்டையும் அவர் விவரித்தார்.[31] திட்டத்தை ''முழுமையாக'' ஏற்பதாகக் கூறிக் கொண்டபோதும் டிசம்பர் 6-இல் பிரிட்டிஷ் அரசாங்கம் பிரகடனப்படுத்திய பிறகும் கூட திட்டத்தின் சாராம்சமான பகுதியைக் காங்கிரசுத் தலைவர்கள் ஏற்க மறுத்தனர்.



பிரிவினையைச் சாதித்த மகிழ்ச்சியில் மவுண்ட்பேட்டனுடன் 'மாமா' நேரு.

காங்கிரசு குழுக்கூட்டமைப்பை ஏற்றுக் கொண்டால் பிளவுபடாத இந்தியாவை ஏற்பதற்கு ஜின்னாவும் லீகும் தயாராக இருந்தனர்.[32] அரசியல் நிர்ணய சபையில் 'என்ன செய்தார்களோ அவ்வாறு செய்வதற்கு முற்றும் முழுவதுமாக காங்கிரசுக்கு சுதந்திரம் உண்டு' என்று நேரு பிரகடனப்படுத்தியதைத் தொடர்ந்து தூதுக் குழுவின் திட்டத்துக்கான ஒப்புதலை விலக்கிக் கொண்டதற்கு நீண்டகாலத்துக்குப் பிறகும் திட்டத்தைக் காங்கிரசு ஏற்கும் பட்சத்தில் எவ்வித நிபந்தனையும் இல்லாமல் லீக்கும் ஏற்கும் என்று பல முறை ஜின்னா சுட்டிக் காட்டினார்.[33] ஆனால் அதிகாரப் பரவலாக்குதல் மற்றும் ஒரு பலவீனமான மையம் என்கிற திட்டம் அடிப்படையில் காங்கிரசுக் கொள்கைக்கு எதிரானது என்பதால் காங்கிரசு அதை ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டது. இதனால் பிரிவினை தவிர்க்க முடியாததாகிவிட்டது.-குல்தீப் நய்யார் என்ன சொன்னாரோ அதை ஆவணங்கள் வெளிப்படுத்தும் உண்மைகள் முரணானதென மறுத்து விடுகிறது.

## 'ஐக்கிய வங்கம்'

''1946 கல்கத்தா மாநகரக் கொலைகளுக்குப் பிறகு, ஐக்கியப்பட்ட வங்கம் மேலும் சாத்தியமற்றதாகிவிட்டது'' என்று தனது கட்டுரையில் குல்தீப் நய்யார் வாதிட்டுள்ளார். உண்மையில், 1946 ஆகஸ்டு கொலைகளுக்கு முன்பே வங்கத்தையும் பஞ்சாபையும் இரண்டிரண்டு பகுதிகளாகப் பிளவுபடுத்தும் திரைமறைவு வேலையில் பிர்லாவும் காங்கிரசுத் தலைவர்களும் ஈடுபட்டிருந்தனர். 1938 ஜனவரியிலும், 1939 டிசம்பரிலும், 1942 ஜூலையிலும் காந்தி மற்றும் கிரிப்ஸிடம் பிர்லா முன்மொழிந்த யோசனைகளை முன்பே நாம் குறிப்பிட்டிருந்தோம். அவற்றின் பொருள் வங்கத்தையும் பஞ்சாபையும் கூறுபோடுவது தான். லீக்கின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்ட ராஜகோபாலாச்சாரியின் 1943 திட்டமும் கூட இந்த மாநிலங்களின் ஒருமைப்பாட்டுக்கு உலை வைப்பதுதான்.[34] ஆகா கான் அரண்மனையில் தங்கியிருந்த போது இதற்குக் காந்தி ஊக்கமான ஆதரவு அளித்தார்; 1944-இல் அவர் விடுதலையடைந்த பிறகு இந்த அடிப்படையில் ஜின்னாவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தவும் ஆர்வமாக இருந்தார். ஆகஸ்டில் காந்தி - ஜின்னா பேச்சுவார்த்தையின் போது காந்தியைச் சந்திப்பதற்கு வங்க காங்கிரசு ஒரு பிரதிநிதிக் குழுவை அனுப்பியது. வங்க மக்கள் அதன் பிரிவினையை எதிர்க்கிறார்கள் என அக்குழு காந்தியிடம் சொன்னது; ஏனெனில் ''இப்போதுள்ளவாறான வங்கம் மொழி மற்றும் பண்பாடு அடிப்படையில் ஒன்று கலந்த ஒரே ஒரு அமைப்பாகும்'' என்றனர். சுய நிர்ணய உரிமைக் கோட்பாட்டை வங்கம் ஏற்றுக் கொள்கிறது. ஆனால் அது மொழி மற்றும் பண்பாடு அடிப்படையிலானதாக இருக்க வேண்டும் என்றது, அக்குழு. ''மோசமானதற்கும் மோசமானது நேருமானால் வங்கத்திலுள்ள நாங்கள் அனைவரும் பாகிஸ்தானுடனே போவோமே தவிர நல்லது ஏற்பட வேண்டும் என்றால் வங்கத்தை பிளவுபடுத்த வேண்டாம்; கூறு போட வேண்டாம்'' என்று பிரதிநிதிக் குழுவின் தலைவரும் வங்க சட்டமன்ற காங்கிரசுத் தலைவருமான கே.எஸ்.ராய் காந்தியிடம் சொன்னார். ''வங்க மக்களைக் கலந்தாலோசிக்காமல் நான் எதுவும் செய்ய மாட்டேன்'' என்று பிரதிநிதிக் குழுவிடமும் ஒரு மாணவர் பிரதிநிதிக் குழுவிடமும் காந்தி உறுதி கூறினார்.[35] ஆனால் அந்த வாக்குறுதி உடனடியாகவே

படிப்பகம்

www.padippakam.com

# தடைகளைத் தகர்த்து முன்னேறுவோம்!

**அன்பார்ந்த தோழர்களே!**

'புதிய ஜனநாயகம்' ஏட்டின் ஜனவரி மாதத்திய இரு இதழ்களை வெளிக் கொண்டுவர இயலாமல் போய்விட்டது. அதற்கான காரணங்களை வாசகர்கள் ஓரளவு புரிந்து கொள்ள முடியும் என்றே நம்புகிறோம். மதுரையிலும் மன்னார் குடியிலும் 'புதிய ஜனநாயகம்' ஆசிரியர் மீது 'அரச துரோக' வழக்குகள். விருத்தாச்சலம், ஊத்தங்கரை, மன்னார்குடி ஆகிய ஊர்களின் நமது முகவர்களான தோழர்கள் ஜெயகாந்த்சிங், சுப்பிரமணி, மன்னை நன்னன் ஆகியோர் மீது பத்திரிக்கை தொடர்பான வழக்குகள் போட்டு கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டனர். மேலும் பல ஊர்களைச் சேர்ந்த நமது பத்திரிக்கை விநியோகிக்கும் தோழர்கள் மீது பொதுவான அடக்குமுறை, கைதுகள். குறிப்பாகப் பல ஊர்களில் முகவர்கள், கடைக்காரர்களுக்குப் போலீசு மிரட்டல்.

மதுரை வழக்கில் நமது அச்சகத்தாரும் சேர்க்கப்பட்டு போலீசின் கைது மிரட்டல் தொடர்கிறது. இதனால் ஏற்பட்ட நிர்பந்தம் காரணமாக பத்திரிக்கைக்கான அச்சகப் பிரகடனம் ரத்து செய்யப்பட்டு மாற்று ஏற்பாடுகளைச் செய்ய வேண்டி இருந்தது. 'புதிய ஜனநாயகம்' அலுவலக இடத்து சொந்தக்காரர்களுக்கு வந்த போலீசு மிரட்டலைத் தொடர்ந்து அலுவலகத்துக்காக மாற்று ஏற்பாடும் செய்ய வேண்டி இருந்தது. இப்போதைக்கு இந்தப் பிரச்சினைகளை ஓரளவு சமாளித்து இந்த இதழ் வெளிவருகிறது. இரு இதழ்கள் வெளிவராததன் காரணமாக, நட்டம் ஏற்படினும் அவசியம் கருதி இந்த இதழ்மட்டும் 4 பக்கங்கள் கூடுதலாக வெளிவருகிறது. இருந்த போதும் இடப் பற்றாக்குறையின் காரணத்தால் கேள்வி - பதில் பகுதி இடம்பெறவில்லை. தொடர்ந்து அப்பகுதியையும், இதழையும் கிரமமாக வெளிக்கொண்டு வர எல்லா விதமான முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளோம். தொடர்ந்து கேள்விகள், விமர்சனங்கள் ஆகியவற்றோடு பத்திரிக்கையை விநியோகித்தும் பத்திரிக்கையின் வளர்ச்சிக்கும் வழக்குகளுக்கும் நிதி உதவியளித்தும் ஆதரவு தரும்படி கோருகிறோம்.

— **ஆசிரியர் குழு,**
**'புதிய ஜனநாயகம்'**

மறந்து போனது. செப்டம்பரில் ஜின்னாவிடம் காந்தி சமர்ப்பித்த பிரேரணையில் இந்தியாவைப் பிளவுபடுத்துவதையும் வங்கத்தையும் பஞ்சாபையும் கூறுபோடுவதையும் முன் வைத்தார்.[36]

''இதர இந்தியாவில் இருந்து சுயேச்சையான வட கிழக்கில் ஒரு சுயாதிபத்தியம் கொண்ட அரசு'' என்பதாக ஒன்றுபட்ட வங்கத்தையே நிஜாமுதின் உட்பட முஸ்லிம் தலைவர்கள் விரும்பினர் என்று இந்தச் சமயத்தில் வேவலுக்கு மேற்கு வங்க ஆளுநர் ரிச்சர்டு சாகே அறிக்கையளித்தார். ''இந்துக்களும் முஸ்லீம்களும் நல்லிணக்கத்துடன் வாழும் ஒரு அரசைத் தேடிக் கொண்டிருந்தார்கள்'' என அவர் எழுதினார்.[37]

1945 இறுதியில் இந்தியக் கம்யூனிசக் கட்சியின் பொதுச் செயலர் பி.சி.ஜோசி பின்வருமாறு எழுதினார்: ''காந்தி - ஜின்னா பேச்சுவார்த்தையின்போது, தனது சுயாதிபத்தியத்தைப் பிரயோகித்து பாகிஸ்தானுடன் அல்லது இந்துஸ்தானத்துடன் இணைவதா அல்லது எதனுடனும் இணையாது முழுக்கவும் சுயேச்சையாக இருப்பதா எனத் தீர்மானிக்கத் கூடிய ஐக்கியப்பட்ட வங்கத்துக்கு ஆதரவு தெரிவித்து வங்க மாநில முஸ்லீம்லீக் ஒரு தீர்மானம் நிறைவேற்றியது.'' ''அத்தீர்மானத்தை மாநில லீக் தங்களுக்குள் விவாதிக்கும்படி வங்க காங்கிரசுத் தலைவர் கிரண் சங்கர் ராய்க்கு அனுப்பியது.'' ''வங்காளிகள் தமது தலைவிதியைத் தாமே தீர்மானித்துக் கொள்வார்கள் என்று முஸ்லீம் தலைவர்கள் ஜின்னாவிடம் தெரிவித்தார்கள்.''[38]

இந்துஸ்தான், பாகிஸ்தான் ஆகிய இரண்டுக்கும் வெளியில் வங்கம் தனது ஐக்கியத்தைக் காத்துக் கொண்டு தனது சொந்த அரசை நிறுவிக் கொள்ளும் என்றே லாகூரில் பாகிஸ்தான் தீர்மானத்தைக் கொண்டு வந்த பசலுல் ஹக் உட்பட வங்க முஸ்லீம் தலைவர்கள் நம்பினார்கள். வடமேற்கில் ஒன்றும் கிழக்கில் ஒன்றுமாக 'சுதந்திரமான' அரசுகள் தோன்றுமெனக் கூறும் லீக்கின் 1940 லாகூர் தீர்மானம் ஒரு அரசை முன்மொழியவில்லை; அது இந்துக்களையும் உள்ளடக்கிய ஓர் ஐக்கிய வங்க அரசை நிறுவும்படி வங்க முஸ்லீம் தலைவர்களை ஊக்குவித்தது.

இன்னொரு நிகழ்ச்சிப் போக்கும் செயல்பட்டு வந்தது. 1944 ஆகஸ்டில் காந்தியை வங்கக் காங்கிரசின் தூதுக்குழு சந்தித்துக் கொண்டிருக்கும்போது, பம்பாயின் செல்வாக்கு மிக்க காங்கிரசுத் தலைவரும், காந்தி, பட்டேலின் நம்பிக்கைக்குரியவருமான கே.எம்.முன்ஷி காந்திக்குப் பின்வருமாறு எழுதினார்: ''பஞ்சாபும் வங்கமும் பிளவுபடாதவரை நமக்குள் சமாதானமடைய முடியாது.''[39] அதே சமயம் ஜி.டி.பிர்லாவும் கூட பின்வருமாறு காந்தியின் செயலருக்கு எழுதினார்: ''வங்கத்தின் ஐக்கியம் காக்கப்படுமானால் பாகிஸ்தானுடன் போவதைக்கூடத் தாம் பொருட்படுத்தவில்லை என்று பல வங்காளிகள் சொல்லுவதைக் கேட்கிறேன்... வங்கம் இப்போதிருப்பதைப்போல காக்கப்படுமானால், பிறகு அது பாகிஸ்தானாக இருக்காது. ஆனால் எஞ்சிய இந்தியாவில் இருந்து பரிந்துபோவதாகும். அது இந்துக்கள், முஸ்லீம்கள் ஆகிய இரு பிரிவினருக்குமே தொல்லை தருவதாக இருக்கும்.''[40]

அதற்கு மாறாக, வங்கம் ஐக்கியப்பட்டும், தனியாகவும் இருந்திருக்குமானால், இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் தொல்லை தருவதாக இருப்பதற்குப் பதிலாக ஒரு முடிவற்ற தொடர்ச்சியான பயங்கரத் துயரங்களைத் தவிர்த்திருக்கலாம். அது இந்தியப் பெரு முதலாளிகள், குறிப்பாக கல்கத்தாவைக் களமாகக் கொண்ட பிர்லா போன்ற 'மார்வாரி' பெரு முதலாளிகள் மற்றும் இஸ்ஃபானிஸ் போன்று அவர்களது முஸ்லீம் சகபாடிகளுக்கு மட்டுமே கவலை தரக் கூடியதாக இருந்திருக்கும்.

(தொடரும்)

19. ஸ்டேன்லி வோல்பெர்ட் 'பாகிஸ்தானின் ஜின்னா' (டெல்லி, 1985) பக் 185; அப்துல் ஹயாத் 'வங்க முஸ்லீம்கள்' (கல்கத்தா, 1966), பக். 106; 1941 மார்ச்சு 11, பஞ்சாப் சட்ட சபையில் சிக்கந்தர் ஹயாத்கான் உரைக்கு வி.பி.மேனன் 'இந்தியாவின் அதிகார மாற்றம்' என்ற நூலையும் பார்க்க (கல்கத்தா, 1957) பக்.442 - 58.
20. காங். காரியக்கமிட்டி, LXXI, பக் 388
21. மேற்படி நூல் LXXVIII, பக் 397 - 9; முன்சொன்ன மேனன் பக்.222; நேரு தொகுப்பு நூல்கள் XIV, பக்கங்கள் 143, 162, 187, 417; சீதாராமையா II, 634-5.
22. 1942 - 7 அதிகார மாற்றம் I பக்கங்கள் 528, 530-1 பார்க்க: நேரு ''இந்தியாவைக் கண்டுபிடிப்பது'' (லண்டன், 1959) 468; பிரசாத்: 'இந்தியா பிரிந்தது; பக்.152.
23. ஜி.டி.பிர்லா, பாபு: ஒரு வித்தியாசமான பிணைப்பு, III (பம்பாய், 1977) பக்.144
24. ஆர்.ஜே.மூர்: 1939 - 1945 சர்ச்சில், கிரிப்ஸ், இந்தியா (ஆக்ஸ்போர்டு, 1979) பக் 11 - 2; பார்க்க: தாகூர் தாசுக்கு பிர்லா 18, டிச.1940 பி.டி. பக்கங்கள், கோப்பு எண் 117 (நேரு நினைவு நூலகம்).
25. முன்சொன்ன பிர்லா நூல் III பக். 316, 319.
26. நேரு தொகுப்பு நூல் XIV பக்.142.
27. மேற்படி நூல் பக்.187, 222, 300, 314.
28. 'அதிகார மாற்றம்' VI, பக்.1134-5
29. பார்க்க: காங்.கா.கமிட்டி, LXXXVI பக்.487; 47, ''அதிகார மாற்றம்'' VIII பக்.313.
30. 'அதிகார மாற்றம்' VII பக்.855.
31. நேரு தொகுப்பு நூல் XV பக் 237, 242-5.
32. 'அதிகார மாற்றம்' VII பக்.437; பெண்டிரல் மூர் தொகுத்த 'வேவல் வைசராயின் பத்திரிக்கை' (டெல்லி, 1977) பக்.258.
33. 'அதிகார மாற்றம்' VIII பக்.311, 324; நேரு தொகுப்பு நூல் இரண்டாவது தொடர், I, 40 பக்.7.
34. முன்சொன்ன சீத்தாராமையா II, பக்.634-5; முன்சொன்ன மேனன் 162; 'பாகிஸ்தானுக்கான பாதை' சி.காலிகுஸ்மான் (லாகூர், 1961) பக்.313-6.
35. 'இந்திய ஆண்டுப் பதிவு' 1944 II பக்.180-1; காங்.கா.கமிட்டி LXXVIII பக்.84-5, 89.
36. மேற்படி நூல் பக். 126-7, 140, 268.
37. 'அதிகார மாற்றம்' V பக்.29, 30, 309-10.
38. பி.சி.ஜோசி. 'அதிகாரத்துக்கான கடைசி முயற்சி' (பம்பாய்) பக்.10-11 (இந்த வெளியீடு 1945 இறுதியிலோ 1946 ஆரம்பத்திலோ வெளிவந்தது).
39. காங்.கா.கமிட்டி LXXVIII பக்.400
40. பிர்லா, பாபு IV பக் 333.

படிப்பகம்

www.padippakam.com

# இதுதான் தி.மு.க. ஜனநாயகம்!

மிகுந்த ஜனநாயக அமைப்பு என்றும், உன்னத தேர்தல் முறை உள்ள கட்சி என்றும் தி.மு.க. தன்னை பீற்றிக் கொள்கிறது! ஆனால் அதன் உண்மை சொரூபத்தை சாதாரண கீழ்மட்ட தேர்தல் முறையிலேயே உணர்ந்து கொள்ள முடியும்.

கோவையில் 52வது டிவிசன் (பொன்னையராஜபுரம்) தி.மு.க.வில் பொறுப்பில் உள்ளவர்கள் பெரும்பாலோர் பணக்காரர்கள். சென்ற முறை 86-ம் வருடத் தேர்தல் போலவே இம்முறை 91-ம் வருடத்திலும் ஜனநாயக விரோதமாக தேர்தல் நடந்தது. இம்முறை சார்பு மன்றங்களுக்கு, இளைஞர் அணியினருக்கு அழைப்பு கொடுக்கவில்லை. உறுப்பினர்களும் பெரும்பாலோர் கலந்து கொள்ளவில்லை. 15 பேர் செயற்குழு கூட்டத்திற்கே வரவில்லை. ஆனால் பொறுப்பாளர்கள் - உள்ளூர் தலைமைகள் தேர்வு செய்யப்பட்டுவிட்டார்கள்! சுயநலம், சொந்த தொழில் லாபம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டவர்கள், கட்சியின் எந்தப் போராட்டத்திலும் கலந்து கொள்ளாதவர்கள், கட்சிக் கூட்டங்களுக்கே முறையாக வராதவர்கள்தான் இப்போது 'தேர்வு' செய்யப்பட்டவர்கள். மாறாக போராட்டங்களில் கலந்து கொண்ட செயல் வீரர்கள், ஊக்கமான அணிகள், இளைஞர்கள், தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவர்கள் என்பதாலும் ஏழைகள் என்பதாலும் ஓரங்கட்டுப்பட்டு விட்டார்கள். 56-வது டிவிசனிலும் இதே நிலைமை தான்.

ஆனால் பண்ணையார் தி.மு.க.; கட்டைப் பஞ்சாயத்துக்காரர்களின் தி.மு.க. என்றெல்லாம் உள்ளுக்குள்ளேயே குமுறிக் கொண்டும் திட்டிக் கொண்டும் இருக்கும் அக்கட்சியின் செயல்வீரர்கள், தலைவர் கலைஞருக்கு இவையெல்லாம் தெரியாது என்றும் தெரிந்தால் பிரச்சினையை தீர்த்து வைப்பார் என்றும் அப்பாவிகளாக நம்பிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நம்பிக்கையை பலமாக வைத்துதான் கருணாநிதியும் 'பிழைத்துக்' கொண்டிருக்கிறார் என்பதை இவர்கள் உணர வெகு நாட்களாகாது.

— தகவல்: ம.க.இ.க., கோவை

# போலிகளின் ரௌடித்தனம்!

போலிக் கம்யூனிஸ்ட் கட்சிகளில் ஒன்றான சி.பி.எம். எனப்படும் 'மார்க்சிஸ்ட்' கட்சியின் தமிழ் மாநில மாநாடு தஞ்சையில் டிசம்பர் 4 முதல் 7-ம் தேதி வரை நடைபெற்றது. இம் மாநாட்டை ஒட்டி சி.பி.எம்.மின் திருத்தல்வாதக் கொள்கைகளையும், சந்தர்ப்பவாதத்தையும் கேள்விக்குள்ளாக்கி, **இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தோழர்களின் சிந்தனைக்கு சில கேள்விகள்''** என்கிற பிரசுரம் அச்சிட்டு மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் சார்பில் விநியோகிக்கப் பட்டது.

மாநாட்டின் இறுதி நாளன்று நடைபெற்ற ஊர்வலத்தில் தோழர்கள் பிரசுரத்தை விநியோகித்தனர். அதைப் பார்த்த 'மார்க்சிஸ்டு' குண்டர்கள் அவர்களிடம் வந்து ''யார் பிரசுரம் கொடுத்தார்கள்? அடையாளம் காட்டுங்கள்'' என்று நம்மைத் தாக்குவதற்கு தேடினார்கள்.

அதன் பிறகு, தஞ்சை பூக்காரத் தெருவைச் சேர்ந்த காஜா என்பவன், ''எங்களைக் கேள்வி கேட்க நீ யார்? அதுவும் எங்கள் மாநாட்டில்!'' என்று கேட்டு பிரசுரம் விநியோகித்த தோழரைத் தாக்கினான். எழுதக் கூசும் ஆபாச வசை மொழிகளால் திட்டினான். கட்சித் தலைமையினர் இதை வேடிக்கை பார்த்தனரே தவிர தடுக்கவோ, கீழ்தரமான இச் செய்கைக்கு வருத்தப்படவோ இல்லை. இவன் மார்க்சிஸ்ட் கட்சி இளைஞர் அமைப்பின் (DYFI) நகரப் பொருளாளர். பூச்சந்தையில் அடாவடி தண்டல் வசூலிக்கும் ரௌடி. இப்படிப்பட்ட கழிசடைகள்தான் இன்று கட்சியின் தூண்களாக உள்ளனர்.

ரௌடிகளையே கட்சி அணிகளாகவும், ரௌடித் தனத்தையே அரசியலாகவும் கொண்டு தமது சித்தாந்த ஓட்டாண்டித் தனத்தை 'மார்க்சிஸ்டு'கள் மூடி மறைக்க கிளம்பியிருக்கிறார்கள். நல்ல முன்னேற்றம் தான்!

**தகவல்: ம.க.இ.க; தஞ்சை.**

# வேதாரண்யத்தில் சாதிவெறியர்கள்! தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் பாதிப்பு!

வேதாரண்யம் தாலுக்காவில் ஜாதி இந்துக்கள், தாழ்த்தப்பட்டவர்களை தரக்குறைவாகவும், கேவலமாகவும் நடத்துவது என்பது அன்றாடம் நடந்து வரும் கொடுமை. தாழ்த்தப்பட்ட மக்கள் இன்றளவும் 10 வயது மேல் சாதி சிறுவனைக் கூட அய்யா என்றும் அய்யாவீட்டுத் தம்பி என்றும்தான் கூப்பிட வேண்டும். இத்தகைய கொடுமைக்கு எதிராக கரியாப்பட்டினத்தைச் சேர்ந்த 20 தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் இணைந்து அம்பேத்கார் நற்பணி மன்றம் என்ற அமைப்பை தொடங்கி செயல்பட்டார்கள். தீபாவளியன்று தாங்களும் இந்துக்களுக்குச் சமமானவர்கள் என்பதைக் காட்டுவதற்காக ஒரே நிறத்தில் சட்டை தைத்து போட்டு விழா கொண்டாடினார்கள். இது போன்ற செயலை பொறுக்கமாட்டாத மேல் சாதி வெறியர்கள், தாழ்த்தப்பட்ட இளைஞர்களின் உணர்வை முளையிலேயே கிள்ள திட்டமிட்டு தாக்குதல் தொடுத்தனர்.

வி.பால்ராஜ் என்ற தாழ்த்தப்பட்ட இளைஞர் வயலுக்குச் சென்றுவிட்டு வந்த போது அவரை மேல்சாதியைச் சேர்ந்த ஆறுமுகம், சேகர் உட்பட 25 பேர் கொண்ட கும்பல் கடுமையாக அடித்துக் காயப்படுத்தியது. மேலும் 17.11.91 அன்று மேகவண்ணன் என்ற தாழ்த்தப்பட்ட இளைஞரையும் கடைக்குச் சென்ற போது அடித்தனர். இதையறிந்து வெகுண்டெழுந்த தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் சிலர் சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்தனர். ஆனால் அங்கு மேல்சாதிக்காரர்கள் கும்பலாக காத்திருந்து மேகவண்ணனை காப்பாற்ற வந்த இளைஞர்களையும் தாக்கினர்.

பாதிக்கப்பட்ட இளைஞர்கள் 12 பேர் அன்று இரவே கரியாப்பட்டினம் போலீசு நிலையத்தில் புகார் மனு கொடுத்தனர். சப்-இன்ஸ்பெக்டர் கலியமூர்த்தி மனுவை வாங்க மறுத்ததோடு தரக்குறைவாக திட்டி சட்ட விரோதமாக கைது செய்து உள்ளே வைத்து பல பொய்வழக்குகள் போட்டு 19.11.91 மாலை திருத்துறைப்பூண்டி கோர்ட்டில் ஆஜர்படுத்தினார். இளைஞர்கள் 12 பேரில் 2 பேருக்கு வெளிக்காயங்கள் கடுமையாக இருந்தும் போலீசு சிகிச்சை அளிக்காததால் அவர்களே தனியாக அருகிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டனர்.

ஆலிவலம் போலீசு நிலையத்தில் எஸ்.ஐ. ஆக இருந்த கலியமூர்த்தி, கள்ளச் சாராய மாமூலாலும், தில்லுமுல்லுகளாலும் செய்து வந்த அட்டகாசத்திற்கு எதிராக அவ்வூர் மக்கள் நடத்திய போராட்டத்தால் கரியாபட்டினத்திற்கு மாற்றலாகி வந்தவர். இங்கும் சிறிய வழக்கு விவகாரங்களில் லஞ்சம் வாங்காமல் விடுவதில்லை.

இந்த எஸ்.ஐ.க்கு எல்லா விசயத்திலும் வலதுகரமாக இருப்பவர் அ.தி.மு.க. இளைஞர் அணி ஒன்றியச் செயலர் ரவி என்பவர் தான். சாதிவெறி பிடித்து தாழ்த்தப்பட்ட இளைஞர்களை தாக்கிய ஆறுமுகம், மதி, செல்வராஜ், ரெங்கராஜ், சேகர் முதலானவர்கள் ரவியின் உறவினர்கள். ரவியின் தூண்டுதல் பேரிலேயே எஸ்.ஐ. தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் மீது பொய் வழக்குப் போட்டு உள்ளே தள்ளினார்.

சாதி வெறியர்கள், ஓட்டுக் கட்சி, போலீசு கூட்டு சேர்ந்து தாழ்த்தப்பட்டவர் மீது தொடுக்கும் இத்தகையத் தாக்குதலை எதிர்கொள்ள தாழ்த்தப்பட்டவர்கள் சாதி அடிப்படையில்லாமல் வர்க்க அடிப்படையில் ஒன்று திரள்வதும் போராடுவதும் இன்றைய அவசர அவசியக் கடமையாக உள்ளது.

— **புதிய ஜனநாயக வாசகர் வட்டம்**
**வேதாரண்யம்**

www.padippakam.com



பெரிய தொட்டிக்கட்டி அதில் சிலையை இட்டு 5000 லிட்டர் பாலை ஊற்றி மூழ்கடிப்பதற்கு பெயர் 'க்ஸீராதி வாசம்'! ஒன்றும் புரியவில்லையா? புரியாது; அது 'தெய்வ பாஷை'; புரியவும் கூடாது. பக்தி பரவசத்தில், பிரமிப்பில் 5000 லிட்டர் பாலை பற்றி சற்றும் சிந்தித்து விடக்கூடாது; 'ஆஞ்சினேயா... ஆஞ்சினேயா' என கன்னத்தில்தான் போட்டுக் கொள்ளவேண்டும் என்பதன் சூசக மந்திரம்தான் 'க்ஸீராதி வாசம்'!

சிறீ மாருதி பக்த சமாஜ சங்கம், சென்னை நங்கநல்லூரில் அனுமார் கோயில் ஒன்றை கட்டியுள்ளது. இக்கோயிலுக்காக 3 வருட காலமாக ஒரே கல்லில் 32 அடி உயரமும், 90 டன் எடையும் உள்ள அனுமார் சிலையொன்று உருவாக்கப்பட்டது. இதை இந்து மத சாஸ்திரப்படி சில சடங்குகளை செய்வித்து 'தெய்வாதீனம்' பெறச் செய்தார்கள். அதாவது 'தீட்டு' கழித்தார்கள். அதில் ஒன்றுதான் 5000 லிட்டர் பாலிலே சிலையை குளிப்பாட்டிய சடங்கான 'க்ஸீராதி வாசம்'!

இதோ மண்ணெண்ணெய்க்காகவும், பாலுக்காகவும் ரேசன் கடையிலும் பால் பூத்திலும் மணிக்கணக்கில் காத்துக் கிடக்கும் 'மந்தை'களாக மக்கள். வெயில், மழையில் காத்திருந்தாலும் பொருள் கிடைக்கும் என்பதற்கு உத்திரவாதமில்லை. பொருளின் அளவு, தரம் குறைந்தாலும் சரி கலப்படம் செய்திருந்தாலும் சரி திட்டிக் கொண்டாவது வாங்கித்தான் ஆகவேண்டும். வேறு வழியில்லை. வெளிச்சந்தையில் வாங்கினால் மாத பட்ஜெட்டில் உதைக்கும்; கால்வயிறு, அரைவயிறு பட்டினிக்கும் பிரச்சினை வந்துவிடும். அதனால் முண்டியடித்தாவது, மயிர்ச்சண்டையிட்டாவது பொருளை வாங்கிவிட வேண்டும்! வரிசையில் பிந்திவிடாமல் எச்சரிக்கையாய் இருக்க சிறார்களும் பழகிக்கொள்ள வேண்டும். பொருள் தட்டுப்பாடு காலத்திலோ இந்நிலைமை பல மடங்கு விசுவரூபமெடுக்கும்!

மக்களுக்கு இல்லாவிட்டாலும் பரவாயில்லை; 'மகேசனுக்கு' குறைவிருக்கக் கூடாது என்ற மந்திரத்தை மக்கள் மனதிலே ஓதிவிட்டார்கள்! அதன் தைரியத்தில்தான் ஆட்சியாளர்கள் ஆயிரக்கணக்கான லிட்டர் பால் விரயமாவதை தடுக்காமல் மக்களிடம் தட்டுப்பாடு பஜனை பாடுகிறார்கள்; விலையையும் உயர்த்திக்கொண்டே போகிறார்கள். ஆவின் பால் மற்றும் ரேசன் அரிசி விலையை அண்மையில் ஒரு ரூபாய் கூட்டியுள்ளது பார்ப்பன - பாசிச 'ஜெ' அரசு! அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாட்டிற்கும் விலையேற்றத்திற்கும் மத்திய மாநில அரசுகள் மாறி மாறி கைகாட்டுவதே வழமையாகிவிட்டது. ஒருபுறம் பொருளின் விரயம் மறுபுறம் தட்டுப்பாடு, விலையேற்றம். இந்நிலைமையை மாற்ற வேண்டாமா?



# இதுதான் இன்றைய இந்தியா